# திரிபுர சுந்தரி



இராச. வேதாந்தம்

# திரிபுர சுந்தரி

பொறிஞர் இராச.வேதாந்தம்

மின்வாரியத்
தமிழார்வலர் தமிழ்ப்பணி அறக்கட்டளை,
கடலூர் -607 001.

# நூலைப்பற்றி

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | **திரிபுர சுந்தரி** |
| ஆக்கியோன் | : | பொறிஞர் **இராச. வேதாந்தம்** |
| பதிப்பு | : | முதற் பதிப்பு : 15.05.2025 |
| பதிப்பாளர் | : | **சா.வேல்முருகன்.**<br>14, துரைசாமி நகர்,<br>கடலூர்- 607 001.<br>தொ.பே எண்: 94443 54945. |
| உரிமை | : | அங்கயற்கண்ணி, ஆசிரியரின் பெண். |
| பக்கம் | : | 155 |
| தாள் | : | மேப்லித்தோ. |
| விலை | : | உருபா - 100.00 |
| அச்சமைப்பு | : | **பா.இளந்திரையன்,**<br>திரையன் கணினியகம்.<br>கடலூர்- 607 001. 94439 60355. |
| அட்டைப்படம் | : | ஓவியக் கவிஞர் **இரமேசு.** கடலூர்- 607 001. |
| அச்சிட்டோர் | : | **சபாநாயகம் அச்சகம்,**<br>176, கிழக்கு இரத வீதி,<br>சிதம்பரம் - 608 001.<br>04144 - 223040, 73733 33162.<br>sabanayagamprinters@gmail.com. |



பொறிஞர் **இராச. வேதாந்தம்**



# பதிப்புரை

இந்நூலாசிரியர் **இராச.வேதாந்தம்**, அவர் தானிருந்த 75 (26-9-1938 -30-8-2013) ஆண்டுகள்வரை எளியர்; எல்லார்க்கும் இனியர்; தமிழ்ப் பற்றாளர்; பகுத்தறிவாளர்; மின் பொறியாளர்; சிறந்த நூலாசிரியர். சிறந்த பகுத்தறிவாளர் என்பதற்கு, அவர் 2008 ஆம் ஆண்டில் எழுதிய **"நாமார்க்கும் குடியல்லோம்"** என்ற நூலே சான்று.

பொறியியலில் பட்டம் பெற்ற இந்நூலாசிரியர், தமிழ்நாட்டு மின்சார வாரியத்தில் 36 ஆண்டுகள் நிறைவாகப் பணியாற்றித் தலைமைப் பொறியாளராக ஓய்வு பெற்றவர்.

இளமைப் பருவத்தில் இருந்தே, சங்கத் தமிழ் நூல்களைப் படிப்பதில் மிகவும் ஈடுபாடு கொண்டவர். அந்நூல்களில் கண்ட வரலாற்று நிகழ்வுகளை உள்வாங்கி, ஆறு வரலாற்றுப் புதினங்களை 2004 முதல் 2009 வரை ஆண்டிற்கு ஒன்றாக படைத்திருந்தார்.

**"திரிபுர சுந்தரி"** என்னும் இந்நூல் அவரின் படைப்புக்களின் மிகவும் வேறானது. 2010 ஆம் ஆண்டிலேயே வெளிவந்திருக்க வேண்டிய இந்நூல் அவரின் உடல்நிலை காரணமாக, அவரிருந்த காலத்திலேயே வர முடியாது போயிற்று. மிகுந்த இடர்ப்பாடுகட்கு இடையேதாம், இந்நூற்கான கோப்புக்களைத் தேடிக் கண்டு இப்போதே வெளியிட இயன்றது.

இந்நூல் செப்பமாக வெளிவரப் பெரிதும் உதவிய கோவை வழக்குரைஞர் **கோ. மன்றவாணன்** அவர்க்கு மிக்க நன்றி.

**பொறிஞர் சா.வேல்முருகன்.**
14, துரைசாமி நகர்,
கடலூர்- 607 001.
தொ.பே எண்: 94443 54945.

# நெஞ்சத்துள் நிற்பாய் நிலைத்து!

உருவமோ பார்க்கக் குள்ளம்
　　உடனுற ஈர்க்கும் உள்ளம்
பொருளமை பேச்சோ வெள்ளம்
　　பொருந்திடா உறவில் கள்ளம்
அருளூறை நறவின் வள்ளம்
　　ஆழ்ந்திட அன்பின் பள்ளம்
பெருமலை பொறுமைக் கெல்லை
　　பெருமைக்கிங் களவோ இல்லை.

வாடிடு பயிரைக் கண்டா
　　வான்மழை பொழியும் நீரைக்
கூடிடு பயனைக் கொண்டா
　　கொள்ளுவர் நட்பை உண்டா
கோடையின் மழையாம் அன்பர்
　　கூடுவோர்க் குதவும் பண்பர்
நாடிட எளியர் நண்பர்
　　நல்லவர் **வேதாந் தம்**மே.

எல்லாம் எனக்கென் றிருப்பார் இடையிலொரு
நல்லார்**வே தாந்தம்** நனிச்சிறந்தார் - பொல்லாரும்
போற்றிப் புகழும் பொறுமைத் திறமுடையார்
ஏற்றித் தமிழ்படைத்தார் ஈங்கு.

எல்லார்க்கும் என்றும் இனியராய் இங்கிருத்தல்
வல்லார்க்கும் வாழ்வில் வரலரிதே - சொல்லார்வ
வேதாந்தம் யார்க்கும் விளைபயிராய்த் தான்வளைந்து
போதார் மரமானார் பூத்து.

ஆன்றவிந்த சான்றோர் அறைந்த இலக்கியங்கள்
சான்று பகரச் சமைத்த வரலாற்று
நூற்கள் இவர்க்கமைந்த நுண்மாண் நுழைபுலத்தைச்
சாற்றுவ என்றும் தனித்து.

ஆழ்ந்தகன்ற சங்க அருநூற் பெருங்கடலுள்
மூழ்கி எடுத்தளித்த முத்துக்கள் - காழ்கொண்ட
வைரமென மின்னி வருநாள் இறுதிவரை
எய்திடுமே ஏற்றம் இனிது.

நாத்திகமே நல்ல நெறியென்ற நன்னோக்கைப
பாத்திறத்தால் யாத்துப் படைத்துள்ளாய் - காத்தப
படைப்பை விரைவில் பதிப்பித்து நூலாய்
விடுப்பதே இன்றெம் விருப்பு.

இன்றெம்மோ டில்லைநீ என்றாலும் உன்னினைவு
என்றும் மனத்திருந் தேகாதே - கன்றொன்று
தன்தாய்ப் பசுவைத் தவறவிட் டேங்கலென
நன்றேதுங் காணேம் நலிந்து.

இன்றொடு பன்னி ரண்டாண்(டு)
ஏகினென் மறந்தார் யாரே
வென்றனை உயர்ந்தோர் நெஞ்சை
வேனிலின் மழையுங் கெஞ்ச
நன்றிலா எண்ணம் இல்லாய்
நவையெனக் கண்டார் இல்லை
என்றுமுன் தொடர்பே இன்றும்
இன்றமிழ் என்ன ஒன்றும்!

புலவர்-பொறிஞர் **சி.செந்தமிழ்ச்சேய்,**
25/49, துரைசாமி நகர்,
கடலூர் - 607001.

# நம் மனமும் மிதந்து செல்கிறது...

படிக்கப் படிக்க ஏறிக்கொண்டே போகும் விறுவிறுப்பு. அடுத்து என்ன? அடுத்து என்ன? என நம் மனத்தைத் துடிதுடிக்க வைக்கும் கதைப்போக்கு. எதிர்பாராத திருப்பங்கள். திகைக்க வைக்கும் மர்ம முடிச்சுகள். காதலுக்கும் பஞ்சமில்லை. இறுதிவரை ஊகிக்க முடியாத முடிவு ஆகியவை இந்தத் துப்பறியும் புதினத்தின் சிறப்புக்கள்.

எந்த முன்முடிவும் இல்லாமல் இந்தப் புதினத்தைப் படித்தால்தான் இதன் சுவையை நீங்கள் முழுவதும் துய்க்க முடியும். இதன் விறுவிறுப்பையும் பரபரப்பையும் நீங்கள் உணர முடியும். அதனால் இந்தப் புதினத்தின் கதை நடப்புக் குறித்து எதையும் நான் குறிப்பிட விரும்பவில்லை. இருப்பினும் புதினத்தின் நாயகியான திரிபுரசுந்தரியின் பாத்திரப் படைப்பு மிகச்சிறப்பு!

இதன் கதை ஓட்டத்தில் நம் மனமும் மிதந்து செல்கிறது.

இந்த நூலைப் படிக்கத் தொடங்குங்கள். அதுவே நூல் முழுவதையும் படிக்க வைத்துவிடும்.

தமிழ்நாட்டின் மின்துறையில் மிகப்பெரும் உயர் அலுவலராக இருந்த இராச. வேதாந்தம் அவர்கள் எழுதிய புதினம் இது. படைப்பாளுமை மிகுந்த இவர், தமிழ்த்துறையில் இருந்திருந்தால் எத்தனை எத்தனையோ இலக்கியச் செல்வங்களை நமக்குத் ஈந்திருப்பார். இருந்தாலும் இவருடைய படைப்புக்கள் யாவும் இலக்கியத்தின் மணிமுடிகளாகவே விளங்குகின்றன. அவர் எழுதிய சமூகப் புதினம்தான் இந்தத் திரிபுர சுந்தரி,

இதைத் தொலைக்காட்சி நெடுந்தொடராக யாரேனும் படைத்தால், பெரும் வரவேற்பைப் பெறும்.

**கோ. மன்றவாணன்,**
வழக்குரைஞர்,
கோவை.

# கதை மாந்தர்

திரிபுர சுந்தரி : காவற்றுறை ஆய்வாளர்

கனக வேல், பொன்னுவேல், தங்க வேல். } வேல் சகோதர்கள்

வேலம்மாள் : வேல் சகோதர்களின் தாயார்

அஞ்சனா : கனகவேலின் பெண்

கண்ணப்பன் : அத்தையின் கணவர்

வேல்விழியாள் : அத்தை

சாரதா : அத்தையின் மகள்

காஞ்சனா : நாடக நடிகை

நாராயண ராவ் : சமையற்காரன்

மஞ்சுகுட்டி : சமையற்காரனின் மனைவி

மரகதவல்லி : கனகவேலின் மனைவி (இறந்தவர்)

தியாகராசன் : மேலாளர்

ஷெர்லி : செவிலி

வின்செண்ட் : மருத்துவர் (பொது)

வித்யாசாகர் : மருத்துவர்(மனோத்துவம்)

மீனாட்சி : மரகதத்தின் தோழி

வெள்ளியங்கிரி : விடுதிப் பொறுப்பாளர்

அருணகிரி : கனகவேலின் மாமனார்

வேதவல்லி : கனகவேலின் மாமியார்.

# 1. திரிபுர சுந்தரி

வீட்டின் முன்னால் சர்ர்ர் என்று வந்து நின்றது ஒரு ஜீப். பிள்ளைகள் இருவரும் வெளியே வேலைக்குப் போய் விட்டார்கள்; சற்று ஓய்வெடுக்கலாம் என்று வெளிக்கதவைச் சாத்தச் சென்ற வேலம்மையார், கதவைச் சாத்தாமல் வந்து வண்டியைப் பார்த்தார். வண்டியில் "காவல்" என்று எழுதியிருந்தது.

'காவல்துறை வண்டி நம் வீட்டின் முன்னால் ஏன் நிற்கிறது?' என்று நினைத்துக் கொண்டிருக்கும் போதே, ஜீப்பின் முன்ஆசனத்தில் அமர்ந்திருந்த ஒரு பெண் காவலர் அதிலிருந்து இறங்கி, வேலம்மையாரை நோக்கி வந்தார்.

*******

நெய்வேலி நிலக்கரி சுரங்கத்தின் கிழக்கு எல்லையில் பண்ணுருட்டி - கும்பகோணம் நெடுஞ்சாலையில் அந்தக் காகித ஆலை அமைந்திருத்தது. அதன் உரிமையாளர் கனகவேல்.

வேல் குடும்பத்தைக் கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் அறியாதார் யாரும் இருக்க மாட்டார்கள். தந்தை இல்லாத அந்தக் குடும்பத்தின் மூத்தவர்; இரண்டு தம்பிகள் இருந்தாலும் அந்தக் காகிதச் ஆலையின் முழு உரிமையாளர் கனகவேல் மட்டுந்தான்.

தங்கவேல், பொன்னுவேல் என்ற தம்பிகள் இருவரும் மந்தாரக்குப்பத்தில் இருக்கும் சற்றுப் புதுப்பிக்கப்பட்ட பூர்வீக வீட்டில் தாயோடு வசித்து வரக் கனகவேல் மட்டும் தனியாக ஆலையின் அருகிலேயே, தனக்கெனப் பெரிய வீடு கட்டிக் கொண்டு நல்ல நிலையில் இருந்து வந்தான்.

ஆலையின் வளாகத்திலேயே சொகுசு விருந்தினர் விடுதி ஒன்று இருந்தது. அதில் பெரிய அதிகாரிகள் மாற்றலாகி

வரும்போது அப்போதைக்குத் தங்க இடங்கொடுப்பான். கனகவேலும் மனக் குழப்பமாய் இருக்கும்போது அங்குத் தங்கிக் கொள்வான்.

*******

“அம்மா! நல்லா இருக்கீங்களா? என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்? எனனைத் தெரியவில்லை? சீருடையில் இருப்பதால் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லையா? நான்தானம்மா திரிபுர சுந்தரி! நன்றாகப் பாருங்கள்; பத்து ஆண்டுகட்கு முன், உங்களைச் சுற்றிச் சுற்றி வருவேனே?”

“அடடே! திரிபுரசுந்தரியா நீ? எப்படி மாறிவிட்டாய்? அதுவும் காவலர் உடையில்! அடையாளமே தெரியவில்லை.”

“உங்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தத்தான், காவலர் உடையில் வந்தேன். கனக்கு, தங்கம், பொன்னு எல்லாம் எப்படி இருக்கிறார்கள்?”

ஆனால், அவளுடைய கண்கள் வீட்டினுள் சுற்றி வந்தன. அந்தத் தாய், அவள் யாரைத் தேடுகிறாள் என்பதை நன்கு அறிவாள். பத்து ஆண்டுகட்கு முன் அவள் தன்னைச் சுற்றிச் சுற்றி வந்ததாய்ச் சொன்னது மட்டும் பொய்.

“சுந்தரி, நீ தேடுகின்ற ஆள் இங்கில்லை!”

“அம்மா! நான், நான் யாரைத் தேடுகிறேன்? உங்களைத்தான் பார்க்க வந்தேன், அம்மா. அவ்வளவுதான்... ஆமாம்.”

“சரி, சரி; எப்போது இவ்வூருக்கு வந்தாய்? எங்கே தங்கி இருக்கிறாய்?”

“இன்று காலையில்தான் வந்து பணியில் சேர்ந்தேன். உங்கள் ஆலையின் விருந்தினர் விடுதியில்தான் தங்கப் போகிறேன். இதோ, சாவி! உங்களைப் பார்க்காமல் போனால், நான் அன்னியமாகிவிட மாட்டேனா? சிறு வயது பழக்கத்தை அவ்வளவு எளிதில் மறந்திட முடியுமா, அம்மா?”

“நீ என்னை மட்டும் பார்க்க வந்திருந்தால், எனக்கு மகிழ்ச்சியே. ஆனால், கனகவேலைப் பார்க்க வந்திருந்தால், நான்தான் முன்பே சொன்னேனே; அவன் இங்கு இல்லை.”

வேலம்மையின் நேரடிப் பேச்சுத் திரிபுர சுந்தரியை நாணம் கொள்ளச் செய்தது. கேட்டாள்:

“எப்போது வருவான்? ம்ம்.. வருவார்?”

“அவன் உன் நண்பன்! வருவான் என்று நீ சொன்னால். நான் தவறாக எடுத்துக்கொள்ள மாட்டேன். சரி; நீ ஆய்வாளர் தானே? எல்லாம் விசாரிக்காமலா வந்திருப்பாய்? அதிலும் அவன் விருந்தினர் விடுதியில் தங்கப் போகிறாய்; விபரம் அறியாமலா வந்திருப்பாய்?”

“விசாரித்தேன் அம்மா; அவன் பெரிய தொழிலதிபர் ஆகிவிட்டான்! திருமணமாகி, ஏழு வயது பெண் குழந்தை இருக்கிறாள். மனைவி இறந்து ஓராண்டு ஆகிவிட்டது. உங்கள் குடும்பப் பொறுப்பை அவன்தான் ஏற்று நடத்துகிறான். இந்த இருபத்து எட்டு வயதில், ஊரறிந்த பெரியவன் ஆகிவிட்டான். எல்லாம் விசாரித்துக் கொண்டுதான் வந்திருக்கிறேன்.”

“ஃகூம்! ஒன்றைத் தவிர.”

“என்னம்மா அது? நான் எதை விசாரிக்கவில்லை?”

“கனகவேல் இங்கில்லை என்பதை நீ சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. பல ஆண்டுகட்கு முன்பே, அவன் தனியாய்ப் பிரிந்து சென்று வாழ்கிறான்! இப்போதும் தன் மகளுடன் தனியாகத்தான் வாழ்கிறான். ஆலைக்கு அருகில்தான் வீடு; நீ அவனை அங்குப் பார்க்கலாம்.”

“என்னம்னமா சொல்கிறீர்கள்? உங்கள் மேல் உயிராய் இருப்பாரே! உங்களைப் பிரிந்து எப்படி?”

“நீ விசாரித்த அத்தனையும் சரிதாம்; ஆனால், அவன் தனியாக இருக்கிறான் என்பதை எப்படித் தெரிந்து கொள்ளாமல் விட்டாய்? முக்கியமாக நீ அறிய வேண்டியது எங்கள் உறவில் எந்தப் பிரிவும் இல்லை. என் மேல் இன்னும்

இன்றும் அதே பாசத்துடன்தான் இருக்கிறான். மறு மணத்துக்குச் சம்மதிக்க மாட்டேன் என்கிறான். மனைவியின் மேல் உயிரையே வைத்திருந்தான். இப்போது மகள்மேல் உயிராய் இருக்கிறான். அது சரி; உனக்குத் திருமணமாகி விட்டதா? எத்தனை குழந்தைகள்? கணவர் என்ன செய்கிறார்?''

திரிபுரசுந்தரி கலகலவென்று சிரித்தாள்.

''அம்மா, எனக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. இருபத்தெட்டு வயது ஆகிவிட்டது. சரியம்மா; நான் போய் உங்கள் ஓய்வு மாளிகையில் தங்கிக் கொள்கிறேன். நேரம் வாய்க்கும் போதெல்லாம் வந்து சந்திக்கிறேன்.

''உம், இன்னொன்று! என்னடா இவள் வந்ததும் வராததுமாக இப்படிப் பேசுகிறாளே என்று தவறாக எண்ணமாட்டாய் என்று நம்புகிறேன். அம்மா, நீங்களும் கனக்கும் சம்மதித்தால் அவனை நான் திருமணம் செய்து கொள்கிறேன். உங்களுக்குத் தெரியாததா? பன்னிரண்டாவது படித்த அந்த வயதில் அவனை நான் மிகவும் விரும்பினேன். உங்கள் கணவர் இறந்து இவன் பொறுப்புக்களை ஏற்றபோது, என்னைச் சட்டை செய்யவில்லை. நாங்களும் மாற்றலாகிப்போய் இதோ, பத்து ஆண்டுகட்குப் பிறகு வந்திருக்கிறேன். இன்னும் அவனைப் பார்க்கவில்லை; நான் வந்திருக்கிறேன் என்றும் சொல்லி அனுப்பவில்லை. அவனுக்கு அதிர்ச்சியாக இருக்கட்டுமே என்றுதான் முன் கூட்டியே சொல்லவில்லை.''

''சுந்தரி! உங்கள் நட்பு உறுதியாகி, நீங்கள் திருமணம் செய்து கொண்டால், எனக்கும் மகிழ்ச்சிதான். ஆனாலும் அவனைப்பற்றிச் சொல்லிவிடுகிறேன். அவன் முன் போல் இல்லை, சுந்தரி! மனைவியின் இறப்பு அவனை மாற்றிவிட்டது. அவனைப்பற்றி நல்ல வார்த்தைகள் என் காதில் விழவில்லை. உன் நண்பன்தானே! நீயே முயன்று பார்.''

விடை பெற்றுக்கொண்டு திரிபுரசுந்தரி சென்று விட்டாள்.

# 2. பள்ளிப் பருவத்திலே!

ஓய்வு விடுதிக்கு வந்து இறங்கி உள்ளே நுழையப் போனவளுக்கு அங்கிருந்த பெண் காவலர் விறைப்பான வணக்கம் செலுத்திவிட்டு,

“அம்மா! எல்லாம் அணியமாக உள்ளன. விடுதிக் காப்பாளர் வேண்டியவற்றை எல்லாம் செய்து கொடுப்பார். நான் இரவு உங்களோடு தங்க வேண்டும் என்றாலும் இருக்கிறேன்,” என்றார்.

“வேண்டாம். நீ காலையில் ஜீப்போடு வந்தால் போதும்.”

பயண அலுப்புத் தீர வெந்நீரில் குளித்து முடித்துவிட்டு, இரவு உணவையும் முடித்துக்கொண்டு படுத்தவளுக்கு உறக்கம் வரவில்லை. பழைய நினைவுகள் வந்து விரிந்தன.

வடலூர் மேல்நிலைப் பள்ளியில் கனகவேலும் திரிபுர சுந்தரியும் ஆறாம் வகுப்பிலிருந்து பன்னிரண்டாம் வகுப்புவரை ஒன்றாகப் படித்தனர். கனகவேல் எப்போதும் பள்ளியியில் முதல் மாணவன்! எந்நேரமும் படிப்புப் படிப்புப் படிப்புத்தான். அவனுடைய தந்தை வசதியான விவசாயி. அவர் தன் பிள்ளைகட்கு ‘வேல்‘ என்ற அடைமொழியோடுதான் பெயர் சூட்டினார். அவருடைய தங்கை, மனைவி என்று எல்லாருக்குமே இந்த அடைமொழி அமைந்திருந்ததால், அவர் குடும்பத்தை ஊரிலுள்ளோர் ‘வேல்‘ குடும்பம் என்றே அழைப்பர்.

கனகவேல் படிப்பில் மட்டுமின்றி. விளையாட்டுப் போட்டிகளிலும் பள்ளியின் வாகையன். ஓவியம், கட்டுரைப் போட்டி என எல்லாவற்றிலும் அவன்தான் முதல்வன்.

திரிபுர சுந்தரியும் நன்கு படிப்பவள்தான்; ஆனால், கணக்கில் அவளால் முன்னேற முடியவில்லை.

கனகவேலின் எதிர் வீட்டில்தான் அவளுடைய குடும்பத்தினர் குடியிருந்தனர். அவளுடைய தந்தை வட்டாட்சியர்.

கனகவேலும் திரிபுரசுந்தரியும் ஒரே வகுப்பில் இருந்தாலும் எதிர் எதிர் வீட்டில் வசித்தாலும் பேசிக் கொள்ளும் வாய்ப்பே ஏற்படவில்லை. அவர்களுக்குள் பழக்கம் ஏற்பட்டதே ஒரு வேடிக்கையான நிகழ்ச்சிதான்.

கணக்குப் பாடத்தில் அவனிடம் சந்தேகம் கேட்கலாம் என்று அம்மாவிடம் அனுமதி வாங்கிக்கொண்டு எதிர் வீட்டிற்குச் சென்றாள். கனகவேல் தீவிரமாகப் படித்துக் கொண்டிருந்தான்.

“டேய் , எதிர் வீட்டுப்பிள்ளை வந்திருக்கிறாள்; என்னவென்று கேள்.”

தாய்சொல் மீறாத பிள்ளை அவளைப் பார்த்து, “என்ன வேண்டும்?” என்றான்.

“வந்து, கணக்கு...” தயங்கினாள்.

“கனக்கு என்று சொல்லாதே! என்பெயர் கனகவேல்; முழுப்பெயரையும் சொல்லிக் கூப்பிடு.”

“அதில்லை; கணக்குப் பா..?”

“என்னைக் கனக்கு என்று கூப்பிட்டால் எனக்குப் பிடிக்காது.”

“இல்லை, இல்லை; கணிதப் பாடத்தில் என்று சொல்ல வந்தேன். மன்னிச்சுக்கோ.”

கனகவேல் கடகடவென்று சிரித்துவிட்டான். அவன் ஏன் சிரிக்கிறான் என்று தெரிந்து கொண்டு, இவளும் சிரித்தாள்.

“சரி, சரி; நீ மட்டும் என்னைக் கனக்கு என்றே கூப்பிட்டுக் கொள். உன் பெயர் கூட நீளமாகத்தான் இருக்கிறது; நான் எப்படிச் சுருக்கிக் கூப்பிடுவது?”

“கமல் ஒரு படத்தில் ஊர்வசியைத் திருப்பு என்று கூப்பிடுவார்; நீயும் அதேபோலக் கூப்பிடலாமே.”

திரி-புர-சுந்தரி.... திரிபுரி என்று கூப்பிடுகிறேன்; சரியா?”

‘திரியாம்! புரியாம்! பேரைச் சுருக்குகிறானாம்? சரியான கிறுக்கன்! என்ன செய்வது? நான் அவனைத் தேடி வந்திருக்கிறேன்; ஒப்புக்கொள்ளாமல் வேறென்ன செய்வது? – என்று நினைத்துக்கொண்டே, “சரி” என்றாள்.

இது ஒன்பதாம் வகுப்புப் படிக்கும்போது நடந்த நிகழ்ச்சி. ஆனால், அன்று அவன் சொன்ன பெயர், பின்னர் இனித்தது,

மூன்றாண்டுகளில் அவள் மனம் அவன்பால் ஈர்க்கப்பட்டு விட்டது. அவளுக்கு விடை நன்கு தெரிந்திருந்தாலும் தினமும் அவனைச் சந்திக்க வேண்டும்; அவனிடம் பேச வேண்டும்! அதற்காகப் பாடங்கற்க வேண்டும் என்ற சாக்கில் பழக்கத்தைத் தொடர்ந்தாள். ஆனால், கனகவேல் தானுண்டு, தன் படிப்புண்டு என்றிருந்தான்.

அவனுடைய அம்மா திரிபுரியிடம் சொல்லுவாள்:

“கனகவேல், நிறைய படிக்க வேண்டும்; பெரிய நிலைக்கு வரவேண்டும் என்று தீவிரமாக இருக்கிறான். வேறெதிலும் அவன் தன் கவனத்தைச் சிதறவிடாமல் படிப்பில் மட்டும் மூழ்கியிருக்கிறான்.”

ஆனால், நேர்மாறாகத் திரிபுரி கனக்கின் கவனத்தைத் தன் மீது திருப்ப அவள் எடுத்த முயற்சிகள் விழலுக்கிறைத்த நீராய்ப் போனதால், மிகவும் மனம் வெதும்பிப் போனாள்.

ஒரு நாள் தடுக்கி விழுந்ததுபோல் சாய்ந்து, அவனை இறுகத் தழுவிக் கொண்டாள். ஆனால் அவனோ, “திரிபுரி, பார்த்து வரக் கூடாதா?” என்றபடி விலக்கி விட்டுவிட்டு, ஒன்றும் நடவாததுபோல் எந்த முகபாவமும் காட்டாமல் சென்றான். திரிபுரியால் ஏமாற்றப் பெருமூச்சுத்தான் விடமுடிந்தது. இப்படியும் ஒரு பையனா?

அவளுக்கு அவன்மேல் தோன்றியது வெறுப்பா? அன்றி மதிப்பா?

பன்னிரண்டாவது பொதுத்தேர்வுகள் நெருங்கிய போது கனகவேலின் வாழ்க்கையில் பேரிடி ஒன்று இறங்கியது. அவனுடைய தந்தை மாரடைப்பால் இறந்து போனார். அவர் தன் சொத்துக்களை மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் சரி சமமாகப் பிரித்து உயில் எழுதி வைத்து விட்டுத்தான் இறந்தார்.

குடும்பம் சோகத்தில் ஆழ்ந்தது. ஆயினும் கனகவேல் தன் படிப்பில் கவனம் செலுத்திப் பொதுத் தேர்வுகளை எழுதி முடித்தான்.

திரிபுரசுந்தரியின் தந்தை பதவி உயர்வு பெற்று மாற்றலாகிச் செல்லவேண்டி வந்ததால், ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தனர். அவள் கனகவேலிடம் விடைபெற்றுச் செல்ல அவன் வீட்டுக்கு வந்தாள்.

“அவன் மாடியில் இருக்கிறான்,” என்றார் வேலம்மையார்.

அவள் மேலே போனாள். கனகவேல் தன் வீட்டு மொட்டை மாடியில் சுவரில் சாய்ந்தபடி வானத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் அவன் அருகில் அமர்ந்தாள். அவன் அவளைக் கவனிக்கவில்லை. அவள் மெல்ல,“கனக்கு!” என்று அழைத்தாள். அவளைப் பார்த்தான். திரிபுரி சற்றும் எதிர்பாராத விதமாய், “ஓ!” என்று அவள் தோள்மீது தலை

சாய்த்துக் கதறினான். திகைத்துப் போனாள் திரிபுரி. தந்தை இறந்த நாளில் இருந்து அவன் அழுததைப் அவள் பார்த்ததே இல்லை. அவன் அழுததும் இல்லை.

“என் கனவெல்லாம் மடிந்து போயின! பெரிய படிப்புப் படிக்க வேண்டும்; செல்வமும் புகழும் பெற்றுப் பெரிய மனிதனாய் விளங்க வேண்டும்! இவற்றிற்கு இனி வாய்ப்பே இல்லை. திரிபுரி, என் வாழ்க்கை எப்படி மாறிவிட்டது பார்த்தாயா? என் மேல் அன்பு கொண்ட நீயும் இப்போது ஊரைவிட்டுப் போக இருக்கிறாய்!”

“கனக்கு! உன் படிப்புப் பாதியில் ஏன் நிற்க வேண்டும்?”

“அடுத்து என்ன செய்வது என்று முடிவெடுக்க வேண்டிய சூழ்நிலை உருவானபோது, பொறுப்புள்ள பெரிய பிள்ளையாய் மேற்கொண்டு படிக்கும் எண்ணத்தை விட்டுவிட்டேன். என் தாயையும் எட்டாவதும் ஆறாவதும் படிக்கும் தம்பிகளையும் உயர்நிலைக்குக் கொண்டு செல்லும் பொறுப்புக்காகவும் என் படிப்பை விட்டுவிடத்தான் வேண்டும். நான் ஏதாவது வேலை செய்து என் குடும்பத்தைக் காப்பேன்.”

“பள்ளிக்கும் நீ முதல்வன்: குடும்பத்துக்கும் நீயே முதல்வன், மூத்தவன். நிச்சயம் நீ வாழ்வில் வளர்வாய்; வெற்றி பெறுவாய். என்னை மறந்துவிடாதே, கனக்கு! போய் வருகிறேன்?

பழைய நினைவுகளில் ஆழ்ந்து அப்படியே தூங்கிப் போய் விட்டாள்.

# 3. பழைய நண்பர்கள்

சிற்றுண்டி அருந்திவிட்டுச் சீருடை அணிந்து புறப்பட அணியமான ஆய்வாளர் திரிபுர சுந்தரியிடம் ஒரு பெண் காவலர் வந்தார். விறைப்பு வணக்கம் செய்துவிட்டு,

"அம்மா! உங்களைப் பார்க்க ஆலை அதிபர் வரவேற்பறையில் காத்துக்கொண்டு இருக்கிறார்," என்றார்.

திரிபுர சுந்தரிக்கு இதயம் "பட்பட்" என்று அடித்துக் கொண்டது. பத்து ஆண்டுகள்! என்னை அடையாளம் கண்டு கொள்வானா? ஆச்சரிப் படுவானா?

வெளியே வந்தவளை வரவேற்கும் முறையில் கனகவேல் எழுந்து நின்று, "வணக்கம், ஐய்ய்,.," என்று தடுமாறினான்.

"அம்மா?" சிரித்துக்கொண்டே சொன்னாள்.

"தாங்கள் பெண் ஆய்வாளர் என்று யாரும் என்னிடம் சொல்லவில்லை; மன்னிக்கவும்."

"ஏன்? மாலதி சொல்லவில்லையா?"

கனகவேல் தன்னை ஊடுருவிப் பார்க்கின்றான் என்று உணர்ந்த திரிபுர சுந்தரி கேட்டாள்.

"பெண் அலுவலர் என்றால் இடம் தரக்கூடாது என்று ஏதாவது கணக்கு வைத்திருக்கிறீர்களோ?"

"என்ன? என்ன சொன்னீர்கள்?"

"கனக்கு - கனக்கு?"

"அடடே! திரிபுரி! நீயா? அடையாளம் கண்டுகொள்ளக் கூடாதென்றுதான் தொப்பியைக் கழட்டாமல் இருந்தாயா? எப்படி ஏமாந்து போனேன்!"

காவலர் மாலதி, இருவரையும் மாறி மாறிப் பார்த்தாள்.

"மாலதி! நாங்கள் இருவரும் இந்த ஊரில் ஆறாம் வகுப்பிலிருந்து பன்னிரண்டாம் வகுப்புவரை ஒன்றாகப் படித்தோம். இவர் பள்ளியிலேயே, ஏன் மாவட்டத்திலேயே முதல் மாணவர்! பன்னிரண்டாம் வகுப்புப் பொதுத் தேர்வின் போது, இவர் அப்பா இறந்துவிட்டார்; அந்தத் தாக்கம் மட்டும் நேராதிருந்தால், மாநிலத்திலேயே முதலாவதாக வந்திருப்பார்!"

"போதும் திரிபுரி. உன்னைத் திரிபுரி என்றே கூப்பிடலாம் அல்லவா? அதிகாரி ஆகிவிட்டாயே!"

"கனக்கு, உனக்கு நான் எப்போதுமே திரிபுரிதான்! எனக்கு நீ எப்போதுமே கனக்குதான்!"

"அந்த நாளில், நமக்குள் எப்படிக் கூப்பிட்டுக் கொள்வது என்று முடிவெடுத்தோமே; நினைவிருக்கிறதா?"

இருவரும் சிரித்தனர்.

"கனக்கு, இப்போது நான் பணிக்குப் போகிறேன். பத்து ஆண்டுக் கதையைப் பேச வேண்டும். நீ மாலை இங்கு வந்து விடுகிறாயா? இல்லை, நான் உன் வீட்டிற்கு வரட்டுமா? நீ இப்போது தனியாக இருக்கிறாயாமே? முதன்முதலில் உன் வீட்டிற்குத்தான் போனேன்; அம்மாவைப் பார்த்தேன்."

"வீட்டுக்கே வந்துவிடு; அங்கேயே சாப்பிட்டுக் கொள்ளலாம். பிறகு நீ இங்கே வந்துவிடலாம்."

"சரி; உன் பெண்ணையும் பார்த்தமாதிரி இருக்கும்."

அவள் காவல் வண்டியில் சென்றுவிட்டாள். கனகவேல் பழைய நினைவுகளில் ஆழ்ந்தான்.

# 4. கனகவேல் - திரிபுர சுந்தரி

அப்பா, அவனுக்குப் பாகமாகத் தந்தது, மூன்று இலட்சம் உரூபாய். சிந்தித்தான்! அதை வைத்துக்கொண்டு அவன் விரும்பிய பொறியியல் படிப்பை முடித்துவிடலாம்; வேலைக்கும் போய்விடலாம். ஆனால், அவனது ஆசையோ நிறைய படிக்க வேண்டும்; பெரிய தொழிலதிபராகப் பலருக்குத் தான் வேலை தரும் நிலைமையில் வாழவேண்டும். இப்போது அவை நிறைவேறா. இனிக் குடும்பத் தலைவனான பிறகு தன் ஆசைகளைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டியதுதான். வேறு வழி?

சரி; வாழ்க்கையை எப்படி நடத்துவது? வியாபாரம் அவனுக்குப் பிடிக்காது. விவசாயத்தில் அரிச்சுவடி தெரியாது. தொழில் தொடங்கலாம் என்றாலோ, எந்தத் தொழில்? குழம்பிப் போனான்! வயது வந்தவனாகக் கருதப்பட்டாலும் பள்ளிச் சிறுவன்தானே? எவரிடமும் பழகாதவன்; என்ன செய்வான்?

அந்த நேரத்தில், அடுத்த தெருவில் காகித அங்காடி வைத்திருந்தவர் அதை விற்றுவிடப் போகிறார் என்றறிந்து, அவரை நேரில் அணுகி விலை பேசி வாங்கிவிட்டான்.

கல்லூரி, பள்ளி மாணவர்கள் புழங்கும் இடம் அது. அதன் உரிமையாளர் கனகவேலின் தந்தையை நன்கு அறிந்தவராதலால், அவனுடைய அப்போதைய நிலைக்கு இரங்கி அவனுக்கே விற்றுவிட்டார்.

ஓர் ஆண்டிலேயே முன்னேற்றம் தெளிவானது. பெரிய கடையாக மாற்றினான். பத்தொன்பது முடிந்து இருபது வயதானபோது, தாயின் விருப்பத்திற்கு இணங்கித் திருமணமும்

செய்துகொண்டான். அப்போது, அருகிலேயே இருந்த அச்சகம் ஒன்று விலைக்கு வர, அதையும் வாங்கிவிட்டான்; சிறு முதலாளியும் ஆகிவிட்டான்.

தம்பிகள் பன்னிரண்டாவதும் பத்தாவதும் படித்துக் கொண்டிருக்கும் போதுதான் அவன் மனைவி ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். குடும்பம் மகிழ்ச்சியில் மூழ்கியது. 'வேல்மரபு பெயர்' போதும் என்று குழந்தைக்கு அஞ்சனா என்று பெயர் சூட்டினான்.

அஞ்சனா ஆறுமாதக் குழந்தையாக இருந்தபோது, தம்பிகளுக்குப் பொதுத்தேர்வு இன்னும் ஆறு மாதங்களில் நடக்க இருந்த நேரம் அது. பண்ணுருட்டி - கும்பகோணம் நெடுஞ்சாலையில் வடலூர் அருகே நெய்வேலி நகரக் கிழக்கு எல்லையில் அமைந்திருந்த காகித ஆலை ஒன்று விற்பனைக்கு என்று நாளேடுகளில் விளம்பரத்தைப் பார்த்தான்.

முயன்றால் வாங்கிவிடலாம். அந்த ஆலையின் முதலாளி, சென்னையிலிருந்து கொண்டு மேலாளர், பொறிஞர், கணக்கர் இவர்களை வைத்துக்கொண்டு ஆலையை நடத்தி வந்தார். இந்த மூவருக்குள் ஒற்றுமை இல்லை. ஏனோ தானோ என்று பணியாற்றினர். அதனால் தொழிலாளர் பிரச்சனைகள் எழுந்தன. எரியும் நெருப்பில் எண்ணெய் வார்த்தாற்போல், அந்தப் பகுதி மின்தடங்கலால் ஆலை செயல்பட முடியாமல் நலிவுற்றது. இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால், இந்தியாவிலேயே மிக உயர்வாய்ப் போற்றப்பட்ட சாமியார் ஒருவர், தன் சக்தியால் கங்கையிலிருந்து நீரை வரவழைத்து ஆலைக் கட்டடங்களிலும் எந்திரங்களின் மேலும் தெளித்துப் புனிதமாக்கித் துவக்கிவைத்தார் என்பதுதான்! கங்கை நீர், நம் கூவத்தைவிடக் கழிவுகளுக்கு வடிகாலாக விளங்கும் அழுக்கு நீர்தான் என்பதை அங்குள்ளோர் ஏனோ உணர மறுத்தனர்.

கனகவேல் சிந்தித்தான்! நலிந்த ஆலையை வாங்கி, எப்படி நிலைநிறுத்துவது? இது பெரிய தொழிற்சாலை

இல்லை; சிறிய முதலீட்டில் இயங்கும் காகித ஆலை. முதலில் முதலாளி, ஆலையின் அருகில் குடியிருக்க வேண்டும். அதனால் எந்தப் பிரச்சனையானாலும் உடனடியாகக் கவனித்துத் தீர்வுகாணும் நடவடிக்கைகளை எடுக்கலாம்; தொழிலாளர் பிரச்சனை என்று எதுவும் எழுந்தால், உடனடியாகப் பேசித் தீர்க்கலாம்.

மின்தடங்கலைத் தவிர்க்க முடியாது. ஒரு ஜெனரேட்டரை நிறுவித் தடங்கல் ஏற்பட்டால் தானாக ஜெனரேட்டருக்கு மாற்றிவிடும் படியான அமைப்பை வைத்துக்கொள்ள வேண்டும். எதற்கும் உடனடியான, நேரடியான கவனிப்பே சிறந்த நிர்வாகத்தை ஏற்படுத்தும். ஆனால், இதை வாங்குமளவுக்கு முழுத்தொகை இல்லையே; என்ன செய்யலாம்?

ஒரு வாரம் சென்றது. கனகவேல் தன் தாயிடம் பேசிக் கொண்டிருந்தான்.

"அம்மா, நான் முன்பு சொன்னேனே; அந்தக் காகித ஆலையை வாங்கிவிடலாம் என்று முடிவு பண்ணிவிட்டேன்."

"அது நலிந்த ஆலை என்றாயே? பின்னால் ஏதாவது சிக்கலாகிவிடப் போகிறது!"

"தீர ஆலோசித்துத்தான் இந்த முடிவுக்கு வந்தேன்."

"பிறகென்ன? வாங்கிவிட வேண்டியதுதானே? எப்போதும் இல்லாமல், என்னிடம் அனுமதி கேட்கிறாய்?"

"இதற்கு முன்னர் உங்களைக் கலக்காமல் செய்து விட்டேன் என்ற கோபமா அம்மா?

"எப்படியானால் என்ன? தொழில் நன்றாக நடக்கிறது; அதில் எனக்கு மகிழ்ச்சிதான்."

"ஆனால் அம்மா, இந்த முறை உங்களிடம் பண உதவி எதிர்பார்க்கிறேன். அதனால்தான்..."

"சரி, சொல் எவ்வளவு வேண்டும்?"

“ஒரு நான்கு இலட்சம்தான் குறைகிறது.”

“என்னிடம் உன் அப்பா கொடுத்த என் பங்கு ஒரு இலட்சம், இப்போது ஒன்றரை ஆகியிருக்கிறது; சரி. மீதி இரண்டரை லட்சத்திற்கு என்ன செய்வது? என்ன செய்யப் போகிறாய்?”

“என்னம்மா? தம்பிகளின் பங்குகளுக்கு அவர்கள் வயதிற்கு வராததால், நீங்கள்தானே பொறுப்பு? அவற்றிலிருந்து எடுத்துக் கொடுங்கள்; தொழில் வளர்ந்து இலாபம் வந்தவுடன் தந்து விடுகிறேன். வட்டியும் போட்டுக் கொடுத்துவிடுகிறேன்”

“அவர்கள் பணத்தில் நான் கை வைக்கமாட்டேன். எதிர்காலத்தில் அவர்கள் என்ன செய்வார்களோ என்று தெரியாமல், அதைத் தரமாட்டேன்.”

“சரி, அம்மா; அவர்களிடம் கேட்டே செய்யலாம். சட்டப்படி பெரியவர்கள் இல்லாவிட்டாலும் அவர்களால் நன்கு சிந்திக்க முடியும். கேட்டுப் பார்க்கிறேனே.”

மாலையில், தம்பிகளில் பெரியவன் தங்கவேல் கூறினான்:

“அண்ணா, பொதுத்தேர்வு நெருங்கி வருகிறது. அதன் முடிவு என்னவென்றே தெரியாது. முடிவு தெரியவரும் அந்த நேரத்தில், எவ்வளவு பணம் தேவைப்படுமோ? அந்த நாளில், உங்கள் பொருளாதார நிலை எப்படி அமையுமோ? சிக்கல் வேண்டாம். உங்களைப் போல் நாங்கள் திறமைசாலிகள் இல்லை. எங்கள் படிப்புச் செலவுக்கு அந்தப் பணம் அவசியம் தேவை.”

“நான் நீங்கள் படிக்கும் பொறுப்பை ஏற்கமாட்டேன் என்று நினைக்கிறீர்களா?”

இல்லை, அண்ணா. உங்களுக்குத் தொந்தரவாக இருக்கக் கூடாதென்று எண்ணுகிறோம்.”

“புரிகிறது. அம்மா, உங்கள் பணமும் எனக்குத் தேவை இல்லை. நான் வேறு வழிகளை யோசித்துக் கொள்கிறேன்.

இந்தக் குடும்பப் பொறுப்பைத் தொடர்ந்து நானே மேற்கொள்ளுகிறேன். இந்தப் பொதுத்தேர்வு முடியும்வரை, வழக்கம்போல் தம்பிகள் படிப்பிற்கான பொறுப்பையும் நானே ஏற்கிறேன். அதன் பிறகு, குடும்பம் மாத்திரம் என் பொறுப்பில் தொடரும்; ஆனால், உங்கள் மேல்படிப்பை நீங்களே பார்ந்துக் கொள்ளுங்கள்.”

“எங்கள் மேல் கோபமா அண்ணா?”

“இல்லை; சரியான நேரத்தில் கொண்ட சரியான முடிவு. நாம் சண்டையிட்டுக் கொள்ளவில்லை; ஒற்றுமையாய்ப் பிரிந்து விடுவோம். அம்மா, வழி காட்டுதலுக்கு நன்றி?”

“என்னடா தம்பி, இப்படிப் பேசுகிறாய்? உன் தம்பிகளின் மீதுள்ள அக்கறையால் தானே, அப்படிச் சொன்னேன்? உனக்கு அவர்களின் எதிர்கால வாழ்க்கையில் அக்கறை இல்லையா?”

“அம்மா, நன்றாக யோசித்துப் பாருங்கள். அப்பா இறந்துவிட்ட நிலையில், என் எதிர்கால வாழ்க்கையை நீங்கள் சிந்தித்தீர்களா? என் படிப்பை மட்டும் நினைத்து நான் செயல்பட்டிருந்தால், இன்றைய நிலை என்ன? மூத்தவனாக அன்று நானே எடுத்த முடிவு அது! இப்போதும் உங்களை நான் கை கழுவி விடவில்லை. தம்பிகள் தலையெடுக்கும்வரை என் வருமானத்தில், என் பொறுப்பில் குடும்பம் நடக்கும்; ஆனால், தம்பிகள் படிப்பு, அது இதுக்கெல்லாம் நீங்கள் அப்பாவின் பணத்தில்தான் செய்துகொள்ள வேண்டும். அவ்வளவுதான்! நான் யாரையும் கைவிடவில்லை; கைவிடவும் மாட்டேன்.”

வேலம்மையார் விக்கித்துப் போய்விட்டார்.

கடன் வாங்காமல் முடித்துவிடலாம் என்றுதான் கனகவேல் எண்ணினான். அதனாலென்ன? வங்கிகளில் அவன்

தன் சொத்துக்களின் பேரில் கடன் வாங்கிக் கொள்ளலாம். அவன் மனம் குழப்பத்திலிருந்து விடுபட்டது.

கனகவேல் தான் நினைத்தபடியே வங்கியில் கடன் வாங்கிக் காகித ஆலையை வாங்கிவிட்டான். அதுவும் சிறப்பாக நடந்து கொண்டிருந்தது.

திருமணம் ஆகுமுன்பே, சிறிய வாடகை வீட்டில் தனியாகத் தங்கியிருந்தான். உணவு மட்டும் ஒன்றாகப் பழைய வீட்டில்தான். திருமணமானபின், அவன் அதே வீட்டில் தனிக்குடித்தனமாக வாழ்ந்து வந்தான். இரண்டே ஆண்டுகளில் பெரிய தொழிலதிபராக முன்னேறிவிட்டான்

ஆலைக்கருகில் பெரிய வீடு கட்டிக்கொண்டு மனைவி, குழந்தையாடு தனிக்குடித்தனம் போய்விட்டான். இவர்கள் அங்குப் போவதும் அவர்கள் இங்கு வருவதும் அவர்களின் ஒற்றுமைக்குச் சான்று.

தங்கவேல் பொறியியல் இறுதி ஆண்டு படித்துக் கொண்டிருந்தான். பொன்னுவேல் பத்தாவதோடு படிப்பை முடித்து விட்டு, நாடகம் திரைப்படத் துறைகளில் நுழைய அத்துறையின் பட்டயப் படிப்பை முடித்துவிட்டு நாடகங்கள் நடத்தி நல்ல பெயரும் எடுத்திருந்தான். ஆனாலும் ஒரு திரைப்படத்தையாவது தயாரித்து வெற்றி பெற்றால் போதும்; பிறகு புகழின் உச்சிக்குப் போய்விடலாம். ஆனால், பணம்?

தன் அண்ணன் கனகவேலைத் தயாரிப்பாளர் ஆக்கலாமெனில், ஒப்புக் கொள்வாரா? கேட்டுப் பார்க்கலாம்; ஆனால், அவரிடம் கேட்க அஞ்சினான். சிறு வயதில் நடந்த நிகழ்வுகள் அவன் நினைவில் இருந்தனதாம் அதற்குக் காரணம்.

# 5. மரகதவல்லி

சமையற்காரர் நொறுக்குந் தீனியை மேசைமேல் கொண்டுவந்து வைத்தார். இருவரும் தின்று கொண்டே பேசினர்.

“அது சரி, கனக்கு! உன் திருமணம், மனைவி பற்றி எதுவும் சொல்லவில்லையே”?

கனகவேல் அமைதியாகிவிட்டான். சோகமான ஆழ்ந்த மௌனம் நிலவியது. திரிபுர சுந்தரி தவித்தாள்.

“கனக்கு, நீ இவ்வளவு உணர்ச்சி வசப்படுவாய், வேதனை கொள்வாய் என்று தெரியாமல் இந்தக் கேள்வியை நான் கேட்டுவிட்டேன். மன்னித்துவிடு.”

“இல்லை திரிபுரி, இது நீ கேட்டுவிட்டதனால் வந்த சோகம் அன்று; நெஞ்சிலேயே நிலைத்துவிட்ட ஒன்று. எனக்குத் திருமணம் ஆனபோது, கிட்டத்தட்ட இரண்டுங் கெட்டான் வயதுதான் எங்களுக்கு. எட்டு ஆண்டுக் காலம் துன்பமே அறியாமல் வாழ்ந்த இல்லற வாழ்க்கை, ஒரு நாள்கூட பிரியாமல் இன்பத்தின் உச்சத்திலே வாழ்ந்தோம்; அதுதான் வாழ்க்கை என்றே நினைத்தோம். ஒரு சில கணங்களில் என்னைவிட்டு உச்சத்துக்கும் மேலே போய்விட்டாள். என்னைப் பித்தனாக்கி விட்டாள். சிறு வயதில் இருந்த மனத் திண்மை இப்போது இல்லை. உறுதி சிதைந்து தவிக்கிறேன். சில நேரங்களில் நான் என்னை மறந்து எங்கோ போய்விடுகிறேன். என்னென்னவோ தவறுகள் செய்து விடுகிறேன். அம்மாவிடம் போய் குறை சொன்னவர் பலர்.”

“அமைதி கொள், கனக்கு. அம்மா என்னிடமும் சொன்னார்கள். பெற்றவர்க்குள்ள ஆதங்கம் அவர்க்கும்

இருக்கத்தானே செய்யும்? எல்லாத் தாய்மார்களும் சொல்வதுதானே. உனக்கென்ன வயது? என் வயதுதான். இருபத்தெட்டு! எனக்கு இன்னும் திருமணமாகவில்லை; ஆனால், நீ எட்டு ஆண்டுகள் மணவாழ்க்கை மேற்கொண்டவன். நான் ஒன்று சொன்னால், தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது.''

''இல்லை; சொல்.'' இயல்பு நிலைக்கு வந்துவிட்டான்.

''இருக்கட்டும். நமக்காக உன் ஆட்கள் எல்லாரும் பசியோடு காத்திருக்க வேண்டாம்; நாம் சாப்பிட்டுவிட்டு மீண்டும் பேச்சைத் தொடரலாம்.''

''நாராயணா! நாங்கள் சாப்பிட வருகிறோம். எல்லாம் எடுத்து வை.''

''சரிங்கய்யா?

உணவு முடிந்தபின் நாராயணனை அனுப்பிவிட்டுப் பேச்சைத் தொடர்ந்தனர். பள்ளிப் பருவ நினைவுகள் அவள் மனக்கண்முன் வந்தன.

''கனக்கு! படிக்கிற காலத்தில், உன்னைச் சுற்றிச் சுற்றி வந்து, எப்படியெல்லாம் வழிவழியென்று வழிந்திருக்கிறேன்! பாடம் கேட்கும் சாக்கில் உன் அண்மையை எவ்வளவு விரும்பினேன் தெரியுமா? நீ சற்று இடம் கொடுத்திருந்தாலும் என்னையே முழுவதுமாக உன்னிடம் தந்திருப்பேன்.''

''தெரியும்; என் நிலையும் அதேதான். ஆனால், படிப்புத்தான் அப்போது என் ஒரே சிந்தனை; என் குறிக்கோள், நான் மாநிலத்தில் முதல்வனாய் வர வேண்டும் என்பதுதான். உன்னிடம் நான் நெருங்கியிருந்தால், என் கவனம் சிதறிவிடக் கூடும்; அதுதான் உன்னைக் கண்டு கொள்ளாதது போல் நடிக்க வேண்டியதாயிற்று.''

''உண்மையாகவா, கனக்கு? என்னால் நம்பவவே முடியவில்லை.''

''என் வாழ்க்கை இப்படித் திசைமாறிப் போகும் என்று தெரிந்திருந்தால், உன்னை ஏமாற்றி இருக்கமாட்டேன்.''

“ஓஒ! இப்போது புரிகிறது. அன்று என் தோள்மீது சாய்ந்து அழுதாயே, அதைத் துக்கத்தின் வெளிப்பாடு என்றுதான் நினைத்தேன். ஆனாலும் கனக்கு, உன் மீது எனக்குள்ள ஈர்ப்பு மட்டும் அன்றைக்கு இருந்ததைப் போல்தான் இன்றைக்கும் இருக்கிறது.”

அவள் இப்போதும் உண்மையாகவே வழிந்தாள்.

“நேரம் ஆகிவிட்டது. எனக்குக் காவல்துறையின் வீடு ஒதுக்கும்வரையில், உன் ஆலையின் விருந்தினர் விடுதியிலேயே தங்கிக் கொள்கிறேன்.”

“சரி, திரிபுரி. தினமும் இங்கு வா. என் மகளை நீ பார்க்க வேண்டும்; அவளோடு பழக வேண்டும். இரவு உணவு அருந்திவிட்டுச் செல்லலாம்.”

“கண்டிப்பாக வருகிறேன்.” புறப்பட்டுவிட்டாள்.

‘தினமும் வரச் சொல்கிறானே! அவனுடைய மகளோடு பழகச் சொல்கிறானே! மனத்திற்குள் ஏதாவது எண்ணத்தை வளர்த்துக் கொண்டிருக்கிறானோ? அவன் இப்போதைய என் மனநிலையைப் புரிந்து கொள்ளட்டும் என்று வேண்டும் என்றேதான் நானும் பேசினேன். அவன் குறிப்புக் காட்டினால் போதும் இப்போதும் என்னைக் கொடுக்க நாட்டம் கொள்கிறேனே! அவனுடைய மகளோடு பழகி, எப்படியாவது அவனுடைய மனத்தைக் கவர வேண்டும்.’

அவளுக்குக் கிளுகிளுப்பாய் இருந்தது. பழைய நினைவுகள் அவளைச் சுற்றிச் சுற்றி வந்து தூங்கவிடாமல் அடித்தன.

*******

கனகவேலின் வீட்டிற்குத் தொடர்ந்து செல்ல ஆரம்பித்தாள். அஞ்சனா, அவள் எதிர் பார்த்ததை விட விரைவாகவும் நெருக்கமாகவும் பழகிவிட்டாள்.

“உங்களை நான் எப்படிக் கூப்பிடுவது?

“அம்மான்னு கூப்பிடேன்?”

“ஊகூம்! என் அம்மாதான் செத்துட்டாங்களே?”

திரிபுரசுந்நரி திடுக்கிட்டுத் திகைத்தாள். அன்போடு அணைத்துக்கொண்டு,

“சித்தி என்று கூப்பிடுவாயா?”

“சரி, சித்தி.”

உடனே ஒப்புக் கொண்டாள். சுற்று மதிற் சுவரோடு கூடிய பெரிய வீடு! வீட்டைச் சுற்றித் தோட்டம், வீட்டின் எதிரே நீரூற்றுத் தொட்டி, மகிழுந்து நிற்கத் தொங்கு கூரையுடன் தரை முற்றம், வேலைப்பாடமைந்த முன் கதவு, வரவேற்பறை, அதை ஒட்டிக் கீழ்த்தள அலுவலக அறை, இருபுறமும் இரண்டு அறைகள். இடப் பக்க முதல்அறை, அஞ்சனாவுடையது. அடுத்த அறை ஆயா ஷெர்லியுடையது.

அடுத்துப் பெரிய உணவருந்தும் அறை! பெரிய நாற்காலிகள், மேசை. இடதுபக்க மூலையில், பொருட்கள் வைக்கும் தட்டடுக்கோடு கூடிய சமையல் அறை.

மாடியில் அலங்காரப் படுக்கையறை! முழு உருவத்தையும் பார்க்கக் கூடிய பெரிய கண்ணாடிகளோடு கூடிய, அலங்கரித்துக் கொள்ளப் பெரிய அலங்கார மேசை, துணிகள் வைக்கச் சுவர் அலமாரிகள். படுக்கையறையை ஒட்டிய அலுவலக அறை.

தன்மனைவி ஆசைப்பட்டபடி அனைத்தையும் அமைத்து, அவளை ஒரு தேவதையைப் போல் அவள்மேல் அன்பையும் ஆசையையும் வைத்திருந்தான். அதற்கு ஏற்றபடி, அந்த இளம் வயதில் அவன் துன்பமென்பதையே அறியாமல் வாழ்ந்து கொண்டு இருந்தபோதே, அவள் அகாலத்தில் போய்ச் சேர்ந்துவிட்டாள். அவர்களுடைய அந்தப் படுக்கையறைக்குள் அவனைத் தவிர வேறு யாரும் போகக் கூடாதென்பது அந்த

வீட்டில் எழுதப் படாத சட்டம்! மற்றவர்க்கு அங்கே என்ன வேலை?

சமையற்காரன் நாராயணராவும் அவனுடைய இளம் மனைவி மஞ்சுகுட்டியும் புறக்கடையில் சமையல் அறை, படுக்கை அறை, குளியல் அறை, கழிப்பறை கொண்ட தனி வீட்டில் குடியிருந்தனர்.

அஞ்சனாவைப் கவனிக்கும் பொறுப்பில், வீட்டின் உள்ளேயே எல்லா வசதிகளும் கொண்ட தனியறையில் செவிலி ஷெர்லி. இளமை பொங்கி வழியும் அழகிய நங்கை! அங்கேயே தங்கிக் கொண்டு இருபத்து நான்கு மணி நேரமும் அஞ்சனாவைக் கவனித்துக் கொள்ள வேண்டும். குளிப்பாட்டுதல், உடை அணிவித்தல், உணவு ஊட்டுதல், பள்ளிக்கு அழைத்துச் சென்று வருதல், உறங்க வைத்தல், முக்கியமாக உடல்நலம் பேணல் என இவை அத்தனையும் ஷெர்லியின் வேலைகள்.

ஒன்றாம் வகுப்புப் படிக்கும் ஆறே வயதான அஞ்சனாவுக்கு அவள் பாடமும் சொல்லிக் கொடுப்பாள். அஞ்சனா அவளிடம் மிகவும் ஒட்டிக் கொள்வாள். ஷெர்லியும் கனகவேல் மேல் ஒரு கண் வைத்துத்தான் இருந்தாள். சூழ்நிலை உருவாகி, அவன் தன் குழந்தைக்காக அவளை மணந்து கொண்டால்...? பேராசைதான்! நடந்தால்... நினைத்து நினைத்து மயங்கினாள்.

அந்த வேளையில் கனகவேலின் பள்ளித் தோழி காவல்துறை ஆய்வாளராக அங்கு வந்ததையும் அவர்கள் சிரித்துச் சிரித்துப் பேசிப் பழகுவதையும் அஞ்சனா அவளைச் சித்தி என்று அழைப்பதையும் பார்த்த ஷெர்லிக்குத் தன் கனவு கனவாகவே போய்விடுமோ என்றோர் அச்சம்! அதனால், திரிபுரசுந்தரி மேல் பொறாமை அவளிடத்து வளர்ந்தது. வீட்டுத் தலைவரின் தோழி - காவல்துறை ஆய்வாளர் என்ற முறையில் அவளிடம் எல்லாருமே மிக்க மரியாதையுடன் நடந்து கொண்டனர்.

பதினைந்து நாட்களுக்குமேல் ஆகிவிட்டன. திரிபுர சுந்தரிக்குக் காவல் துறை ஒதுக்கியிருந்த அரசு வீடு தயாராகி விட்டது. அவள் விரைவில் அங்குக் குடியேறல் வேண்டும். அதைக் கனகவேலிடம் சொன்னாள்.

“திரிபுரி, உண்மையாகச் சொல்கிறேன்; நீ இங்கிருந்த நாள்களில் மிகவும் மகிழ்ச்சியாகப் பழைய நம் நட்பைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தது எனக்கு ஆறுதலாக இருந்தது. நீ போய்விட்டால், நம் சந்திப்புக் குறைந்துவிடும். போகட்டும்; இன்று நான் உனக்கு ஒரு சிறப்பு விருந்து தருகிறேன்.”

“நீ சொன்னால் நான் வேண்டாம் என்றா சொல்லப் போகிறேன்? சரி; கனக்கு, எத்தனை மணிக்கு?”

மெல்ல அவளிடம் சொன்னான்.

“இரவு எட்டு மணிக்கு, நீ தங்கியிருக்கும் விருந்தினர் மாளிகையில்தான். வேறு யாரும் வேண்டாம்; என்ன?”

“அனால், ஒன்று; கனக்கு! ஏதாவது அவசர அழைப்பு வந்துவிட்டால், நம் விருந்து அவ்வளவுதான்.” கையை விரித்தாள்; சொல்லி விட்டுச் சிரித்தாள்.

“அதற்கென்ன? உன் வேலை அப்படி; நாம் என்ன செய்ய முடியும்?”

திரிபுரசுந்தரி போகுமுன் அஞ்சனாவைப் பார்த்து,

“அஞ்சனா! போய் வரேன்டா, செல்லம்.”

“சரிங்க, சித்தி”

ஷெர்லி மனத்துக்குள் பொருமினாள். ஆனாலும் இன்னும் சில நாட்களில் தொலைந்து போய்விடுவாள் என்று சற்றே நிம்மதி அடைந்தாள்.

# 6. விருந்து

இரவு மணி எட்டு. சர்ர் என்று காவல்துறை ஜீப் வந்து நின்றது. முழு காவல் சீருடையில் வந்து இறங்கினாள் ஆய்வாளர் திரிபுர சுந்தரி. காவலர் மாலதியிடம், ‘‘மாலதி, நாளைக்குக் காலையில் வந்துவிடு,’’ என்றவள், அபோதுதான் கனகவேலைப் பார்த்தது மாதிரி,

‘‘அடடே! கனக்கு. நீ இங்கேயா இருக்கிறாய்?’’ என்றாள்.

‘‘ என் விருந்தாளியாக இத்தனை நாள்கள் இருந்த உனக்கு இன்று வழியனுப்பு விழா. பின்னால் உனக்கு நேரம் கிடைக்குமோ, என்னவோ? அதுதான் காத்திருக்கிறேன்.’’

‘‘சரி, மாலதி. நீ போய்வா.’’

காவலர் மாலதி சென்று மறைந்தாள். இருவரும் சிரித்துக் கொண்டனர்.

‘‘என்ன, கனக்கு? விருந்து அணியமாய் இருக்கிறதா? எனக்குப் பசிக்கிறது.’’

‘‘பாவம்! மிகவும் களைப்பாய்தான் காணப் படுகிறாய்; போய் முகம் கழுவி, உடை மாற்றி ஒப்பனை செய்து கொண்டு தெளிவாக வாயேன்.’’

திரிபுர சுந்தரி உள்ளே சென்று, பத்து நிமிடத்தில் வெளியே வந்தாள். கனகவேல் அவளை வைத்த கண் வாங்காமல் பார்த்தான். கவர்ச்சியான உடையில் ‘‘சிக்’’ கென்று தோற்றம் அளித்தாள். அவனைக் கவர அவளுக்கும் உள்ளே ஆசை இருக்கத்தானே செய்தது!

மேசையில் உணவு அனைத்தும் மூடி வைக்கப்பட்டு இருந்தன. மேசையின் எதிர் எதிரே நாற்காலிகள் போடப்

பட்டிருந்தன. வந்தவள் எதிர்ப்புறம் இருந்த நாற்காலியைத் தூக்கிக்கொண்டு,

“கனக்கு, கொஞ்சம் நகர்ந்துகொள். உன் அருகில் அமர்ந்து உண்ண ஆசைப்படுகிறேன்; எதிரில் அமரல் வேண்டாமே.”

அவனும் நகர்ந்துகொண்டான். இவளும் அவன் அருகில் நாற்காலியைப் போட்டு அமர்ந்து கொண்டாள்.

“இன்னும் ஒன்று சொல்கிறேன்; கேள், திரிபுரி. இப்போது நாம் இருவரும் அரசு அதிகாரி - தொழில் அதிபர் என்றில்லாமல், பள்ளிப் பருவ நண்பர்களைப்போல் பேசுவோம்; பழகுவோம். சரிதானே?”

“வேண்டாம் சாமி! நானே வந்து உன் மீது மோதி அணைத்துக் கொண்டாலும் நீ ஒரு மரக் கட்டைபோல நடந்து கொள்வாய்; பார்த்து வரக்கூடாதா? என்பாய். போதும் சாமி! அன்று நான் எவ்வளவு உடைந்து போனேன்; தெரியுமா?”

“தெரியும்.”

“என்ன! தெரியுமா? கனக்கு, நீ என்ன சொல்கிறாய்?”

“மாநிலத்திலேயே முதல் மாணவனாக வர வேண்டும் என்ற அக்கறையைப் படிப்பில் காட்டினேன். இளமைத் துடிப்பைக் கட்டுப்படுத்திக்கொண்டேன். ஆம்; நீ என்னை ஏன் சுற்றிச் சுற்றிவந்தாய் என்பதை நான் நன்கு அறிந்தே இருந்தேன். சரி! உண்ணலாம்; பாவம், பசி என்றாய்.”

திரிபுரசுந்தரி அவனை வியப்புடன் பார்த்தாள்; தன்னை மறந்தாள்.

“கனக்கு! எனக்குப் பசி மறந்து விட்டதுடா. நம் பள்ளிப் பருவத்திற்கே போய்விடலாம்; வாடா.”

“ஊகூம்; சாப்பிட்ட பிறகுதான்.”

“மரமண்டை! மரமண்டை! ஏன்டா என்னை இப்படிக் கொல்கிறாய்? சரி, சரி; சாப்பிடலாம்.”

கனகவேல் அபோது ஒரு மதுக் குப்பியை எடுத்து மேசை மேல் வைத்தான்.

“ஏய்! என்ன இது? நீ குடிப்பியா?”

“என் மனைவி இறந்த பிறகு, எப்போதோ ஒருமுறை; அவ்வளவுதான். இப்போதும் நீ அனுமதித்தால்தான்.”

“நடத்து! நடத்து! நான் கண்டு கொள்ளவில்லை.”

மணி ஒன்பது ஆகிவிட்டது; விருந்தும் முடிந்தது. என்னென்னவோ பேசினார்கள்; எல்லாம் பழங்கதைகள்தாம்.

“அன்று, உன் மேல் எவ்வளவு ஆசை வைத்திருந்தேன் தெரியுமா? நீ சிறிதும் ஏறெடுத்தும் பார்க்காததனால், எவ்வளவு மனமொடிந்து ஏமாந்து போனேன் தெரியுமா?”

“என் நிலையைப் பற்றித்தான் சொன்னேனே; புரிந்துகொள்.”

“இப்போது சொல்கிறேன்டா. உன் மேல் அந்தப் பருவத்தில் எனக்கிருந்த ஈர்ப்பு, இன்றும் அப்படியேதான் இருக்கிறது. கொஞ்சமும் குறையவில்லையடா?”

திரிபுர சுந்தரி அவனிடம் எதையோ எதிர் பார்த்து ஏக்கமாய்ப் பார்த்தாள்.

“இந்த முறை உன்னை ஏமாற்ற மாட்டேன். வா.”

அவன் அழைப்பை மனமார ஏற்று, அவனுடன் படுக்கை அறைக்குச் சென்றாள். ஒருவரோடொருவர் இணைந்து இன்பத்தைச் சரிசமமாய்ப் பரிமாறிக்கொண்டு ஒருவர்க்கு ஒருவர் விருந்தாகினர்.

*******

காலையில் கண் விழித்தவள், இரவு நடந்ததை எல்லாம் நினைத்துப் பார்த்தாள். அவன் பதினோரு மணிக்கெல்லாம் போயிருக்க வேண்டாம். நானும் இவ்வளவு உணர்ச்சிக்கு உள்ளாகி இருக்கவேண்டாம். எப்படியாவது பேசித்

திருமணத்திற்குச் சம்மதிக்க வைத்திருக்கலாம். இப்போது என்ன கெட்டுப் போயிற்று? இந்த உறவே திருமணமாக உறுதிப்பட உதவலாம்.

அவளுடைய மனம் "திக்"கென்று அடித்துக்கொண்டது. அவள் அந்த மயக்கத்தில் இருந்தபோது, அவன் கூறியவற்றை எண்ணிப் பார்த்தாள்.

'எனக்கு ஒரே ஒரு மனைவிதான். அவள் மரகதவல்லிதான்! மற்றவர் எல்லாம், வந்து போகும் இன்பவல்லியர்தாம்?'

'போதையிலும் மிகத் தெளிவாகப் பேசி இருக்கிறான். அதை உணர்ந்து கொள்ளாமல், என்னை இழந்து இருக்கிறேனே! அவன் அம்மாகூட சொன்னாரே, இப்போதெல்லாம் இவனைப்பற்றி நல்ல வார்த்தை யாரும் சொல்வதில்லை என்று.'

அவள் உள்ளம் குறுகுறுத்துக் கொண்டே இருந்தது. 'அறிவை இழந்து உணர்ச்சிக்கு அடிமையாகிக் குற்றம் புரிந்து விட்டேனோ?'

நினைவிலிருந்து மீண்டாள்.

இரண்டு நாட்கள் சென்றன. அவன் வரமாட்டானா என்று மனம் ஏங்கியது; வந்துவிடுவானோ என்று பெண்மை அஞ்சியது. மீண்டுமா? ஐயோ! வேண்டாம்.

காலை உணவு உண்டுவிட்டு, அங்கு அப்போது வந்த மாலதியிடம்,

"மாலதி! என் உடைமைகளை எல்லாம் எடுத்துக் கொண்டுபோய் நம் அரசு வீட்டில் வைத்துவிடு. இந்த விடுதியை காலி செய்துவிட்டதாகச் சொல்லிவிடு; நான் பின்னாலேயே வருகிறேன். அலுவலகத்திற்குச் சற்றுத் தாமதமாக வருவேன்," என்றாள்.

வீட்டில் பொருள்களை எல்லாம் ஓரளவு ஒழுங்காக வைத்துவிட்டுச் சீருடையுடனேயே கட்டிலில் சாய்ந்தாள். அந்த இரவில் நிகழ்ந்தவெல்லாம் மீண்டும் மீண்டும் நினைவில் சுழன்றன. அந்தச் சுகத்தைத் துய்க்க மனம் ஏங்கியது. மாலையில் அங்குப் போனால், வருவானா? மீண்டும் அந்த இன்பம் தருவானா?

அதே மயக்கத்தில், அலுவலகத்திற்குப் போனாள்.

தொலைப்பேசி மணி அழைத்தது. ‘ஃகூம்! வந்ததும் வராததுமாக ஆரம்பமாகிவிட்டதா?’

“அலோ! வடலூர்க் காவல் ஆய்வாளர் பேசுகிறேன்; நீங்கள் யார்? என்ன செய்தி?”

மறு முனையில் யாரோ பேசினார்கள். திரிபுரசுந்தரியின் முகம் விகாரமாக மாறிவிட்டது. அஃது என்ன செய்தி?

“தொழிலதிபர் கனகவேல் தன் வீட்டில் துப்பாக்கியால் சுடப்பட்டு இறந்து கிடக்கிறார்!”

நழுவி விழவிருந்த பேசியைக் கீழே விழாமல் பிடித்துக் கொண்டாள். ஆனால், அவளுடைய எண்ணங்கள், துளிர்விட்ட ஆசைகள் எல்லாம் ஒரே நொடியில் விழுந்து நொறுங்கிப் போய்விட்டனவே! தொடர்ந்து பேசினாள்.

“யார் பேசறீங்க?”

“நான் மேலாளர் தியாகராசன்; கனகவேல் ஐயா வீட்டிலிருந்துதான் பேசுகிறேன். அவரோட அம்மா, தம்பிகள் சொந்தக்காரர்கள் எல்லாம் இங்கு வந்துவிட்டார்கள். உங்கள் துறைக்குச் சொல்ல வேண்டிப் பேசுகிறேன்.”

“நான் உடனே புறப்பட்டு வருகிறேன். உடல் கிடக்கும் இடத்திற்கு யாரும் போகாதவாறு பார்த்துக்கொள்ளுங்கள்.”

# 7. கனகவேல் வீட்டில்...

தொப்பியைக் கழற்றிக் கொண்டு வீட்டின் உள்ளே நுழைந்த அவளைக் கனகவேலின் தாய் கட்டிக்கொண்டு, "ஓஓ" என்று அழுதார்.

"திரிபுரசுந்தரீஇஇ! பார்த்தியாம்மா என் பிள்ளையை? அவனைக் கொல்ல, யாருக்கு எப்படியம்மா மனம் வந்தது?"

அஞ்சனா ஓடிவந்தாள். அவளைக் கட்டிப் பிடித்துக் கொண்டு திரிபுரசுந்தரி அழுதாள்,

"சித்தி! என் அப்பா செத்துட்டாராம்; இனிமேல் என்னுடன் பேசமாட்டாராம்."

கதறி அழுதாள். சிறிது நேரம் இருவரும் குலுங்கிக் குலுங்கி அழுதனர். அக்கம் பக்கம் இருந்தவர்களில் யாரோ பேசினார்:

"ஆய்வாளர் அம்மாவும் செத்துப் போனவரும் ஒன்றாகப் படித்தவர்களாம்; குடும்ப நண்பர்களாம்! இப்படி ஆகிவிடவும் அவர்கள் மனம் தாங்க முடியாமல் அழுகிறார்கள்; பாவம்."

கனகவேலின் இரு தம்பிகள், அத்தை, மாமா, அவர்களுடைய மகள் சாரதா, இன்னும் மற்ற சொந்தக்காரர்கள் எல்லாம் வந்துவிட்டார்கள்.

ஷெர்லி, நாராயணன், அவன் மனைவி, மற்ற வேலைக்காரர்கள் எல்லாரும் சோகமாக அமர்ந்து இருந்தனர்.

தொழிலாளர்கள், அலுவலகப் பணியாளர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள், ஊர்ப் பெரியவர்கள், ஊர் மக்கள் என எல்லாரும் கூடிவிட்டனர்.

ஆய்வுப்படை வந்தவுடன் திரிபுர சுந்தரி சுதாரித்துக் கொண்டு, கடமையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டாள். துறை சம்பந்தமான எல்லா வேலைகளும் முடிந்தன. பிண அறுவைச் சோதனையும் முடிந்தது.

திருவண்ணாமலையில் இருந்து கனகவேலின் மாமனார்,மாமியார் வந்துவிட்டனர்.

மாலை மரியாதையுடன் பெருந் திரளாக மக்கள் கூட்டம் கலந்து கொள்ள, ஆர்ப்பாட்டமாகக் கனகவேலின் இறுதி ஊர்வலம் நடந்தது. திரிபுர சுந்தரியும் அதில் கலந்து கொண்டாள். அவள் மனம் மீண்டும் நொறுங்கிப் போய் விட்டது.

'சூழ்நிலை வாய்த்த போது, பத்து ஆண்டுகளாக மனத்திலேயே பூட்டி வைத்திருந்த அந்த மோகத்தை வேக வேகமாக நுகர்ந்தேன். ஒரே நாளில் என் கனவுகள் அவனுடனேயே எரிக்கப்பட்டு விட்டனவே! அவனைக் கண்ட போது, என்னென்ன எல்லாம் நினைத்தேன்? ஊரறிய ஊரர்வலமாய்ப் போய் அவனைத் திருமணம் செய்து கொண்டு, கடைசிவரை வாழலாம் என்று விரும்பினேன். என்னையேஅந்த ஒரு கணத்தில் அவனிடம் இழந்துவிட்டேன். ஆனால்...இன்று? அவன் இறுதி ஊர்வலத்தில்தான் என்னால் கலந்துகொள்ள முடிந்தது! ஆனால்... ஆனால், அவன் ஏன் கொல்லப் பட்டான்? ஏன் ஏன் கொல்லப் பட்டான்?'

கொலையாளியைக் கண்டு பிடிக்கக் காவல் துறை, திரிபுர சுந்தரியின் தலைமையில் ஒரு தனிப்படை அமைத்தது. திரிபுர சுந்தரியே தானாக முன் வந்து மேலதிகாரிகளோடு பேசி, அந்தப் பொறுப்பைக் கேட்டுப் பெற்றாள் என்பதுதான் கூடுதல் செய்தி. மேலதிகாரிகட்கும் அவர்களுடைய நட்பைப் பற்றி நன்கு தெரியும். எனவே, அவள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவளுடைய உணர்வை மதித்து, அத்தப் பொறுப்பை அவளிடம் அளிக்கத் தயங்கவில்லை.

முதல் வேலையாக, யார் மீது ஐயப்பாடு என்றில்லாமல் கனகவேலோடு நெருக்கமான பழக்கம் உள்ளவர்களின் பட்டியலை எழுதிக் கொண்டாள். அவர்கள் ஒவ்வொருவரையும் தன் விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டாள்.

அடுத்துக் கொலைக்கான கரணியம்! இது மிகமிக முக்கியம். பணத் தகராறு, பெண்கள் தொடர்பு, (திரிபுர சுந்தரி வேதனையோடு தனக்குள் சிரித்துக் கொண்டாள்.) தொழிலில் போட்டி, வாரிசு போட்டி, இப்படிப் பலவற்றைப் பட்டியல் இட்டாள்.

'முதலில், கனகவேலின் தாய் வேலம்மையாரை விசாரணை என்ற முறையில் இல்லாமல், அவனுடைய குணநலன்களைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும். அவர்தான் தன் மகனைப்பற்றிக் கூற முடியும். மேலும் ஆரம்பத்திலேயே தன் மகன் மீது குற்றம் சொன்னவர், எதையும் நேரடியாகச் சொல்லாமல், அவனைப் பற்றி நல்ல செய்திகள் சமீப காலமாக அவர் காதில் விழவில்லை என்று குறிப்பாகச் சொன்னவர்; அதுவும் தான் இந்த ஊருக்கு மாற்றலாகி வந்த அன்றே, சொன்னவர்.'

எண்ணிக் கொண்டே வேலம்மமையாரின் வீட்டிற்குச் சென்றாள்.

ஆனாலும் முதலில் விசாரிக்கப்பட வேண்டியவர் மேலாளர் தியாகராாசன்தான். எனினும் சற்றுப் பொறுத்து விசாரித்துக் கொள்ளலாம்.

# 7. வேலம்மையார்

“சொல்லுங்கள், அம்மா! உங்களுக்குத் தெரிந்ததை எல்லாம் சொல்லுங்கள். நீங்கள் சொல்கிற தகவலில் சிறு பற்றுக்கோடு இருந்தாலும் அது, கொலை செய்தவரைப் பிடிக்க உதவும். அந்தக் கொலையாளியை என்னால் பிடிக்க முடியாமல் போனால், நான் கனகவேலின் தோழியாக இருந்தேன் என்பதிலும் காவல் துறை ஆய்வாளராய் இருக்கிறேன் என்பதிலும் எந்தப் பொருளும் இல்லாமல் போய்விடும். அம்மா, எதுவானாலும் தயங்காமல் சொல்லுங்கள்.”

“என் மீதும் தம்பிகள் மீதும் அளவற்ற பாசம் அவனுக்கு! அதற்காகத் தன் படிப்பையும் நிறுத்திக் கொண்டு, குடும்பப் பொறுப்பை ஏற்றான்.”

“இந்த ஊரைவிட்டு நாங்கள் போகுமுன் என்னிடமும் சொன்னான்; எவ்வளவோ பொறுப்பாய்ப் பேசினான்! அம்மா, சொல்லுங்கள்.”

“அவன் தொழில் தொடங்க நாங்கள் உதவாமல் போனதால், எங்கள் மேல் அவனுக்கு மன வருத்தந்தான். ஆனாலும் பொறுப்பைத் தட்டிக் கழிக்கவில்லை. தனியாகத் தன் காகித ஆலை பக்கத்திலேயே குடிபோய் விட்டான். நல்ல பெண்ணாகப் பார்த்துத் திருமணம் செய்து வைத்தேன்.”

“திருமணமானபின் மாறிவிட்டானா?”

“அமாம்; ஆனால், மேலும் அதிக பொறுப்பு உள்ளவனாகத்தான் மாறினான். மரகதவல்லி தங்கமான பெண்! இவன் ஒரு பங்கு என்றால், அவள் எங்கள் மீது பல மடங்கு அன்பைப் பொழிந்தாள்.

கனகவேல் என் மீதும் தம்பிகளின் மேலும் மிக்க பாசத்தோடுதான் நடந்துகொண்டான். ஆனால், பிற்காலத்தில் தன் தம்பிகளின் படிப்பிற்கோ படித்து முடித்தவுடன் வேலையில் சேர்வதற்கோ அல்லது தொழில் தொடங்குதற்கோ பணம் கேட்டபோது, கொஞ்சங்கூட ஈவு இரக்கமின்றி நறுக்குத் தெறித்தாற்போலப் பணம் தர முடியாதென மறுத்துவிட்டான். அவனுக்குத் தேவை பட்டபோது நாங்கள் பணம் கொடுத்து உதவாததைத் தன் நெஞ்சில் நெருப்பாய் வளர்த்துக் கொண்டிருந்திருக்கிறான்!

எங்கள் கெஞ்சல்கள், சமாதானங்கள் எதையும் அவன் இம்மியும் ஏற்றுக் கொள்ளவே இல்லை. அந்த முடிவில் அவன் கடைசிவரை பிடிவாதமாகவே இருந்தான். எப்படியோ நடுப்பையன் பொறியாளனாகத் தனியார் தொழிற்சாலையில் பணியில் இருக்கிறான். சின்னவன் திரைப்படக் கல்லூரியில் பட்டயப் படிப்பு முடித்து நாடகம், திரைப்படம் என்று அலைந்து கொண்டிருக்கிறான். சரியான வாய்ப்புக் கிட்டவில்லையாம். ஊம்! அவனுக்கு இன்னும் நிலையான வருமானம் இல்லை."

வேலம்மையார் கூறி முடித்தார்.

திரிபுர சுந்தரி சிந்தித்தாள்: கனகவேலிடம் பொதுப் படையாகப் பேசிக் கொண்டிருக்கையில், அவன் தன்னிடம் சொன்னவற்றை நினைவு கூர்ந்தாள்.

'ஒரு விதத்தில் அவர்கள் அன்று எனக்கு உதவிட மறுத்தது கூட நல்லதுதான். அவர்கள் உதவி பெற்று நான் இன்றைய நிலைக்கு வந்திருந்தால், அவர்களால்தாம் நான் முன்னுக்கு வரமுடிந்தது என்று எண்ணிக்கொண்டு என் மேல் அவர்கள் அளவுக்கு மீறிய உரிமைகளை எடுத்துக் கொள்ளக்கூடும். ஆனால், அவர்கள் மேல் எனக்குப் பாசம்

இல்லாமல் இல்லை. அவர்களோடு பாசத்தால் இணைந்தே இருக்கிறேன். பணத்தால், சொத்துக்களால் அவர்களோடு இணைந்திருக்க நான் கொஞ்சமும் விரும்பவில்லை. என்னைப் போல அவர்களும் தம் சொந்த முயற்சியால் முன்னுக்கு வர வேண்டும். இதுதான் என் தம்பிகளைப் பற்றிய என் எதிர்பார்ப்பு!

ஒவ்வொரு ஆண்டும் அஞ்சனாவின் பிறந்த நாள் அன்று எல்லாரும் வருவார்கள். வீடே விழாக்கோலமாக இருக்கும்; அன்று முழுவதும் ''சித்தப்பா! சித்தப்பா!'' என்று அவர்களோடு சீராடிவிட்டு, அன்றைய இரவு என்னையும் ''சித்தப்பா'' என்று அழைப்பாள். நான் நமட்டுச் சிரிப்பை உதிர்ப்பேன். மற்ற நாட்களிலும் வந்து அஞ்சனாவையும் அண்ணியையும் பார்த்துவிட்டுப் போவார்கள். நாங்கள் சண்டை போட்டுக் கொண்டு பிரிந்துவிடவில்லையே?'

எல்லாம் சரி; அவன் எப்போது பெண் பித்தனானான்? மண், பொன், பெண் ஆகிய இவைதாம் நடக்கும் கொலைகளுக்குப் பொதுவான கரணியமாக இருந்து வருகின்றன. இந்த நடப்பில் மண் தகராறுக்கு வாய்ப்பே இல்லை. சொத்துக் கொடுப்பதில் வெறும் மன வருத்தந்தான். ஆனால், பெண்? யார் யார் இருக்கக் கூடும்?

மேலாளர் தியாகராசனிடம் பொதுவாக இதைப்பற்றி விசாரிக்கலாம். இப்படிப்பட்டவர்களுக்கு முதலாளியின் அந்தரங்கங்கள் தெரிய நிறைய வாய்ப்புக்கள் உண்டு.

# 8. தியாகராசன்

“வாருங்கள், அம்மா. உங்களை எதிர் பார்த்துத்தான் காத்திருக்கிறேன். இப்படி அமருங்கள்.”

“அப்படியா? நான் வருவேனென்று எப்படி எதிர் பார்த்தீர்கள்? ஏதாவது முக்கியச் சான்றோ, தடயமோ உங்களிடம் இருக்கின்றனவா? அப்படியிருந்தால், நீங்களே என்னை நாடி வந்து தந்திருக்கலாமே?”

“இல்லை, இல்லை. நான்தானே முதல் தகவலை உங்களுக்குத் தந்தேன்? அதனால், என்னிடம் விசாரிக்க விரைவில் வருவீர்கள் என்று எதிர் பார்த்தேன். நீங்கள் கேள்வி கேட்கக் கேட்கப் பதில் சொல்லவா அல்லது எனக்குத் தெரிந்தவற்றை முதலில் சொல்லவா? அம்மா, எப்படிச் சொல்கிறீர்களோ, அப்படிச் செய்கிறேன்.”

“சரி, சரி; உங்களுக்குத் தெரிந்தவற்றைச் சொல்லுங்கள். ஏதும் ஐயம் இருந்தால், பிறகு கேட்டுக் கொள்கிறேன்.”

தியாகராசன் சொல்லலானார்:

“நிகழ்வு நடந்த அன்று, ஐயா தொலைப்பேசியில் அழைத்து ஒரு முக்கிய கோப்பை வீட்டிற்குக் கொண்டு வரச் சொன்னார். இரவு மணி ஒன்பதரைக்கு மேல் இருக்கும். நான் அலுவலகத்திற்குச் சென்று, கோப்பை எடுத்துக்கொண்டு வீட்டிற்குப் போகும் போது, மணி பத்தரை ஆகிவிட்டது. நான் நேரே அலுவலக அறைக்குச் சென்றேன். அறைக்குள் நுழையுமுன், ஐயாவின் படுக்கை அறையிலிருந்து உரத்த குரலில் அவர் கத்திக்கொண்டிருந்தார். கூடவே ஒரு பெண் குரல்! அவரும் உரத்த குரலில் கத்திக் கொண்டிருந்தார்.”

"அதாவது, இருவர் வாய்ச்சண்டை போட்டுக் கொண்டிருந்தனர்; அப்டித்தானே?"

"ஆமாம், அம்மா."

"பிறகு என்ன நடந்தது?"

"படுக்கை அறைக் கதவு திறந்தது. ஐயாவுடன் இருந்தவர் ஷெர்லி! அவரைக் கடுமையாக அறைந்து, கண்டபடி அடித்து உதைத்து வெளியே தள்ளினார். 'இருப்பதற்கு இடம் கொடுத்தால், நாயே! என் மனைவியின் படுக்கையில் உனக்கு இடம் வேண்டுமா? போடி வெளியே!' என்று கத்தினார்.

ஷெர்லியும் பதிலுக்கு, 'நீதான்டா பொறுக்கி நாய்! என்னையா நாய் என்கிறாய்? நான் உனக்குத் தேவைப் படும்போது மட்டும் என் அறைக்கு நீ வருவாய்; ஆனால், எனக்கு நீ தேவைப்படும்போது உன் அறைக்கு நான் வரக் கூடாதாடா? என்னையாடா அடித்து விரட்டுகிறாய்? உன்னை விடமாட்டேன்; உன்னைக் கொலை செய்து விடுவேன். என்ன நினைத்துக் கொண்டு இருக்கிறாய்? பணக்கார நாயே!' என்று கத்தவும் மேலும் அடி உதை விழுந்துகொண்டே இருந்தன.

நிலைமையை உணர்ந்து, நான் அவர்கள் கண்ணில் படாமல் ஒதுங்கிக் கொண்டேன்.

ஷெர்லி அழுதுகொண்டும் திட்டிக்கொண்டும் கழே இறங்கிப் போய்விட்டார்.

ஐயா மீண்டும் அறைக்குப் போய்விட்டார். நான் நிதானித்தேன்; உடனே அவரைக் கூப்பிடுவது உகந்ததாக இருக்காது. எனவே, சிறிது நேரம் பொறுத்திருந்தேன். பின்னர் அழைப்பு மணியை அடித்தேன். அவர் வந்தார்; வெகு இயல்பாக இருப்பதைப்போல் காட்டிக் கொண்டார்.

'எப்போது வந்தீர்? எவ்வளவு நேரமாகக் காத்து இருந்தீர்?' என்றார். நானும்,

'இப்போதுதான் ஐயா வந்தேன். கோப்புக்களைத் தேடிக் கொண்டுவரச் சற்று நேரம் ஆகிவிட்டது; மன்னிக்கவும்,' என்றேன். அவர் முகத்தில் ஒரு நிம்மதி படர்ந்தது.

பின்னர்ப் பார்க்க வேண்டிய கோப்புக்களைப் பற்றிப் பேசிவிட்டு நான் வந்து விட்டேன். அவ்வளவுதாம் அம்மா?"

"சரி! மேலாளரே, நீங்கள் போகலாம்."

"வேறு ஏதும் கேள்விகள்...?" இழுத்தார்.

"நீங்கள் சொல்லிய அனைத்தையும் நன்கு நினைத்து ஆராய்ந்து, பின்னர்த் தேவையெனில் கூப்பிடுகிறேன்."

"போய் வருகிறேன், அம்மா."

திரிபுர சுந்தரி சிந்தனையில் ஆழ்ந்து விட்டாள். 'தன் மனைவியின் படுக்கையில் படுத்துவிட்டாள் என்ற காரணத்திற்காகக் காட்டுமிராண்டித் தனமாகத் தாக்கி இருக்கிறான். நான்தான் அவனை மணந்துகொள்ளலாம் என்று நினைத்திருந்தேன்; ஆனால், அவனுக்கு அப்படி ஒரு எண்ணம் இருந்திருக்காதோ? தன் மனைவியைத் தவிர மற்றவர் எல்லாம் வந்து போகும் இன்பவல்லியர்தாம் என்றானே! அவன் முழுக் குணத்தையும் அறிந்துகொள்ளாமல், அவசரப்பட்டு விட்டேனோ? அவனும் இறந்து விட்டான்; இனி, அதைப்பற்றி நினைத்து ஆகப்போவது என்ன? இனி நம் பணியைத் தொடர்வோம்.'

உம்ம்! இனி அடுத்தது யார்?'

# 9. ஷெர்லி

"வாங்க, அம்மா!" வந்த ஆய்வாளரை வரவேற்றாள்.

"என்ன ஷெர்லி? எங்கே அஞ்சனா?"

"பள்ளியில் விட்டுவிட்டு வந்திட்டேன், அம்மா?"

"எந்த வண்டியில்?"

"தானியில்தான், அம்மா."

"ஏன்? மகிழுந்தில் போகமாட்டீர்களா?"

"ஐயாவின் உத்தரவு, அப்படித்தானம்மா."

"இவ்வளவு மகிழுந்துகள் இருக்கத் தன் குழந்தையைத் தானியில்தான் போகச் செய்தாரா?"

"திரும்பி வரும்போது, நான் மட்டும் மகிழுந்தில் வருவதைத் தவிர்ப்பதற்காக, அப்படிச் சொல்லி இருக்கலாம்."

அவள் மனத்திற்குள், 'அவன் மனைவி படுத்த படுக்கையில் படுத்து விட்டதற்கே படு முரட்டுத் தனமாக அடித்து உதைத்தவன், தன் மனைவி உட்கார்ந்து போகும் எந்த வண்டியிலும் நான் பயணம் செய்வதை விரும்புவானா?' என எண்ணினாள்.

"என்ன சிந்தனை, ஷெர்லி?"

"ஒன்றுமில்லை, அம்மா?

இப்படி நலம் விசாரிப்பதுபோல் பேசி, அவளை இயல்பு நிலைக்குக் கொண்டு வந்து பின்னர்க் குற்ற விசாரணை செய்யும் போது அவளை நிதானமாகப் பதில் கூற வைக்கும் கலை, காவல்துறைக்கே உரிய திறன் ஆகும்.

"ஷெர்லி, இந்த வீட்டில் எவ்வளவு காலமாய் இருக்கிறாய்?"

“அம்மா, போதும்; நீங்கள் எதற்காக வந்திருக்கிறீர்கள்? என்ன கேட்க விரும்புகிறீர்கள்? என்பதை அறிவேன். இந்த வீட்டில் இருக்கும் அனைவரையும் நீங்கள் விசாரிக்கத்தான் போகிறீர்கள். நானே என்னைப் பற்றி, எனக்குத் தெரிந்தவற்றை எல்லாம் முழுமையாகச் சொல்லி விடுகிறேன். ஆனால், முதலிலேயே ஒன்றை உறுதியாகச் சொல்கிறேன்; இந்தக் கொலையை நான் செய்யவில்லை. அப்படிச் செய்தவர்க்குத் துணையாகவோ, செய்யத் தூண்டுதலாகவோ இல்லை.”

“கெட்டிக்காரிதான்! சரி சொல். ஆனால், நீ சொல்கிற செய்திகள் பின்னால் உனக்கே எதிராக அமையக் கூடும்; அதை நீ புரிந்துகொண்டு சொல். சரியா?”

“நான் முதலில் மருத்துவர் வின்சென்ட் அவர்களிடம் செவிலியாக ஒன்றரை ஆண்டுக்காலம் பணி செய்து வந்தேன். அவர் கனகவேல் ஐயாவின் நெருங்கிய நண்பர்.”

“தெரியும். நாங்கள் மூவரும் பன்னிரண்டாம் வகுப்பு வரையில் ஒன்றாகப் படித்தவர்தாம்; மேலே சொல்.”

“அம்மா, நீங்கள் பெண் அதிகாரி ஆனதால், சில செய்திகளை மனம் திறந்து வெளிப்படையாகச் சொல்ல நேரிடும்; தவறாக எண்ண வேண்டாம்.”

“ஏதேது? பீடிகை மிகவும் பலமாக இருக்கிறதே! வெளிப்படையாகப் பேசுவதுதான் எனக்கும் தேவை. சரி; மேலே சொல்.”

“வின்சென்ட், பெண்களோடு ஒரு மாதிரியாகத்தான் பழகுவார். நானும் அவருக்குத் தாராளமாக இடங்கொடுத்தேன். அவரை எப்படியும் என் வலையில் வீழ்த்தித் திருமணம்வரைப் போய்விடலாம் என்பதுதான் என்னுடைய திட்டம். ஆனால், நடந்ததோ வேறு.

ஒருநாள், எல்லாரும் போனபின் மருத்துவரும் நானும் தனியாக இருந்தோம்; சும்மா இல்லை. ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டிருந்தோம் யார் வரப் போகிறார்கள் என்ற

எண்ணத்தில்! ஆனால், திடீரெனக் கதவைத் திறந்து கொண்டு அறைக்குள்ளே கனகவேல் நுழைந்து விட்டார்.

எப்போதும் நேராக உள்ளே வந்துவிடும் வழக்கம் கனகவேலுக்கு இருந்தது. நாங்கள் இருந்த நிலையைப் பார்த்துவிட்டு, அப்படியே நின்றுவிட்டார். நான் என்னை விடுவித்துக் கொண்டு பக்கத்து அறைக்குப் போய்விட்டேன்.

அவர்கள் இருவரும் நீண்ட நேரம் பேசிக்கொண்டு இருந்தார்கள். அவர் போன பிறகு, மருத்துவர் என்னை அழைத்தார். அவர் முகத்தில் குழப்பம் தெரிந்தது.

‘ஷெர்லி, நான் ஒன்று சொல்வேன்; நீ அதை ஏற்றுக் கொள்வதும் ஏற்காததும் உன் விருப்பம். நீதான் முடிவு எடுக்கவேண்டும்.’

‘சொல்லுங்கள், ஐயா.’

‘வந்தவன் என் நண்பன். கனகவேல் அவன் பெயர். பெரிய தொழில் அதிபர். இவை எல்லாம் உனக்கே தெரியும். சமீபத்தில் அவன் மனைவி இறந்து போனாள். அவனுக்கு ஏழு வயதில் ஒரு மகள். அவளைக் கவனித்துக் கொள்ள ஒரு முழுநேர அடிப்படையில் ஒரு செவிலி வேண்டுமாம். வீட்டிலேயே தங்க இடமும் உணவும் நல்ல உடைகளும் தந்து மாதம் சம்பளமாக முப்பதாயிரம் உரூபாய் கிடைக்கும்.

குழந்தையைப் பராமரிப்பதும் அவளைப் பள்ளிக்கு அழைத்துப் போவதும் பள்ளி விட்டதும் திரும்ப அழைத்து வருவதும் அவளுக்கு உடல்நிலை பாதிக்கப்பட்டால் மருத்துவ உதவியும் சிகிச்சை அளிக்கவும் நடவடிக்கை எடுக்கவும் வேண்டும். அவன் உன்னைப் பார்த்ததும் அந்த வேலைக்குப் பொருத்தமாய் இருப்பாய் என்று கூறுகிறான். நான் உன்னை உடன்பட வைத்து, அவனிடம் வேலைக்கு அனுப்பிவைக்க வேண்டுமாம். சொல்; நீ என்ன சொல்கிறாய்?’

‘நான் சொல்வது இருக்கட்டும் நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? என்னோடு நெருக்கமாகப் பழகி எல்லாம்

ஆகிவிட்டது. நான் உங்களைத்தான் நம்பி இருக்கிறேன்; எதிர் காலத்தில் நான் உங்களோடு இணைந்துவிடவே எண்ணி உள்ளேன்.'

வின்சென்ட்டுக்கு என் நடவடிக்கைகள் என் எண்ணத்தை முன்னரே காட்டிக் கொடுத்திருந்தாலும் என்னிடம் இயல்பாகவே பழகி வந்தான். என்னைத் தட்டிக் கழிக்க, இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள நினைத்திருக்கிறான் என்பதை நான் அறிவேன்.

'எனக்கு மட்டும் உன்னைப் போகச் சொல்ல மனம் வருமா? அப்படியா பழகினோம் நாம்? ஆனால், எதார்த்த நிலையை எண்ணிப் பார். நான் வருவாய் அதிகமில்லாத மருத்துவன். ஆனால், அவன் தரும் ஊதியம் நான் தருவதைப்போல் நான்கு மடங்கு! நீ எப்போதும் போல் இங்கு வந்து போகலாம்; நாம் இணைந்து வாழலாம். அவனோ மனைவியை இழந்தவன்; இளைஞன். எதற்கும் அவனிடம் எச்சரிக்கையாகப் பழகு. சொல்ல முடியாது! பணக்காரப் பயல்களின் பார்வை பட்டால்... ஐயையோ! நீ அவனிடம் போகாமல் இருப்பதே, உனக்குப் பாதுகாப்பு?'

என் மனத்தில் தூவ வேண்டிய மாய மயக்குப் பொடியைத் தூவி விட்டான். என் மனமும் மாற்றம் உற்றது.

'இல்லை, ஐயா. அவர் உங்கள் நண்பர் என்கிறீர்கள்; அவரும் என்னை அனுப்ப முடியுமா என்று கேட்டிருக்கிறார். அவருக்கு நீங்கள் உதவ நான் காரணமானால், நான் மறுக்கக் கூடாது. உங்கள் நட்புக்குக் குந்தகம் ஏற்பட நான் காரணமாக ஆகிவிட வேண்டாம். எனினும் நம் நட்பைத் தொடருவோம். அதனால் உங்கள் ஆலோசனைப்படி நான் நடக்கிறேன். என்னை மட்டும் நீங்கள் மறந்துவிடாதீர்கள்.'

என்னைக் கழற்றி விட்டதில் வின்சென்ட்டிற்கு விடுதலை உணர்வு ஏற்பட்டதை நான் அப்போது உணர்ந்தேன். ஆய்வாளர் அம்மா, நான் வேலையில் சேர்ந்த அன்றே அவர் நடந்து கொண்ட முறையால் நான் அதிர்ச்சி அடைந்தேன்.

ஆமாம்; அன்று இரவே அஞ்சனாவின் அறையில் அவளுக்குத் துணையாக இருந்த என்னை எழுப்பி, என் தனியறைக்கு அழைத்துச் சென்று,.....பின், அறையைவிட்டுப் போகுமுன், என்கையில் ஐந்நூறு ரூபாயைக் கொடுத்து என்னை மீண்டும் அதிர்ச்சியில் ஆழ்த்தினார். விழித்த என்னைப் பார்த்து, 'ஒன்றுமில்லை ஷெர்லி, நீ செவிலியாய் இருக்கச் சம்பளம் கொடுத்து விடுவேன்; ஆனால், இது நாம் இன்று துய்த்த இன்பத்திற்கு நான் தரும் அன்பளிப்பு! இது வேறு; அது வேறு,' என்றார்."

திரிபுர சுந்தரிக்கு ஆரம்பத்தில் ஷெர்லி சொல்வதைக் கேட்கக் கேட்கப் பொறாமையாய் இருந்தது; ஆனால், அவன் அவளை ஒரு கணிகையைப் போல் நடத்திய விதம், அவளுள் கோபத்தையே தூண்டியது. தன்னையும் இப்படித்தான் கருதி இருப்பானோ? இருக்கும்!

"பிறகு?

"பிறகென்ன? அவருக்கு நான் தேவைப்படும் போதெல்லாம் வருவார்; போகும்போது ஐந்நூறு, ஆயிரம் என்று தந்துவிட்டுச் செல்வார். அவர் இறந்த அன்று..."

"கொலை நடந்த அன்று... அப்படித்தானே?"

"ஆமாம், அம்மா. நானும் பெண்தானே? எனக்கு மட்டும் உணர்ச்சிகள் இல்லையா? அன்று எனக்கு அவர் தேவை என்று உணர்ந்து உருகினேன். நடுக்கூடத்தில் சாய்விருக்கையில் அஞ்சனாவைத் தூங்கவைத்துக் கொண்டிருந்தேன். அவர் வந்தார்; நேரே மேலே போய்விட்டார்.

அஞ்சனா தூங்கிவிட்டாள். அவளை அப்படியே அங்கே கிடத்திவிட்டு, மெல்ல மேலே போனேன். அவர் அலுவல் அறையில் இருந்தார். நான் அவரின் படுக்கை அறைக்குள் போய், அவர் வரும் மட்டும் அங்கிருந்த படுக்கையில் படுத்தபடி காத்திருந்தேன்.

அவர் உள்ளே வந்தார்; என்னைப் பார்த்து அதிர்ந்தார். முகம் சிவந்தது! கோபத்துடன்,

'ஏன்டி, நாயே! உனக்கு என்ன திமிர் இருந்தால், என் மரகதவல்லியின் படுக்கையில் படுப்பாய்?' என்று மிருகத் தனமாய் என் தலை முடியைப் பற்றி இழுத்துக் கீழே தரையில் தள்ளினார்; தடுமாறி எழுந்த என் முகத்திலும் பல இடங்களிலும் தாறுமாறாக அடித்தார்! காலால் உதைத்தார்! எனக்கும் கோபம் மிகுந்துவிட, நானும் கத்தினேன்.

'ஏன்டா, பணக்கார நாயே! என் அறையில் இனிக்கும் நான், இங்குக் கசக்கிறேனா? என்னையாடா அடிக்கிறாய்? உன் யோக்கிதையை வெளியே சொல்லி, உன்னை ஊர் சிரிக்கப் பண்ணுகிறேன்; பாரடா! நீ கூப்பிடும்போது மட்டும் வர, நான் என்ன தேவடியாளாடா? உன்னை ஒழித்துக் கட்டுவதுதான் என் முதல் வேலை!' என்று நான் கத்த, அவன் அடிக்கக் கடைசியில் அவன் என் கழுத்தைப் பிடித்து வெளியில் தள்ளினான். நான் தடுமாறி விழுந்து, எழுந்து, அரற்றிக் கொண்டே கீழிறங்கி என் அறைக்குப் போய், என் மன உளைச்சல் தீரவும் அவமானத்தை மறக்கவும் அழுகையை அடக்கவும் மூன்று தூக்க மாத்திரைகளைப் போட்டுக் கொண்டேன். மாத்திரை வேலை செய்யத் தொடங்கியதும் கண்ணயர்ந்து தூங்கிவிட்டேன்."

"அன்று இருந்த நிலையில், ஏமாற்றமும் அவமானமும் உன்னைத் தாக்கியதால், கனகவேலை நீதான் கொன்று விட்டாய் என்று நான் சொன்னால் உன்னால் எப்படி மறுக்க முடியும்?"

"நீங்கள் காவல் துறையினர்; எப்படி வேண்டும் எனறாலும் கேள்வி கேட்கலாம். ஆனால் அம்மா, அவனை நான் கொல்லவில்லை. எனக்கிருந்த வெறியில் அவனைக் கொன்றிருந்தால், இந்நேரம் உங்களிடம் வந்து சரண் அடைந்திருப்பேன். முதலில் அவனை மயக்கி, என்னை மணம் செய்து கொள்ள வைத்துவிடலாம் அல்லது அவனது சின்ன வீடாகவாவது இருந்துவிடலாம் என்றுதான் எண்ணினேன். ஆனால், அன்று அவன் நடந்துகொண்ட முறையைப் பார்த்து ஒரு மிருகத்திடமிருந்து தப்பினேன் என்ற விடுதலை உணர்வே பிறந்தது!

அம்மா, நான் கொல்லவில்லை. என்னைப் போல் பாதிக்கப்பட்ட வேறு யாரோ, அவனைத் தண்டித்து இருக்கலாம். அவன் இறந்ததில் எனக்குச் சிறிதும் வருத்தம் இல்லை. என் வாக்குமூலம் இவ்வளவுதான் அம்மா."

"சரி; மீண்டும் தேவைப்பட்டால் கூப்பிடுகிறேன்."

"ஆனால் அம்மா, இனியும் நான் இந்த வீட்டில் தொடர்ந்து இருக்க முடியுமா? வெளியே போய் வேலை செய்யலாம் என்றால், எங்கே போவேன்? கொலை நடந்த வீட்டிலிருந்த எனக்கு உடனடியாக யார் வேலை கொடுப்பார்கள்? முன்னால் நான் வேலை செய்து கொண்டிருந்த மருத்துவரிடமே போகலாம் என்றால், அவர் இந்த ஆளின் நெருங்கிய நண்பர்; எப்படி வேலை கொடுப்பார்? என் எதிர்காலம் கலக்கமாய் இருக்கிறது. என்ன செய்வேன்?"

குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

"அழாதே! கனகவேலின் அம்மாவிடம் பேசி உனக்கு உதவிட முயல்கிறேன். நான் சொன்னால் தட்டமாட்டார்."

அப்போது தொலைப்பேசியில் மணி அடித்தது. திரிபுர சுந்தரி ஷெர்லியைப் பார்த்தாள். உடனே ஷெர்லி பேசியைக் கையில் எடுத்துப் பேசினாள்.

"ஆமாம்; இங்கேதான் இருக்கிறார்," என்று சொல்லிவிட்டு, "அம்மா, ஐயாவோட அத்தை பேசறாங்க. உங்களோடு பேச வேண்டுமாம்," என்றாள்.

பேசியைக் கையில் வாங்கிக் கொண்ட திரிபுர சுந்தரி, "அம்மா, திரிபுரசுந்தரி பேசறேன்; சொல்லுங்கம்மா. எதற்குக் கூப்பிட்டீர்கள்?" கேட்டாள்.

"நானே அங்கு நேரில் வருகிறேன், அம்மா?"

# 10. வேல்விழியார்

அவர் அழைப்பை ஏற்று வண்டியில் போகும்போதே அவள் மனம் அலை பாய்ந்தது.

‘கனகவேலின் அத்தை வேல்விழியார், கணவர் கண்ணப்பர், மகள் சாரதா இவர்களுடன் கனகவேலின் இரண்டு தம்பிகள் எல்லாரும் ஒன்றாக இருக்கிறார்களாம்; எதற்காக? அத்தனை பேரும் அவளை நன்கு அறிந்தவரே. கனகவேல் கொலைத் தொடர்பாகத்தான் ஏதாவது சொல்வர். எத்தனை காலம் ஆயிற்று அவர்கள் எல்லாரையும் பார்த்து?’

அந்த வேளையிலும் அவளுக்குத் தன் பழைய நினைவுகள் வரப் புன்னகைத்துக் கொண்டாள். இந்தத் தங்கவேலையும் அவன் தம்பி பொன்னுவேலையும் அன்பால் கவர்ந்து தன்னை “அண்ணி” என்று அழைக்கச் சொல்ல, அவர்கள் அப்படி அழைக்கும் போது மனம் கிளுகிளுப்பு அடைகையில் அப்போதே தான் கனகவேலின் மனைவி ஆகிவிட்டதாகக் கற்பனயில் கமுக்கமாக மூழ்கி மகிழ்ந்து மிதந்த அந்தக் கால நினைவுகள் மனத்தில் திரைப்படக் காட்சிபோல் ஓடின...

“டேய், தங்கம்! பொன்னு! இங்கே வாங்கடா!

தங்கவேலும் பொன்னுவேலும் ஓடி வந்தனர்.

“பொன்னூஉ!” கொஞ்சலாக அழைத்தாள்.

“என்ன அக்கா?” கேட்டான் பொன்னுவேல்.

“அறைஞ்சேனா தெரியும்! எத்தனை முறை சொல்லி

இருக்கிறேன், அக்கா என்று கூப்பிடக் கூடாதென்று? சொல்லு; என்னை எப்படிக் கூப்பிடனும்?''

''உம்ம்.. அண்ணி.''

ஆங்! அண்ணி...! அண்ணி...! முகமெலாம் மலர, மீண்டும் மீண்டும் சொல்லிப் பார்த்துக் கொண்டாள்; கிளுகிளுப்பில் பூரித்துப் போனாள். மனத்தளவில் அவள் கனகவேலோடு ஒன்றிப் போனாள். தன்னை அவன் மனைவியாகவே வரைந்து கொண்டாள். கற்பனை ஊறும் அகவை! நினைத்தது எல்லாம் நிறைவேறும் என்ற நினைப்பு!

''தங்கம், நீ கூப்பிடடா!''

''அண்ணி!''

''அடி என் செல்லம்! எங்கே, மறுபடியும் கூப்பிடு.''

''அண்ணீஇ!''

இருவரையும் கன்னத்தோடு கன்னம் படியக் கட்டி அணைத்துக் கொண்டாள்.

''ஏன், உங்கள் அண்ணன் என்னைக் கண்டு கொள்வதில்லை?''

''தெரியலையே, அண்ணி!''

இருவரும் ஒரே குரலில் ஒலித்தனர்.

''உங்களைக் கேட்கவில்லை; என்னையே நான் கேட்டுக் கொண்டேன்.

''சரி, அண்ணி.''

''ஏன்டா, நான் இப்போது கதையா சொல்கிறேன்? என் கதையை எண்ணி நொந்துபோய் இருக்கிறேன். நீங்கள் சின்ன பயல்கள்; உங்களுக்குப் புரியாது. இதற்கும் சரி அண்ணி என்று

சொல்லி விடாதீர்கள். இன்னொன்று; மற்றவர்கள் இருக்கும் போது, அண்ணி என்று அழைத்து விடாதீர்கள்."

"சரி, அண்ணி." மீண்டும் ஒரே குரலில் ஒலித்தனர்.

ஊம்ம்! என்று பெரு மூச்சு விட்டாள். அறியாத வயதில் அலைபாய்ந்த மனம்! இத்தனை ஆண்டுகளுக்குப் பின்னரும் நிறைவேற வாய்ப்பு இருப்பதாக எண்ணினாளே, சரியான பைத்தியக்காரி! கனவாய்க் கரைந்து போன அந்நினைவுகள் இனித் துளிர்க்கவே வாய்ப்பின்றிப் போயின.

வீடு வந்து சேர்ந்த அவளைத் தங்கவேல் வண்டியின் அருகில் வந்து, "வாங்க, அண்ணி," என்று வரவேற்கவும் அடைத்து வைத்திருந்த உணர்ச்சிகள் பீறிட்டெழுந்தன. முகத்தைப் பொத்திக்கொண்டு, "ஓஒஒ!" என்று அழுதுவிட்டாள்.

அனைவரும் அவளிடம் ஓடி வந்து, அவளை ஆறுதலாக அணைத்துத் தேற்றினர். நண்பனின் இழப்பால் அவனுடைய உறவினரைக் கண்டதும் துக்கத்தால் அழுவதாக எண்ணினர்; அஃதும் உண்மைதானே.

தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு இயல்பு நிலைக்கு வந்தாள். வேல் விழியார், அவளை அணைத்தபடி வீட்டிற்குள் அழைத்துச் சென்றார்.

"அம்மா, சுந்தரி! என் அண்ணன் மகன் கொலை உண்டது, எங்களுக்கு எல்லாம் பேரதிர்ச்சிதான். நீ அவனுடைய சிறு வயது தோழி; உன் நிலையும் எங்களுக்குப் புரிகிறது. அத்தோடு, இந்த வழக்கில் உன்னை ஈடுபடுத்திக் கொண்டது அவன் மீது நீ வைத்திருந்த அன்பைக் காட்டுகிறது. உன்னை எதற்கு வரச் சொன்னோம் என்றால், கனகவேலைப் பற்றி எங்கள் கருத்தைச் சொல்லத்தான். அது கொலையாளி யார் என்று அறிய உனக்கு உதவலாம் என்று எண்ணுகிறோம்.

இங்கிருக்கும் அனைவரோடும் அவனுக்குள்ள பழக்கம், தொடர்பு பற்றிச் சொல்லப் போகிறோம்.''

''அப்படியானால் நீங்கள் தனித்தனியாகச் சொல்ல வேண்டும். கூட்டாக இருந்து வாக்குமூலம் கொடுக்க வேண்டாம். ஒவ்வொருவராகச் சொல்லுங்கள். அம்மா, நீங்கள் முதலில் ஆரம்பியுங்கள்; நாம் அந்தத் தனியறைக்குச் செல்வோம்?''

வேல்விழியார்: ''சிறு வயதிலிருந்தே அவன் எங்கள் வீட்டிற்கு அடிக்கடி வந்து எங்களோடு அன்பாகப் பழகுவான்; அதிலும் அவன் மாமன் மேல் அவனுக்குத் தனிப் பிடிப்பு! படிப்பில் முன்னிலையில் வர வேண்டுமென்று அவனை ஊக்கியவர் அவர்தான். அவ்வப்போது நல்ல அறிவுரை கூறியும் நல்வழி காட்டியும் அவன் வளர்ச்சிக்குக் காரணமாக இருந்ததால் அவன் முன்னேறினான். அவர் மேல் பாசமாய் இருந்தான். எப்போதாவது நீயும் அவனுடன் பள்ளியிலிருந்து நேரே இங்கு வருவாய்; ஆனால், அவர்களுக்கு இடையே வளர்ந்த பாசத்தை நீ அறிந்திருக்க முடியாது,

அவனுக்கு எட்டு வயது இருக்கும்போதுதான் சாரதா பிறந்தாள். தங்கத்திற்கு ஆறு வயது; பொன்னுவேல், சாரதா பிறந்து ஓர் ஆண்டிற்குப் பிறகுதான் பிறந்தாள். தன் தம்பியையும் சாரதாவையும் அவன் தூக்கி விளையாடி மகிழ்வான்.

திருமணமாகி அவன் மனைவி இறக்கும் வரையில், அவளிடம் அதே பாசத்துடன்தான் நடந்து கொண்டான். ஆனால், அவன் போக்கு முற்றிலுமாய் மாறிச் சாரதாவை மணந்து கொள்ள வேண்டும் என்று அவன் தன் விருப்பத்தைச் சொன்னபோது, நாங்கள் அதிர்ந்து போனோம்!

சிறு வயதிலிருந்து தங்கமும் சாரதாவும் கணவனும் மனைவியும் என்று விளையாட்டாக விதைத்துவிட்ட பேச்சே,

அவர்கள் இருவரும் பெரியவர் ஆன பின் அன்பாகக் காதலாக மலர்ந்ததை எல்லாரும் உணர்ந்தோம்; அதனால், மேலும் வளரத் தூண்டுகோலாக இருந்து வந்தோம். இதில் கனக வேலுவிற்கும் பங்கு உண்டு. அதனால்தான், அதிர்ந்து போனோம். ஆனால், அவன் வெகு சாமர்த்தியமாக என் கணவரை அவன் ஆசைக்கு இணங்க வைத்துவிட்டான்.

என் கணவரும் அவனுக்குப் பரிந்து பேசிய போது, நானும் தங்கமும் சாரதாவும் பேரதிர்ச்சிக்கு உள்ளானோம். அவர் தன் மகளின் பிற்கால வாழ்வைப் பற்றிப் பேசினார்.

'கனகவேல் பெரிய தொழிலதிபர்; தங்கம் இப்போதே பொறியாளனாக ஆகியிருக்கிறான். வாழ்வைத் துவங்க இருக்கும் தங்கம் உயர் நிலைக்கு வருவதற்குள் சாரதாவிற்கு வயதாகிவிடும்! வாழ்வின் சுகங்களை அவள் இந்த இள வயதிலேயே துய்க்கட்டுமே,' என்றார்.

'தங்கமும் சாரதாவும் சிறு வயதிலிருந்தே அவனுக்கு இவள்தான், இவளுக்கு அவன்தான் என்ற நிலையை நாம்தான் வளர்த்தோம்; இப்போது திடீரென்று மாற்றிப் பேசினால், அவர் இருவர் மனமும் வேதனைப் படாதா? அத்தோடு, கனக வேலுக்கும் சாரதாவிற்கும் வயது வித்தியாசம் அதிகம் இல்லையா?' என்று நான் கூறியதை அவர் சிறிதும் பொருட்படுத்தவில்லை.

'சிறுவயதுக் கனவெல்லாம் போகப் போக மாறிவிடும். வயது வித்தியாசங்கூட அவ்வளவு அதிகமில்லை. நீ எதையாவது பேசிக் குழப்பாதே. அவனும் உன் அண்ணன் மகன்தான் என்பதை மறந்து விட்டாயா?'

'அப்பா! நீங்கள் பேசறது சரியில்லை. நான் தங்கம் மாமாவைத்தான் திருமணம் செய்து கொள்வேன். என் முடிவை என்றும் நான் மாற்றிக் கொள்ள மாட்டேன்.'

'சரி, சரி! பேச்சை இத்தோடு நிறுத்திக்கொள். நீ இன்னும் ஓர் ஆண்டு படிக்க வேண்டும்; படித்து முடித்தவுடன் மேற்கொண்டு பேசலாம்,' என்று பேச்சை முடித்தார்."

கண்ணப்பர்: "வந்து... இன்ஸ்...."

திரிபுரசுந்தரி: "பெயர் சொல்லியே பேசுங்கள் அப்பா. அதிகாரியாக நினைக்க வேண்டாம்."

கண்ணப்பர்: "என் பெண்ணின் நல்வாழ்விற்குத்தான் அவளைக் கனகவேலுக்குத் திருமணம் செய்து வைக்கச் சற்றுக் கடுமையாகவே பேசிவிட்டேன். ஆனால், என் மனைவி, மகள், தங்கவேல் மூவரும் என்னைக் கேவலமாகத் திட்டினார்கள். 'அவன் பணக்காரன் என்பதற்காகத்தானே இப்படி அலைகிறீர்கள்? பெண்ணின் மனத்தைப் புண்படுத்தி, அப்படி என்ன வாழ்க்கை வேண்டிக் கிடக்கிறது? பங்களாவில் வாழ்ந்து காரில் போய்வந்தால் மனம் நிறைந்த வாழ்க்கை கிடைத்து விடுமா? அந்தப் பையன் இப்போது பல பெண்களோடு பழகி வருகிறான்; அத்தோடு குடி வேறு! அவனோடு என் மகள்? அதுவும் அவனை விரும்பாத மகள்! எப்படி மகிழ்ச்சியாக இருக்க முடியும்?' என்று கூச்சல் போடுகிறார்கள். இப்போது நானும் அவனை நல்லவன் என்று சொல்லவில்லையே. நம் பிள்ளை, திருந்திடுவான் என்ற நம்பிக்கை இருந்தது. நாமும் பக்கத்தில்தாமே இருக்கிறோம்; விட்டுவிடுவோமா? நீயே சொல்லம்மா?"

'என்னுடைய நிலையை அறியாமல், அவர் என்னிடமே நியாயம் கேட்கிறாரே,' என்று எண்ணிக் கொண்டே கூறினாள்.

"எல்லாரும் உங்கள் உறவினர்; நீங்கள் சற்றுச் சந்தர்ப்பம், சூழ்நிலைகளை அனுசரித்துப் போயிருக்கலாம்."

"நீ இப்படிச் சொல்கிறாய்; ஆனால், தங்கம் எப்படிப் பேசிவிட்டான் தெரியுமா? 'சாரதா திருமணம் பற்றி

எனக்கெதிராக எந்த முடிவெடுத்தாலும் உன்னை மாமன் â¡ Á‹ ð£˜, èñ£† «ì ¡ ; அந்தக் கனகவேலை அண்ணன் என்றும் பார்க்க மாட்டேன். தொலைத்து விடுவேன்!' என்று கத்தினான். ஒரே சண்டையாகிவிட்டது."

"நீங்கள் தங்கத்தைச் சந்தேகிக்கிறீர்களா, அப்பா?"

"என்னம்மா, இப்படிக் கேட்டுவிட்டாய்? அவன் பெயர்க்கு ஏற்றாற்போல், தங்கமான பையன்! ஏதோ உணர்ச்சி வேகத்தில் பேசிவிட்டான். தனக்கு அண்ணன் சொந்தமாகத் தொழில் செய்ய உதவவில்லை என்ற கோபம் மனத்தின் மூலையில் இருந்திருக்கும்; அதை வெடித்துக் கொட்டித் தீர்த்துக்கொண்டு இருக்கலாம்.

அவன் எனக்கு மருமகனாக வர, நானும் பச்சைக் கொடி காட்டியவன்தானே! அதனால், என் மீது கோபத்தைக் கொட்டிவிட்டான். எந்த உள் நோக்கமும் இன்றி, உள்ளதை அப்படியே சொல்கிறேன் ; அவ்வளவுதான். நீ காவல் அதிகாரி, எப்படி எடுத்துக் கொள்வாயோ? எனக்குத் தெரியாது. ஒரு சிறு துரும்பு கிடைத்தாலும் அதைக் கொண்டே துப்புத் துலக்கும் பயிற்சி உங்களுக்கு உண்டு ; அறிவேன். அதனால்தான், நான் விரும்புகிறேனோ இல்லையோ, எனக்குத் தெரிந்தவற்றை எல்லாம் சொல்லிவிட்டேன் ; தப்பில்லையே?"

"விபரமும் சொல்லிச் சொன்ன விபரம் உங்களுக்கு எதிராக வந்துவிடக் கூடாதென்று அதற்கு விளங்கமும் சொல்லி விடுகிறீர்கள்! நல்லது, அப்பா. நான் மற்றவர்களை விசாரிக்கிறேன் ; நீங்கள் போங்கள்."

தங்கவேல்: "அண்ணி...?"

திரிபுரசுந்தரி: (இடைமறித்து) "தங்கம், இனி நீ அப்படி அழைக்க வாய்ப்பே இல்லை! இப்படி நீங்கள் கூப்பிட்ட போது, என் மனத்திற்குள் எவ்வளவு மகிழ்ந்திருப்பேன் தெரியுமா? அந்த வாய்ப்பு மீண்டும் கிடைக்கும் என்று மனப்பால் குடித்தேன் ; எல்லாம் கனவாய்ப் போயிற்றே!"

தங்கம்: “பொறுக்கவும், அண்ணி!”

திரிபுரசுந்தரி: “கிடக்கட்டும்; விடு. நீ சொல்ல வேண்டியதைச் சொல்.”

“மாமா என் மேல் குறையாய்ச் சொல்லி இருப்பார்.”

“நிறுத்து, தங்கம். நீ என்ன சொல்ல வேண்டுமோ அவற்றை மட்டும் சொல். மற்றவர் என்ன சொன்னார் என்று நீ யூகித்துச் சொல்ல வேண்டுவதில்லை.”

“சரி, அண்ணி. அவர் என் மேல் குறை சொல்லி இருந்தாலும் அதில் தவறில்லை. உம்ம்! கோபிக்காதீர்கள்; அன்று, அதாவது அண்ணன் கொலையுண்ட அன்று, அவர் வீட்டுக்குப் போயிருந்தேன்.”

திரிபுர சுந்தரி அவனை ஆச்சரியத்தோடு நிமிர்ந்து பார்த்தாள். இது அவளுக்குப் புது செய்திதானே!

“உண்மைதான், அண்ணி. போய், அவன் மேல் இருந்த கோபத்தை எல்லாம் வார்த்தைகளாக்கிக் கொட்டித் தீர்த்துவிட்டுத்தான் வந்தேன். இப்போது நான் சொல்லப் போகும் வார்த்தைகள் எனக்கு எதிராகத் திரும்பக்கூடும்; என்ன செய்வது? எவ்வளவோ பாசத்தோடு எங்களை வளர்த்தான்; அவனை, ‘மனிதனாடா நீ? காமப் பிசாசே! எனக்கும் சாரதாவுக்கும் இடையில் நீ தடையாக வந்தால், அண்ணன் என்றும் பார்க்க மாட்டேன்; சுட்டுப் பொசுக்கி விடுவேன்,’ என்று கத்தியதோடு நில்லாமல், அவன் அலுவலக அறைக்குள் இருந்த அவன் துப்பாக்கியை எடுத்து மிரட்டிவிட்டு வந்தேன்.”

சொல்லிவிட்டு ‘ஓஒ’ வென்று அழுதான்.

“அவன் துப்பாக்கி வைத்திருந்த இடம், உனக்கு எப்படித் தெரியும்?”

"அது எங்கள் எல்லாருக்கும் தெரியும்! அதை விளையாட்டுப் பொம்மை போல, எங்களுக்குக் காட்டுவான். எங்களைக் கடிந்துகூட பேசமாட்டான்! நாங்களும் அவனை எதிர்த்தோ, மறுத்தோ எதுவும் பேசமாட்டோம். அப்படிப் பட்டவனை நான்...நான் துப்பாக்கியைக் காட்டி,?" விம்மினான்.

"கனக்கு அப்போது எப்படி நடந்து கொண்டான்?"

"போடா! போடா! பிறகு பேசிக்கலாம்; இல்லை, சுட வேண்டுமானால் இப்போதே சுட்டுவிட்டுப் போ' என்று சற்றும் அலட்டிக் கொள்ளாமல் புன்னகையோடுதான் பேசினான். அவன் கண்களை நேருக்கு நேர் சந்திக்க முடியாமல், நான் வெலவெலத்துப் போய்ப் பேசாமல் திரும்பிவிட்டேன்."

"துப்பாக்கியை என்ன செய்தாய்?"

"திரும்பிய பின்னர்த்தான், துப்பாக்கி என் கையிலேயே இருப்பதை உணர்ந்தேன். அவனும் சிரித்துக்கொண்டே, 'டேய், துப்பாக்கியை வைத்துவிட்டுப் போடா. உன் கை ரேகை அதில் இருக்கும்; எனக்கு ஏதாவது ஆனால், நீதான் என்னைச் சுட்டுவிட்டாய் என்று மாட்டிக் கொள்வாய்,' என்று சொல்லிவிட்டு, மேலும் கடகடவெனச் சிரித்தான். நான் பட்டென்று துப்பாக்கியை மேசைமேல் டக்கென்று வைத்து விட்டுத் திரும்பினேன். இரண்டு அடிகள் எடுத்து வைத்த பின்னர், மெல்லத் திரும்பிப் பார்த்தேன். அவன் துப்பாக்கியைத் தன் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டிருந்தான். 'உன் வெறுப்பான கைரேகைகள் என் துப்பாக்கியில் இருக்க வேண்டாம்,' என்று சொல்லியபடி, என்னைப் பார்த்துச் சிரித்தான். நான் விரைந்து வெளியே வந்துவிட்டேன்."

“தங்கம், இதையே நான் காவல்துறைக் கோணத்தில் சொல்கிறேன். துப்பாக்கியில் இருந்த உன் கைரேகைகளை நீயே அழித்துவிட்டு மேசைமேல் வைத்துவிட்டாய்; இஃது எப்படி?”

“அண்ணி, நீங்கள் என்னைச் சந்தேகப்படுகிறீர்களா?”

“போடா, பைத்தியக்காரா! எனக்கு உன்னையும் தெரியும்; உன் அண்ணனையும் தெரியும். போதும் நீ போய் உன் வேலையைப் பார். சாரதாவை அனுப்பு.”

சாரதா வரும்போதே, “உம்ம், உம்ம்,உம்ம்” என்று அழுது கொண்டுதான் வந்தாள்.

“போதும், சாரதா. முன்னரே நீ நிறைய அழுது தீர்த்திருப்பாய்; நேரே உன் வாக்குமூலத்தைச் சொல்.”

அவள் மேல் திரிபுர சுந்தரி கொண்டிருந்த அடிமன வெறுப்பு வெளிப்பட்டது. இவள் காரணமாகத்தானே கனகவேலின் மேல் அனைவரும் வெறுப்பை வளர்த்திருந்தனர்!

சாரதாவும், ‘அக்கா’ என்று ஆரம்பித்துச் சொல்லிக் கொண்டு போனாள். ஒரு கட்டத்தில் திரிபுர சுந்தரி திகைத்துப் போனாள். அந்தத் திகைப்பிலிருந்து மீளாமல், ‘உம்., உம்.?’ என்று கேட்டுக் கொண்டிருந்தாள். அவளது கவனம், சாரதா சொல்வதில் முழுமனத்துடன் ஈடுபடவில்லை என்பது தெற்றெனத் தெரிந்தது.

“போதும், சாரதா. நான் மீண்டும் ஒருநாள் தெளிவாகக் கேட்டுக் கொள்கிறேன். சற்றுக் களைப்பாக உணர்கிறேன். இன்னொருநாள் வருகிறேன்.”

கூடத்தில் இருந்த மற்றவரைப் பார்த்து,

“அம்மா, நான் இன்னொரு நாள் வருகிறேன்,” என்றாள்.

“அண்ணி, நான்…” என்று இழுத்தான் பொன்னுவேல்.

“இன்னொரு நாள் கேட்டுக் கொள்கிறேன்டா. உன் வேலை கெட்டிருந்தால், பொறுத்துக்கொள்.”

“ஐயையோ! அண்ணி, உங்கள் சௌகரியந்தான் முக்கியம். நீங்கள் எப்போது சொன்னாலும் வருகிறேன்.”

கனத்த இதயத்தோடு அவள் செல்கிறாள் என்பதைச் சாரதா ஓரளவு உணர்ந்திருந்தாள். அப்படி அவள் என்ன சொன்னாள்?

அன்று இரவு முழுவதும் திரிபுர சுந்தரி தூங்கவே இல்லை.

சாரதா சொன்ன எதிலும் அவள் சிறிதும் ஐயம் கொள்ளவில்லை. தான் கற்பனையில் வடித்து வைத்திருந்த கனகவேல், இப்படி அடியோடு காமுகனாக மாறியிருப்பான் என்று அவள் சற்றும் எண்ணியதில்லை. ‘மரகதவல்லிதான் என் மனைவி; மற்றவர் எல்லாம் வந்துபோகும் இன்ப வல்லியர்தாம்!’ என்று அவன் சொன்னதை, மனைவியை இழந்த எந்த ஆணும் முதலில் வீராப்பாகப் பேசும் வார்த்தைகள் என்றே முதலில் எண்ணி இருந்தாலும் பின்னர் அவன் ஷெர்லியிடம் அவ்வளவு மிருகத்தனமாக நடந்துகொண்டதைக் கேட்டதும் சற்று அதிர்ந்து போனாள் என்றால், இப்போது சாரதா சொன்னவற்றைக் கேட்டதும் அவன் தன் மனைவியைப் பற்றிக் கூறிய கருத்து அவனது ஆழமான மன உறுதியைத்தான் வெளிப் படுத்தியது என்றே கருதினாள்.

# 11. கனகவேல் - மரகதவல்லி

அவ்வப்போது நல்ல மகிழ்வான மன நிலையில் இருக்கும் போது, தன் மனைவிக்குத் தன் மீது இருந்த காதல் ஈடுபாட்டையும் காதல் கலையில் அவள் காட்டிய வேகத்தையும் அவன் காதல் சுவை சொட்டச் சொட்டச் சொல்லும் போது சற்று வெட்கமாக இருந்தாலும் திரிபுர சுந்தரி ஆவலோடு கேட்பாள். அதைவிட, ஒரு பெண் நாணம் வெட்கம் கொஞ்சமும் இன்றி இப்படி எல்லாம் பேசுவாளா? நடந்து கொள்வாளா? ஒருவேளை, தன்னை ஈர்க்க இவனே இட்டுக் கட்டிக் கட்டுக்கதையாய்ச் சொல்கிறானா? ஐயம் எழும். நினைவலைகள் தொடர்ந்தன...

இரண்டே ஆண்டுகளில் ஒரு காகிதக் கடைக்கும் ஒரு அச்சகத்திற்கும் முதலாளி ஆகிவிட்டான் கனகவேல். பத்தொன்பது முடிந்து இருபது வயது ஆனபோது கனகவேலின் தாய் அவனுக்குத் திருமணம் செய்திட முடிவெடுத்தார். முக்கியமாக, வருகின்ற மருமகள் தனக்கு உதவியாக இருப்பாள்; இருக்க வேண்டும் என்பதே அவளது உள்ளக் கிடக்கை. மகனும் உடனே ஒப்புக்கொண்டான்.

ஆண்பிள்ளைகட்கு அவ்வயது சிறியதும் இல்லாமல் பெரியதும் இல்லாமல் ஓர் இரண்டுங் கெட்டான் வயதுதான். வருகிறவள் இவனினும் சற்றுச் சிறியவளாகத்தானே இருப்பாள்? மகனுக்கு ஒரு விளையாட்டுப் பொம்மையாகவும் தன் இழுப்பிற்கெல்லாம் ஆடும் பொம்மையாகவும்தான் இருப்பாள்; அப்படி இருக்கும்படி ஆக்கிவிடலாம். தாயர்க்குத்தாம் எவ்வளவு நல்ல உள்ளம்?

பொதுவாக எல்லாத் தாய்மாரும் அப்படித்தானே? தன் மகனுக்கு இன்பம் மட்டும் தந்துவிட்டுத் தனக்கு அடிமையாக இருக்கவேண்டும்; அவ்வளவே. தன் சொல் கேளாவிட்டால், அவள் கணவனையும் நெருங்க முடியாமல் செய்துவிடுவர். அப்புறமென்ன? மாமியார் சொல்தான் மந்திரம்.

இந்த நேரத்தில்தான், அந்தக் காகிதத் தொழிற்சாலை விற்பனைக்கு வந்தது. தாயும் தம்பிகளும் பண உதவி செய்ய மறுத்துவிட்ட நிலையில், கனகவேல் அச்சகத்திற்கு அருகேயே தனி வீடு பார்த்துக்கொண்டு போய்விட்டான். அம்மா எவ்வளவோ சொன்னார்.

'பெரியவனே! கல்யாண முயற்சியில் இருக்கும் போது, இது கூடுதல் செலவுதானேடா? திருமணம் பேசி முடித்துவிட்டால் பெண் வீட்டார் மூலம்கூட பணத்தைக் கேட்டு வாங்கிக்கலாமே; அதற்காக நீ ஏன் தனிக்குடித்தனம் - அதுவும் தனியனாகப் போக வேண்டுமா? கல்யாணத்திற்குப் பிறகு மனைவியுடன் போகலாமே!'

ஆனால் கனகு, 'உம்! நன்றாக இருக்கும்! வந்தவள் வந்ததும் வராததுமாய்க் கணவனை மயக்கித் தனிக்குடித்தனம் போய்விட்டாள் என்று பேசுவதற்காகவா?' என்று வராத மனைவிக்கு அப்போதே வக்காலத்து வாங்கிப் பேசினான்.

வேலம்மையார் விக்கித்துப் போய்விட்டார். தன் மகன் இரண்டும் கெட்டான் அல்லன்; சிந்தித்து முடிவு செய்பவன்தான் என்று உணர்ந்து கொண்டார். தாயையும் தம்பியையும் அவன் ஒதுக்கி வைக்கவில்லை என்றதும் அவரும் அடங்கிப்போனார்.

திருவண்ணாமலையில் நல்ல வசதியும் செல்வாக்கும் உள்ள ஒரு குடும்பத்தில் முதன்முதல் பெண் பார்க்கப் போயினர்.

எழிலொழுகும் முகம், தளதளவென இளமை செழித்த மேனி, பதினாறு வயதும் நிரம்பாத பருவ மங்கை!

அவன் அவளைப் பார்த்தான்; அவள் அவனைப் பார்த்தாள். 'ஆஅ! இவ்வளவு பெரிய விழிகளா?' உண்மையில் அவளின் விழிகளின் வழியே நுழைந்து, அவள் இதயத்தில் புகுந்து விட்டான் என்பதை அவன் எப்படி அறிவான்?

"உன் பெயர் என்னம்மா?" வேலம்மை கேட்டார்.

"மரகதவல்லி, அம்மா," என்றவள் குறும்பாகத் தொடர்ந்தாள்.

"அம்மா, நான் ஊமையில்லை; செவிடில்லை; கால் ஊனமில்லை. உங்களுக்கு உதவியாகக் கைவேலைகள் நன்றாகச் செய்வேன்!" என்று கூறிவிட்டு, அவர் காதில்மட்டும் படும்படியாக மெல்ல, "உங்கள் பிள்ளை எப்படி?" என்று கேட்டுவிட்டுக் கலகலவென்று சிரித்தாள். வேலம்மையும் சிரித்துவிட்டார். இவளது கலகலப்பான குறும்புப் பேச்சைக் கேட்டுக் கனகவேல் அசந்து போனான்.

இரு வீட்டினர்க்கும் அப்போதே பிடித்துவிட்டதால், மற்ற சம்பிரதாயப் போக்குவரத்தை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டுக் கைத்தாம்பூலம் மாற்றிக் கொண்டார்கள். கை நனைத்து விட்டுத்தாம் போக வேண்டும் என்றதும் விருந்து ஏற்பாடாகிக் கொண்டிருந்தது.

"அம்மா, சும்மா இப்படி உட்கார்ந்திருப்தற்குப் பதில் கோவிலுக்குப்போய் வந்து விடுகிறேன்."

கனகவேல் புறப்பட்டான். இதைக் காதில் வாங்கிக் கொண்ட மரகதம், தன் அம்மாவிடம்,

"அம்மா, முதன்முதலாகக் கோவிலுக்குப் போகும் போது, கிழக்குக் கோபுர வாசல் வழியாகப் போகச்

சொல்லுங்கள்," என்று கனகவேலின் காதில் விழும்படியாகச் சொன்னாள். அவள் கூறியதில் ஏதோ உள் நோக்கம் இருப்பதாக அவனுக்குத் தெரிந்தது. அப்படியே அவள் மெல்லத் தன் அம்மாவிடம்,

"பின் வீட்டு மீனாவிடம் போய்ச் சொல்லிவிட்டு வந்துவிடுகிறேன், அம்மா!" என்று சொல்லிவிட்டு அம்மாவின் பதிலையும் எதிர்பாராமல், துள்ளிக்கொண்டு தோட்டத்துப் பக்கம் ஓடினாள்.

'கல்யாணம் என்றதும் எப்படித் தலைகால் புரியாமல் குதிக்கிறாள்!' பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும் எண்ணிக் கொண்டார் அவளின் தாய்.

கோவிலின் கிழக்கு வாசல் வழியே தனியனாக வந்த கனகவேலை நோக்கி ஒரு பெண் வந்து அவன் எதிரே நின்றாள். அவள் மீனாட்சி என்னும் மீனா. அவளைக் கண்டதும் கனகவேலின் கைகால்கள் உதறல் எடுத்தன. மீனாட்சி சிரித்துக் கொண்டே,

"என்னங்கய்யா! கை கால்கள் உதறுகின்றன?" என்றாள்.

அவன் அமைதியாகக் குழப்பத்தோடு நின்றிருந்தான்.

"நான் யார் என்று தெரிந்தால்தான் பேசுவீர்களோ?"

"இல்லை... வந்து ., இந்த ஊரில் எனக்கு யாரையும் தெரியாது. நீங்கள் யார்?"

"மரகதத்தை மட்டும் தெரியுமா?"

"ஊகூம்; எனக்குத் தெரியாது."

"மரகத வல்லியைத்தான் தெரியுமோ?"

அவன் விழிவிழி என்று விழித்தபடி, வழிவழி என்று வழிந்தான்.

“ஏய், மரகதம்! உன் ஆளுக்குப் பதில் சொல்ல, நீயே வந்துவிடு; என்னால் ஆகாது. ஓர் ஆண்பிள்ளை இப்படியா உதறுவார்? உளறுவார்? நான் என்ன சிங்கமா? புலியா? கடித்துத் தின்றா விடுவேன்? வாடி, நீயாச்சு; இவராச்சு! இடையில் நான் எதற்கு?”

மரகதம் அவன் எதிரில் வந்து, வாயிலின் நெடிய நிலைக்கருகில் நின்றாள். அவள் அந்த நிலையில் கலை நுணுக்கத்தோடு ஒயிலாக நிற்கும் நிலையில், வடிக்கப்பட்ட அழகிய பெண்ணின் சிலையை மறைத்தபடி நிற்க நேர்ந்தது.

“நீ, நீ! நீங்கள் எப்படி இங்கே.,?

நடுங்கிப்போன கனகவேல் கேட்டான்.

“எல்லாம் உங்களைப் பார்க்கத்தான்; பார்த்துப் பேசத்தான். நீங்களானால் இப்படி நடுங்குகிறீர்களே! உங்கள் அக்கா, தங்கைகளோடு எப்படிப் பேசுவீர்கள்?”

“எனக்கு அக்கா தங்கைகள் கிடையாது; இரண்டே தம்பிகள்தாம்.

“சுத்தம்! ஏதோ ஆசையோடு பேசுவீர்கள் என்று வந்தால்...; ஏதேது? நீங்கள் என்னோடு சரளமாகப் பேச இரண்டு ஆண்டுகளாவது ஆகும் போலிருக்கிறது! அப்படித்தானோ?”

“அப்படி இல்லை; வந்து...”

“சரி, சரி; நீங்கள் பேசுவற்குள் பொழுது மறைந்துவிடும். நான் போய் வருகிறேன்.”

சரேலென விலகிச் சென்றுவிட்டாள். அவள் நின்றிருந்த இடத்திற்குப் பின்னால், அந்த அழகு சிலை அவனை ஒயிலாகப் பார்த்துக் கொண்டிருந்தது; அவனும் பார்த்தான். திடுக்கிட்டான்! யாராவது தான் அந்தச் சிலையைப்

பார்ப்பதைக் கண்டால், என்ன நினைப்பார்கள்? நாணினான் ; மெல்ல நகர்ந்து சென்றுவிட்டான். ஆனால், அவன் மனத்தில் மரகதமும் அந்தச் சிலையும் மாறிமாறித் தோன்றி, யார் அழகி என்று போட்டியிடுவதுபோல் இருந்தது.

வந்தவளுடன் ஒரு வார்த்தையும் பேசாமல் இருந்ததை எண்ணி, வெட்கப் பட்டான். அதுவும் அவளிடம் பேசுவான் என்று எதிர்பார்த்ததாக அவள் சொன்னதை நினைத்த போது, நெற்றியில் அடித்துக் கொண்டான்.

எல்லாரிடமும் விடை பெற்றுக்கொண்டு கிளம்பும்முன், மரகதத்தை அவன் கண்கள் தேடின. அவள் அவனுக்குக் காட்சி கொடுக்கவே இல்லை. சரியாகப் பழிவாங்கிவிட்டாள். கோபம் இருக்காதா பின்னே? அவன் தன்னுடைய முட்டாள் தனத்தை நினைத்து நொந்து கொண்டு எல்லாருடனும் ஊர் திரும்பினான்.

மரகதவல்லியும் தன்னைப் பார்க்க அவன் கண்கள் அலைந்ததை மறைவிலிருந்து கண்ட பின்னும் அவன் முன் வராமல் தவிர்த்துவிட்டோமே என்று பின்னர் வருந்தத்தான் செய்தாள்.

# 12. திருமணம்

நெய்வேலி நிலக்கரி நிறுவனத்திற்குச் சொந்தமான பெரிய திருமண மண்டபத்தில், கோலாகலமாகத் திருமணம் நிறைவேறியது. எக்கச்சக்கக் கூட்டம்! எல்லாரையும் கவனிப்பதற்கும் அவர்களிடம் பேசுவதற்குமே நேரம் முழுவதும் போய்விட்டது. தனிமையில் பேசும் வாய்ப்பே இருவர்க்கும் கிடைக்கவில்லை. கிடைக்கவில்லையா? அல்லது அவள் தவிர்த்தாளா? ஊகூம்! இல்லை; அவள் பார்வையும் அவனையே சுற்றிச் சுற்றி வந்ததை அவனும் கவனித்தான். அவன் தன் நண்பர் சிலர்க்கு அவளை வழிந்து வழிந்து அறிமுகம் செய்து வைத்த போது, பொதுவான பேச்சுக்கள்தாம் நிகழ்ந்தன.

தங்கள் பொதுவான பழைய வீட்டில்தான் ஓய்வாக எல்லாரும் ஒவ்வொரு அறையில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். ஒரு குறுகுறுப்புடன் வீட்டைச் சுற்றிச்சுற்றி வந்தான். அவன் கண்ணில் அவள் படவே இல்லை. அப்போது அத்தையின் மகள் சாரதா ஓடிவந்து,

"மாமா, அக்காவைத் தேடுகிறீர்களா? அவர், இங்கே எங்களோடு பேசிக்கொண்டிருக்கிறார்; வரச் சொல்லவா?" என்றாள்.

அவன் அலைவதைக் கண்ட யாரோ சாரதாவை ஏவி விட்டுக் கேலி செய்திருப்பரோ? அவர்கள் நேரம்!

மற்றோர் அறையில், இளவயது நண்பர்கள் வட்டமாக அமர்ந்து கொண்டு "ரம்மி" ஆடிக்கொண்டு இருந்தார்கள்.

அவர்களோடு, அவனுடைய மாமன் கண்ணப்பரும் ஆடிக்கொண்டிருந்தார். அவர் கலகலப்பாகப் பழகக் கூடியவர்; இளையவர்களோடு சமமாக அமர்ந்து சீட்டு ஆடி மகிழ்ந்திருந்தார். கனகவேலைக் கண்டதும் அவன் நண்பர்கள்,

“டேய், மாப்பிள்ளை! வாடா, ஒரு கை போடு. பிகு பண்ணிக்காதேடா. இத்தோடு உனக்கு இராத்திரிக்குத்தான் வேலை.” என்று கிண்டலடிக்க, எல்லாரும் கொல்லென்று சிரித்தனர். என்ன செய்ய? எல்லாம் அவர்கள் நேரம்! உட்கார்ந்து விட்டான்.

ஒரு மூன்று சுற்று முடிந்தது. எல்லா ஆட்டத்திலும் கனகவேல்தான் வென்றான். மாமா உட்பட அனைவரும் “திருதிரு” வென விழித்தனர்.

“டேய், கல்யாண மாப்பிள்ளையை உட்கார வைத்தது தப்பாய்ப் போச்சே?” என்றான் ஒருவன்.

அந்த நேரம் பார்த்து அங்கு ஒரு சிறுவன் ஓடி வந்து கண்ணப்பரைப் பார்த்துச் சொன்னான்:

“மாமா, அத்தை உங்களை உடனே வரச் சொன்னாங்க.”

“எதுக்கடா?”

“தெரியாது, மாமா. அவசர வேலையாம்.”

எழுந்து போக மனமின்றி, “ஒரு சுற்று எனக்கு விட்டுவிட்டுப் போடுங்கள்: வந்து சேர்ந்து கொள்கிறேன்,” என்று சொல்லிவிட்டு வெளியே போனார்.

இன்னொருவன் கிண்டலடித்தான்:

“ஏன்டா, கல்யாணமான இன்றைக்கே இந்த வெளு வெளுக்கிறாயே, இனி உன் வாழ்க்கையில் நீ எங்கோ போகப் போறேடா.”

நடப்பு ஆட்டம் முடியுமுன்னே, வேலையாய்ப் போன மாமா திரும்பி வந்துவிட்டார். ஒருவன் கேட்டான்:

“என்ன, மாமா? இப்போதான் போனீர்கள்; அதற்குள் திரும்பி வந்துவிட்டீர்கள்?”

“மாமி கூப்பிட்ட வேலை முடிந்தது; வந்துவிட்டேன்.”

அதே குறும்புக்காரன் கேலியான குரலில் கேட்டான்:

“அதற்குள்ளாகவா?

ஓரிரு வினாடிகள் கழித்துத்தான் அவனுடைய குறும்புப் பேச்சின் பொருள் எல்லார்க்கும் புரிய வந்தது. “கொல்” என்ற பெரிய சிரிப்பு அலை அங்குப் பரவியது. மாமா நல்ல சுவைஞர்; அவர்கள் கிண்டலை அவரும் உணர்ந்து மகிழ்ந்தார்.

“டேய், பசங்களா! என்னையா கிண்டல் செய்கிறீர்கள்? நான்ஆரம்பித்தால், நீங்கள் தாங்கமாட்டீர்கள்.”

கனகவேல் எழுந்துகொண்டான். ஒரு நண்பனிடம் தான் வென்ற பணத்தை எல்லாம் கொடுத்து,

“இதை வைத்துக்கொண்டு, எப்படி எல்லாம் விருந்தைக் கொண்டாட வேண்டுமோ, அப்படியே நீங்கள் அனைவரும் கொண்டாடிக் கொள்ளுங்கள்; மாமா உங்களோடு சேர்ந்து கொண்டால், எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால், அத்தைக்கு அவர்தான் பதில் சொல்லிக் கொள்ள வேண்டும். வருகிறேன்.”

*******

அதே வீட்டின் மற்றோர் அறையில், முதல் இரவுக்கான அலங்காரங்களைப் பார்த்துப் பார்த்துச் சிறப்பாக அழகு செய்து கொண்டிருந்தனர்.

அந்த வேளையும் வந்தே விட்டது!

# 13. முதல் இரவு

தொன்றுதொட்டு நடக்கும் நிகழ்வுகளைப் போலத்தாம் கட்டிலில் கனகவேல் மரகதத்திற்காகக் காத்திருந்தான். எதற்கு?

மரகதத்தின் தோழியர், அவளை அறைக்குள் தள்ளி அனுப்பி வைத்து, வெளிக்கதவை வெறுமனே மூடிச் சென்றனர்.

கனகவேல் உட்பக்கம் தாழ் போடலாம் என்றெண்ணி எழுந்தான். ஆனால், அவனுக்கு அந்தத் தொல்லைகூட வைக்காமல், மரகதமே உள் தாழ்ப்பாள் போட்டுவிட்டாள். சரி, போய் அவளை அழைத்து வரலாம் என்று எண்ணியபோது, அவளே பட்டுப் புடவை சரசரக்க, மெட்டி ஒலி கிணுகிணுக்கக் கட்டிலை நோக்கி வந்து கொண்டிருந்தாள். கட்டிலின் அருகில் வந்ததும் 'உட்கார்' என்று சொல்ல நினைக்குமுன், அவளாகவே அவன் அருகில் அமர்ந்து கொண்டாள்.

அவன் கைகள் சற்றே நடுங்கியபடி, மெல்ல அவள் தோள்களைத் தொட்டான். அவள் உடல் சிலிர்த்தது.

அடுத்து என்ன செய்யப் போகிறான் என்ற கற்பனையில் அதற்கு அணியமாக அவள் இருந்தாள். நோகாமல் அவளை நடுங்கியபடி அணைத்தான். ஏன் இறுக அணைக்க வில்லை? அவளுக்கு ஏமாற்றமாய் இருந்தது. அவன் பேசினான்.

"உன்னை மரகதம் என்று அழைக்கட்டுமா?"

'ரொம்ம்ப முக்கியம்! பேர் சொல்லிக் கூப்பிடா விட்டால், ஒன்றும் ஆகாதா!' என்று நினைத்துக் கொண்டே "உம்" என்றாள்.

“நீ என்னை எப்படிக் கூப்பிடுவாய்?”

“மாமான்னு கூப்பிடட்டுமா, மாமா?”

தீர்மானம் நிறைவேறி விட்டது.

“மரகதம்!”

“மாமா!”

‘இனிமேலாவது, தொடங்குவாரா?’ அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் குழப்பத்தில் இருந்தான்.

“பட்டுப் புடவை அழகா இருக்கு உனக்கு.”

உளறலின் முதற்கட்டம்.

“புரிகிறது; புரிகிறது! விலையுயர்ந்த இந்தப் புடவை கசங்கி விடக்கூடாது; அப்படித்தானே?”

மெல்ல எழுந்து புடவையைக் கலைந்து, அழகாகப் பொறுமையாக முன்பு இருந்த மாதிரியே மடித்து (மடிப்பதற்குக்கூட அவன் உதவவில்லை.) மேசைமேல் வைத்துவிட்டு, மெல்ல அவன் அருகில் வந்தாள்.

கனகவேல் அவளை அந்தக் கோலத்தில் பார்த்து அதிர்ந்து போனான். மெல்ல மெல்ல அவன் மனத்தைக் கரைத்தாள். ஒரேயொரு வேலையை மட்டுமே அவன் செய்தான். ஆம்; விளக்கை அணைத்தான்; அவளையும் அணைத்தான்.

மறு நாள் தோழிகள், உறவினர் முன்னிலையில் போலியான வெட்கத்தைக் காட்டிவிட்டுப் போய்விட்டாள். அவள் மனத்தில் குதூகலத்துக்குப் பதிலாகக் குழப்பமே நிறைந்திருந்தது.

முதலிரவில் எது நடக்கவேண்டுமோ, அது நடந்தது; அது மட்டுந்தான் நடந்தது! முத்தமில்லை; தழுவலில்லை; தடவலில்லை. அவற்றை எல்லாம் எதிர்பார்த்த மரகதம், மனம் மறுகிப் போனாள். 'இவரை இப்படியே விட்டுவிடக் கூடாது. சொல்லித் தெரிவதில்லை மன்மதக்கலை என்பார்கள்; பச்சை மண்ணான இவர்க்குப் பள்ளியறைப் பாடங்களைச் சொல்லித்தாம் கொடுக்க வேண்டும். மலரில் தேன் குடிக்கத் தேனீக்குக் கற்பிக்க வேண்டும்; எப்படி?'

வெறும் சட்டையும் பாவாடையுமாக நெஞ்சு நிமிர்ந்த எழில் அழகோடு இருந்தவளைப் பார்த்ததும் பாய்ந்து அணைப்பான் என்று எண்ணியதற்கு மாறாக, நேராகப் பார்க்கவே கூசினான். திருவண்ணாமலையில் கோபுர வாசலில் இருந்த சிலையைப் பார்த்தபோதுகூட, இப்படித்தான் கூச்சத்தோடு அவன் நெளிந்தது அவள் நினைவுக்கு வந்தது.

# 14. மஞ்சுகுட்டி

திரிபுர சுந்தரியின் எண்ண ஓட்டம் கலைந்தது. தன் அலுவலக வேலைகளைக் கவனிக்கத் தொடங்கினாள். அப்போது காவலர் மாலதி, "அம்மா, கனகவேல் ஐயா வீட்டிலிருந்து சமையல்காரரின் மனைவி மஞ்சுகுட்டி வந்திருக்கிறார்; உங்களைப் பார்க்க வேண்டுமாம்," என்றாள்.

"கூட யார் வந்திருக்கிறார்கள்?"

"யாருமில்லை. அவர் மட்டுந்தான் வந்திருக்கிறார். இங்கு வந்து ஒரு மணி நேரம் ஆயிற்று."

திரிபுர சுந்தரி சிந்தித்தாள். 'இவள் என்ன புதுக் கதை கொண்டு வந்திருக்கிறாளோ?' மஞ்சு குட்டியை அவள் முன்னரே அறிவாள்.

"சரி, வரச் சொல்." என்றாள்.

மஞ்சுகுட்டி உள்ளே வந்து அவள் எதிரே நின்றாள்.

"வா, மஞ்சு! என்ன செய்தி? எங்கே உன் கணவர்?"

"அம்மாவிடம் ஒரு முக்கிய சேதி சொல்ல வேணும்; அதுதான். நான் வந்தது என் வீட்டுக்காரருக்குத் தெரியாது; தெரியவும் வேண்டாம்."

மஞ்சுவை ஆச்சரியமாய்ப் பார்த்தாள்.

"சரி, சொல். நாராயண ராவும் நீயும் காதல் திருமணத் தம்பதியர் ஆயிற்றே; எப்படி என்று சொல்."

"ஆமாம், அம்மா. அவர் கன்னட பிராமிணர்; நான் மலையாளி, மஞ்சுகுட்டி மேனன். நெய்வேலியில் ஓர் உணவு

விடுதியில் ஒன்றாக வேலைசெய்தோம். அங்கு நடக்கும் திருமணங்களில் சமையல் வேலைக்குக் குழு ஒன்று வைத்து நடத்தி வந்தோம். அப்படி, இப்படிப் பழக்கம்; நெருக்கமாகிக் கல்யாணம் செய்துகொண்டோம். கனகவேல் ஐயா, தம் திருமணத்திற்கு முன் ஒவ்வொரு சமயம் நண்பர்களோடு எங்கள் உணவு விடுதிக்கு வந்து உணவருந்தி இருக்கிறார்.

அவர்க்குத் திருமணமாகி அச்சகத்திற்கு அருகிலேயே தனிக்குடித்தனம் வந்தபோது, தமக்கு நல்ல சமையல் ஆள் வேண்டும் என்று எங்கள் குழுத் தலைவரிடம் கேட்டிருக்கிறார். அவர் எங்களைப் பரிந்துரைத்தார். வீட்டருகே தனி வீடு. இருவர்க்கும் சமையல் வேலை; அத்தோடு, அவர் மனைவியை அக்கறையாகக் கவனித்துக் கொள்ள வேலைக்காரி வேண்டும். அதற்காகத்தான் இருவர்க்கும் வேலை; எங்களுக்கும் மகிழ்ச்சி. எட்டு ஆண்டுகளாக வேலை செய்து வந்தோம்; இனி எங்கள் நிலை எப்படியோ? ஆனால், நான் சொல்ல வந்தது இஃது இல்லை. வேறு எங்காவது வேலை தேடிக் கொள்ள முடியும்?''

''வேறு என்ன சொல்ல வந்தாய்?''

திரிபுர சுந்தரிக்கு நெஞ்சு படக்படக் என்று அடித்துக் கொண்டது. அவளுடைய உள்ளுணர்வு சொன்னதை உறுதியாக்கிற்று மஞ்சுவின் வாக்கு மூலம்.

''பெயருக்கு ஏற்றாற்போல், அவர் தங்கமான மனம் கொண்டவராகத்தாம் இருந்தார். ஒரு சமயம் அம்மாவுக்குச் சோர்வும் மயக்கமுமாய் இருந்ததென்று சொல்ல, நாங்கள் யாரும் அவரை ஒழுங்காகக் கவனிக்கவில்லை என்று பெரிய ஆர்ப்பாட்டம் பண்ணி, எங்களை எல்லாம் ஓட ஓட விரட்டினார். கடைசியில் எல்லாரும் எதிர்பார்த்தது போலவே அம்மா கருவுற்று இருந்ததுதான் காரணம் என்றறிந்து, ஒரே ஆட்டம் போட்டார்.

மனைவியைத் தம் கையில் பூப்போலத் தாங்கினார் என்றால், உண்மையிலேயே தம் கைகளால் தூக்கிக் கொண்டுதான் போவார்! அந்த அம்மாவும் அவர் கழுத்தைக் கட்டிக்கொண்டு மகிழ்வார். பிறர் பார்க்கிறார்களே என்று சுற்றுப் புறத்தைப் பற்றிக் கொஞ்சமும் கூச்சப்படாமல் கொஞ்சிக் கொள்வர். அந்தக் காட்சியைக் கண்ட எங்களையும் காமக் கிளர்ச்சி தொற்றிக் கொள்ளும்.

ஆயினும் நாங்கள் மகிழ்வது எங்கள் வீட்டில் தனிமையில்தான். ஒரு சில நேரங்களில் தோட்டத்தில் புல் தரை. இப்படித்தான்..."

"என்ன? என்ன சொன்னாய்?"

திரிபுர சுந்தரி கேட்டாள்.

"எதைக் கேட்கிறீர்கள் அம்மா?"

"அதுதான்; அவர்களைக் கண்டு காதல் கிளர்ச்சி கொண்டதாகச் சொன்னாயே, அதைப்பற்றித்தான் கேட்டேன்."

மஞ்சு சிறிது வெட்கப்பட்டாலும்,

"ஆமாம், அம்மா. பொதுவாக அது எல்லாருக்கும் ஏற்படக் கூடியதுதானே? அதுவும் இன்று உங்களிடம் சொல்ல வந்த முக்கிய செய்தி...," என மென்று விழுங்கினாள்.

"சரியம்மா. முதலில் இருந்தே விபரமாகச் சொல்லி விடுகிறேன். அஞ்சனா பிறந்து ஏழு ஆண்டுகள் ஓடிவிட்டன. ஆனால், எங்களுக்குக் குழந்தை பாக்கியம் கிட்டவில்லை. ஒரு கார் விபத்தில் மரகதம் அம்மா இறந்து போனார்கள்.

இருபத்தைந்து வயதுகூட ஆகாத இளம் மனைவி இறந்து போனதில், ஐயா உடைந்து போய்விட்டார். பித்துப் பிடித்தவர்போல் இருந்தாலும் இயல்பாகவே நடந்து கொண்டார். மகளிடத்தில் பாசத்தைக் கொட்டினார்.

ஒரு நாள் ஷெர்லியைக் கூட்டிவந்து, எங்களுக்கு அறிமுகப்படுத்தினார். 'இவர் ஷெர்லி; நம்ம அஞ்சனாவுக்கு ஆயாவாக வீட்டோடு இருப்பாள். அவரையும் நம் குடும்ப உறுப்பினர் போல நடத்துங்கள்' என்றார். அந்த ஆயா வேலையை நானே பார்த்துக் கொள்ள முடியும். ஆனால், செவிலி வேலை தெரிந்தவர் இருக்கட்டும் என்று கூட்டிவந்தார் என்று எண்ணிக் கொண்டோம். என்னைப் போல அவளும் மலையாளிதான். அவளுக்கு இருபத்திரண்டு வயதென்றாள். வாளிப்பான உடல் அமைப்பு; யாரையும் கவர்ந்திழுக்கும் திரண்ட மார்பு. அம்மா தப்பாக எண்ணவேண்டாம். எனக்கு முப்பது வயதாகிறது."

"என்ன? முப்பது வயதாகிறதா? நம்பவே முடியவில்லை! இப்போது ஷெர்லியை வர்ணித்தாயே, அப்டித்தான் நீயும் கவர்ச்சியாக இருக்கிறாய். உன் முதலாளி கவர்ச்சிப் பிரியரோ?"

"அப்படிச் சொல்லாதீர்கள் அம்மா. அம்மா இறக்கும் வரையில் அவர் மனைவியின் அடிமை என்று சொல்லும் அளவுக்கு நெருக்கமாக இருந்தார். அந்த அம்மாவின் கவர்ச்சி யாருக்கும் வராது. நாங்கள் யாரும் அவர் அழகோடு ஒப்பிட்டால், கிட்டவே நெருங்க முடியாது. ஆனால், ஷெர்லி வந்ததும்தான், அவர் நடவடிக்கைகளில் கொஞ்சம் மாற்றம் தெரிய ஆரம்பித்தது. அவர் ஷெர்லியுடன் பழகுவது தெரிந்தது. அவர் முதலாளி அல்லவா? நாங்கள் கண்டு கொள்ளாததுபோல் இருந்துவிடுவோம்."

திரிபுர சுந்தரி சிந்தனையில் ஆழ்ந்தாள். மருத்துவ மனையில் ஷெர்லியும் மருத்துவரும் நெருக்கமாய் இருந்ததைக் கனகவேல் பார்த்து விட்டதாய் ஷெர்லி கூறியதை நினைவு கூர்ந்தாள். இப்போது கனகவேலும் மரகதமும் நெருங்கிப் பழகுவதைக் கண்டு மஞ்சுகுட்டியும் அவள் கணவனும் தாபங்கொண்டு, பின்னர்த் தனிமையில் மகிழ்ந்ததை மஞ்சுகுட்டியே சொன்னதையும் ஒப்பிட்டுக் கனகவேல் மனம் பேதலித்ததில் வியப்பொன்றும் இல்லை என்று உணர்ந்தாள்.

“அம்மா, இப்போதுதான் ஒரு முக்கிய செய்தி சொல்லப் போகிறேன். ஒருநாள் நானும் என் வீட்டுக்காரரும் எங்கள் வீட்டு மொட்டை மாடியில் நிலவொளியில் சூழ்நிலையை மறந்து இணைந்து பிணைந்து மகிழ்ந்திருந்தோம். ஏதோ உணர்வு உந்த, முதலாளி வீட்டின் மொட்டை மாடியைப் பார்த்தேன். அங்கே ஓர் உருவம் நிழலாடியது. நாங்கள் இருந்த நிலையில் அதை ஒரு பொருட்டாக நான் எண்ணவில்லை. மறு நாள்தான், அந்த நிழலுருவம் முதலாளிதான் என்று அவர் வாயிலாகவே தெரிய வந்தது.

என் கணவர், ‘ஒரு வேலையாகச் சிதம்பரத்திற்கு முதலாளி போகச் சொல்லியிருக்கிறார். போய்விட்டு மாலையில் வந்துவிடுகிறேன்.’ என்று சொல்லிவிட்டுப் போனார். ஓர் அரை மணி நேரம் சென்று முதலாளி என் வீட்டுக்குள் வந்தார்.”

“என்ன? என்ன?”

அதிர்ந்துபோய்க் கேட்டாள் திரிபுர சுந்தரி. மஞ்சு முகத்தைப் பொத்திக்கொண்டு, விசும்பி விசும்பி அழுதாள். சற்று ஓய்ந்து, கூறினாள்.

“முதலில் மறுத்துத்தான் பார்த்தேன்; ‘சம்பளம் கொடுக்கும் முதலாளிக்குக் கொஞ்சம் சுகம் கொடுத்தால் என்ன?’ என்றெல்லாம் பேசி, இணங்கவைத்து விட்டார். அதன் பிறகு, நாலைந்து முறை என்னைத் தேடி வந்தார்.

என் கணவர் ஒருவாறு நடந்ததை ஊகித்துவிட்டார். கொதித்துப் போனார்.

‘இவ்வளவு தரங்கெட்டவனா இவன்? இவனை ஒழித்துக் கட்டிவிட்டுச் சிறைக்கும் போகத் தயார். அயோக்கியன்! சோற்றில் நஞ்சைக் கலந்து சாக அடிக்கிறேனா? இல்லையா? பார்,’ எனக் கத்தினார்.

‘ஐயையோ! அப்படியெல்லாம் பேசாதீர்கள்?’ கெஞ்சினேன்.

'இருக்கட்டும்; அவன் மேசையில் கைத்துப்பாக்கி வைத்திருப்பது எனக்குத் தெரியும். என்னிடம் காட்டி இருக்கிறான். நேரம் கிடைக்கும். காபி கொடுக்கப் போகும் சாக்கில், துப்பாக்கியை எடுத்துச் சுட்டுவிடுகிறேன்?'

இப்படிப் பேசிக் கொண்டிருந்த மறு நாளே முதலாளியை யாரோ சுட்டுக் கொன்றுவிட்டார்கள். நான் கூட முதலில் இவர் மேல் சந்தேகப்பட்டேன். ஆனால் அம்மா, அவர் அப்படிப்பட்டவர் இல்லை. தன் மனைவியின் மீது கை வைத்தால், யாருக்குத்தான் கோபம் வராது? அந்தக் கோபத்தில்தான் அப்படிப் பேசிவிட்டார். அவரிடம் நீங்கள் விசாரிக்க நேர்ந்தால், அவர் நாங்கள் பேசிக் கொண்டதை உங்களிடம் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் அவரைச் சந்தேகிக்காதீர்கள். வேலைக்காரர்கள் மீது சந்தேகம் கொள்வது என்பது காவல் துறையில் ஒரு சாதாரண நிகழ்ச்சி; ஆனால், ஏழைகளான எங்களுக்கு, அதிலும் ஆதரவு இல்லாத எங்களைப் போன்றவர் தவறு செய்யாவிட்டாலும் தண்டனை பெறுவதைத் தாங்கள் அறியாததில்லை. உங்கள் காலைப் பிடித்துக் கேட்கிறேன்; எங்களை மாட்டிவிடாதீர்கள்."

திரிபுர சுந்தரியின் காலை அவள் பிடித்துக் கொண்டு "ஓஒஒ" என்று கதறி அழுதாள்.

"மஞ்சு! நீயாக எதை எதையோ கற்பனை செய்து கொண்டு பயம் கொள்ளாதே. நான் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்கிறேன்."

"நான் உங்களிடம் வந்து பேசியது, அவருக்குத் தெரிய வேண்டாம். வேண்டுமானால், என்னை மீண்டும் கூப்பிட்டு விசாரியுங்கள்,"

"சரி, மஞ்சு; நீ போ."

திரிபுர சுந்தரியின் மனம் உடைந்துவிட்டது. 'என் நண்பன் என்று அவனை என் நினைவில் எவ்வளவு உயரத்தில்

வைத்திருந்தேன்! தொடக்கத்திலேயே அந்நினைவுகள் நொறுங்க ஆரம்பித்துவிட்டனவே. உம்ம்... இன்னும் என்னென்ன அதிர்ச்சிகளை எதிர்கொள்ள வேண்டியிருக்குமோ?'

மிகவும் சோர்வாக உணர்ந்தாள். மன இறுக்கம் குறைய, மாலதியை அழைத்துக் கொண்டு மந்தாரக்குப்பத்தில் கீற்றுக் கொட்டகையில் திரைப்படம் பார்க்கப் போனாள். அங்குப் பழைய படம்தான் போடுவர். ஆனால், அன்று புது நடிகர் ஒருவர் நடித்த புதுப்படம் போட்டிருந்தனர்.

மாலதி மெல்லத் திரிபுர சுந்தரியிடம் ஏதோ சொல்ல, அவளும் படத்தைக் கவனமாகப் பார்த்தாள். ஆமாம்; சில காட்சிகள் கனகவேலின் விருந்தினர் விடுதிப் பூங்காவின் சில இடங்களில் எடுக்கப்பட்டுள்ளன என்பது நன்கு தெரிந்தது. படத் தயாரிப்பாளர் வடலூரைச் சேர்ந்தவர். படம் நன்றாகவே இருந்தது. அதில் ஒரு நடனக் காட்சி. ஒரு துணை நடிகை அரைகுறை ஆடையோடு ஆடிக்கொண்டிருந்தாள்.

மரகதவல்லி இறந்து இரண்டு மாதங்களுக்குப் பிறகு எடுக்கப்பட்டதாம்; மாலதி சொல்லிக் கொண்டிருந்தாள். கூடவே ஒரு செய்தியும் சொன்னாள். அந்தத் துணை நடிகை அந்த விடுதியிலேயே தங்கியிருந்திருக்கிறாள். அதில் என்ன கமுக்கம் இருக்கிறது என்றால், படப்பிடிப்பு முடிந்தும் நான்கு நாட்கள் அவள் தன் தாயுடன் அங்குத் தங்கியிருந்தாள் என்பதே. வழக்கம்போல் கிசுகிசு செய்தியாகக் கனகவேலையும் அந்தத் துணை நடிகையையும் இணைத்துப் பேசப்பட்டது.

அதைவிடத் திடுக்கிடும் செய்தி, அந்த நடிகையைக் கனகவேல் இறந்த அன்று சிலர் நெய்வேலியில் பார்த்ததாகச் சொன்னதுதான்!

திரிபுர சுந்தரிக்குத் தலை சுற்றியது.

# 15. பொன்னுவேல்

அண்ணி...!''

''வேண்டாம், பொன்னு. என்னை அண்ணி என்று கூப்பிடாதே. அப்படிக் கூப்பிடும்படி நான் சொல்லி நீங்கள் அழைத்தபோது, மகிழ்ச்சியின் உச்சத்திற்கே போன காலம் உண்டு! ஆனால் இப்போது...? எல்லாம் கனவாகி விட்டது.''

''மன்னிக்கவும், அண்ணி. உங்களை வேறு எவ்வாறும் கூப்பிடத் தோன்றவில்லை. உங்களை ஒரு காவல் அதிகாரியாகவே எண்ண முடியவில்லை.''

''சரி, சொல். உனக்குக் கனகவேல் மேல் பகை இருக்க என்ன காரணம் இருக்கிறது?''

''ஒரு காவல் துறை அதிகாரி என்ற கோணத்தில் கேளுங்கள். சின்ன வயதில் உங்களுக்கு விளையாட்டுப் பிள்ளையாகவும் கொஞ்சி மகிழும் பொம்மையாகவும்தான் கருதப்பட்டேன்; ஆனால், இப்போது? நான் ஒரு நாடகக் குழு வைத்துப் பல நாடகங்கள் நடத்தியிருக்கிறேன். திரைப்படக் கல்லூரியில் பட்டயப் படிப்பு முடித்து, ஒரு திரைப்படமாவது தயாரித்து வெற்றி காண வேண்டும் என்பது என் தணியாத ஆசை. அண்ணனிடம் பண உதவி நாடி வேண்டினேன். ஆனால், அவர் சற்றும் பரிவு காட்டாமல் அப்பட்டமாக மறுத்து விட்டார். 'அவரவர் முன்னேறும் வழியை அவரவரே பார்த்துக் கொள்ள வேண்டும் என்பது எப்போதோ முடிவு செய்தாகி விட்டது. இனி அதைப்பற்றிப் பேச வேண்டாம்,' என்று கடுமையாகக் கூறிவிட்டார்.

‘சிறு வயதில் அம்மா சொன்னதைக் கேட்டு அவ்வாறு நடந்து கொண்டேன். அது எனக்கு அறியாத பருவம்தானே..? என்னை மன்னிக்கக் கூடாதா?’ கெஞ்சினேன்.

‘சரிடா! நானும் பெரியவன்தானே? என் பேச்சை ஏன் கேட்டு என்னை நம்பவில்லை? அதன் பலன்தான் உனக்கு எதிராக அமைந்து விட்டது; இனி அதைப்பற்றிப் பேசாதே. இந்த முடிவில் எந்த மாற்றமும் இல்லை.’

‘சரி! அண்ணா, எனக்கு ஒரேயொரு வாய்ப்புக் கொடுத்துப் பாருங்கள்; அதாவது, எனது நாடகத்தைப் பாருங்கள். அதன் கதையமைப்பை, நடிகர்களின் நடிப்பைப் பாருங்கள்; என் இயக்கத்தையும் பாருங்கள்; பின்னர், அதன் வெற்றி வாய்ப்பை எடை போடுங்கள்; பிறகு உதவி செய்வதைப் பற்றி மறு பரிசீலனை செய்யுங்கள். இது என் வேண்டுகோள்.’

‘சரிடா, வருகிறேன்.’

‘அஞ்சனாவையும் கூட்டி வாருங்கள்.’

‘ஏன், உனக்குப் பரிந்துரை செய்ய அவளைப் பக்குவப் படுத்தி வைத்திருக்கிறாயா?’

‘சரி, அண்ணா. அவளை அழைத்துவர வேண்டாம்.’

‘ரொம்ப பிகு பண்ணிக்காதே; கூட்டிவருகிறேன். உனக்குத்தான் அவள் மிகவும் செல்லம் என்பதை அறிவேன்!’

இந்த எனது நடவடிக்கைதான் அவருக்கும் எனக்கும் தகராறு முளைக்கக் காரணமாய் ஆயிற்று. சிறு மனத்தாங்கல்தானே ஒழிய, எனக்கு அவர்மேல் எந்தப் பகையும் என்றும் இல்லை.”

திரிபுர சுந்தரியின் மனம் மீண்டும் குறுகுறுத்தது. கூர்ந்து கேட்கலானாள்.

“நாடகம் முடிந்ததும் ஒப்பனை அறைக்கு வந்து விட்டான். வந்து என் நாடகக் கதாநாயகி காஞ்சனாவைப் பாராட்டினான். பேச்சுவாக்கில் அவள் வீடு திரும்ப வெகுநேரம் ஆகும் என்பதை அறிந்து கொண்டு,

‘ஏன்டா பொன்னு? நீ வேண்டுமானால் பொறுமையாக எல்லா வேலைகளையும் முடித்துவிட்டு வாயேன்; நான் காஞ்சனாவை அவள் வீட்டில் இறக்கிவிட்டுப் போகிறேன்,’ என்றான். சூழ்நிலையும் அவ்வாறு அமைந்துவிடவே, நான் சரி என்றேன்.

அண்ணி, உண்மையில் நானும் அவளும் ஒரே வீட்டில் ஒன்றாகத்தாம் வாழ்ந்து வந்தோம். இதை வீட்டிலுள்ள அனைவரும் அறிவர். அதை அவர்கள் விரும்பவில்லைதான்! ஒவ்வொரு நாடகத்திற்கும் ஒரு கதாநாயகியைத் தேடப் பொருளாதாரம் இடம் தரவில்லை; அதனால்தான் இந்த ஏற்பாடு.

நான் திரைப்பட வாய்ப்பைத் தேடிக்கொண்டு இருக்கும்போது, அவளும் திரைப்படத்தில் நடிக்கும் வாய்ப்பைத் தேடிக் கொண்டிருந்தாள்.

அவர்கள் இருவரும் அடிக்கடி சந்தித்துக் கொள்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன், அதுபற்றி அவளைக் கேட்டேன்; ‘ஆம், அப்படித்தான். என்னைக் கதாநாயகியாக்கிப் படம் எடுக்கிறேன் என்கிறார். காலத்திற்கேற்ப நல்ல கதையாகக் கேட்கிறார். ஏன், பொன்னு? நீதான் நல்ல நல்ல கதைகள் வைத்திருக்கிறாயே! நான் உன்னையே இயக்குநராக வைத்துப் படமெடுக்கச் சொல்கிறேன்; நான் சொன்னால் ஒப்புக்கொள்வார். என் மேல் அவ்வளவு மோகமாக இருக்கிறார்,’ என்றாள்.

என் உடம்பெல்லாம் பற்றி எரிவது போலிருந்தது! அவள் இவ்வளவு கீழ்த்தரமாக நடந்து கொள்வாள் என்று நான்

நினைக்கவில்லை. என் அண்ணன் மீதும் வெறுப்பும் கோபமும் கொண்டேன். ஒரு வேகத்தில் அவர்கள் இருவரையும் கொன்று போட்டுவிடலாம் என்ற ஆத்திரம் என் மனத்தில் உருவாகியது!''

"டேய், பொன்னு! அடங்கு; நீ பேசுவது பின்னால் உனக்கே எதிராகத் திரும்ப நேரும். எச்சரிக்கிறேன். பிறகு?''

"அவ்வளவுதாம், அண்ணி. அவர் எந்தப் படமும் எடுக்கவில்லை; எனக்குப் படமெடுக்க பணம் தந்து உதவவும் இல்லை. ஏமாற்றந்தான் மிச்சம். அவளுடைய கதாநாயகியாகும் கனவும் கலைந்து போயிற்று. இப்போது அவள் என் கால்களைப் பிடித்துக்கொண்டு, மன்னிப்புக் கேட்டு அழுகிறாள். எல்லாம்தாம் முடிந்து விட்டனவே!''

"சரி, பொன்னுவேல். தேவையானால் மீண்டும் கூப்பிடுகிறேன்.''

வீட்டில் ஓய்வாகப் படுத்திருந்தாள் திரிபுர சுந்தரி. மனமோ கனகவேலைச் சுற்றியே வந்தது.

'பள்ளிக்காலத்தில் பழகியதை மட்டும் வைத்துக் கொண்டு அவனை எவ்வளவு உயரத்தில் வைத்துப் பார்த்திருக்கிறேன்! ஆனால், இந்தப் பத்தாண்டுகளில்- இல்லை, இல்லை; அவன் மனைவி இறந்த இந்த ஆறுமாதங்களில்தாம் அவன் இப்படிக் காமுகனாக மாறியிருக்கிறான். அவர்கள் முதலிரவு பற்றிக்கூட ஏதோதோ சொன்னானே; அதைப் பற்றி இனி யாரிடம் கேட்க முடியும்? எல்லாரிடமும் சொல்லக்கூடிய செய்தியா அது?

அவளுக்குத் திருவண்ணாமலையில் ஒரு தோழி இருக்கிறாள். அவர்கள் கொஞ்சம் நெருக்கமானவர்கள் என்பதைச் சொன்னானே! சரி, அவளை விசாரிப்போம். சிறிது இவ்விடத்துச் சூழ்நிலையை மறப்போம்; அவளிடம் இருந்து ஏதாவது புதிய துப்புக் கிடைக்கலாம்.'

திருவண்ணாமலையியில் இருந்த மீனாட்சியின் பெற்றோர் மூலமும் திரைப்பட நடிகையைப் பற்றி சென்னையில் உள்ள காவல் துறை நண்பர்கள் மூலமும் அவர்கள் இருப்பிடத்தை அறிந்து தனக்குத் தெரிவிக்கச் சொல்லியிருந்தாள். இந்த இரண்டு தகவல்களையும் கண்டறிய ஒரு வாரந்தான் ஆயிற்று.

இருவரும் சென்னையிலேயே இருக்கிறார்கள் என்ற செய்தி, அவள் அலைய வேண்டிய தொலைவு, பயண நேரம் இவற்றை மிக மிகக் குறைத்து விட்டது.

இடைப்பட்ட காலத்தில் மருத்துவர் வின்சென்டையும் வீட்டுச் சமையல்காரர் நாராயணராவையும் விடுதிப் பொறுப்பாளர் வெள்ளியங்கிரியையும் விசாரித்து விட்டாள்.

**நாராயணராவ்:**

மிகவும் மென்மையாக, அளவோடு பேசினார். கனகவேலலுக்குத் திருமணமாவதற்கு முன்னமேயே கணவனும் மனைவியும் அவரிடம் வேலைக்குச் சேர்ந்துவிட்டனர். முன்னரே ஷெர்லி சொன்ன தகவலோடு ஒத்துப் போனாலும் அவன் மனைவி மஞ்சுகுட்டி, கனகவேல் தன்னிடம் தவறாக நடந்துகொள்ள முயன்றதாகச் சொன்னாளேயன்றி அவன் தன் உடற்பசியைச் சிலபல நேரங்களில் தீர்த்துக் கொண்டதைச் சொல்லாமல், அந்த வீட்டை விட்டுப் போய்விடலாம் என்று சொன்னதாக மட்டும் குறிப்பிட்டதுதான் முக்கிய மாற்றம். கணவன் தன் மேல் வெறுப்புக் கொள்ள நேரிடும் என்பதால், அந்த நிகழ்ச்சியைக் கமுக்கமாக வைத்துக்கொண்டிருந்ததாக, முன்னமேயே மஞ்சுகுட்டி சொல்லி இருந்தாள்.

“உன் மனைவி இதைச் சொன்னபோது நீ எப்படி ஏற்றாய்?”

திரிபுர சுந்தரி கேட்டாள். நாராயணராவ் சற்றுத் தயங்கி,

"எனக்குக் கோபம் மேலிட்டு உணர்ச்சி வசப்பட்டு அவரைக் கொன்று விடுவதாகக் கத்தினேன்," என்றார்.

"அது சரி! நீ எப்படி அவரைக் கொல்ல முடியும்?"

"அம்மா, நீங்கள் எப்படி வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள். உணவில் நஞ்சு கலந்தோ அல்லது அவர் வீட்டு அலுவலக அறையில் இருந்த துப்பாக்கியால் சுட்டோ கொன்று விடுவேன் என்று என் மனைவியிடம் சொன்னேன். ஆனால், அம்மா, சத்தியமாக அவரைக் கொல்ல நான் முயலவே இல்லை. நஞ்சு கொடுத்துக் கொல்வது என்பது என் தொழில் தருமத்திற்குத் துரோகம் செய்ததாக ஆகும். துப்பாக்கியை அவர் அறையில் முதலாளி என்னிடம் காட்டியிருக்கிறார்; நான் பார்த்திருக்கிறேன். ஆனால், துப்பாக்கியை எப்படிக் கையாள்வதென்று எனக்குத் தெரியாது."

இப்போது கனகவேல் இறந்துவிட்டதால், அவரின் பழைய நல்ல குணங்களைச் சொல்லி, அப்படிப்பட்டவர் இப்படி மாறிவிட்டாரே என்று வருந்தினான். கணவன் மனைவியாக நெருக்கமாக நடந்து கொண்டதையும் ராவ் ஒரு மாதிரியாகச் சிரித்துக் கொண்டே சொன்னான்.

"என்ன செய்து என்ன ஆகப்போகிறது? இனி நாங்கள் வேறிடந்தானே தேடவேண்டும். எந்த வேளையில் இந்த வீட்டை விட்டுப் போகவேண்டும் என்ற பேச்சை எடுத்தோமோ, அஃது உண்மை ஆகப் போகிறது."

"நீ எங்கே போனாலும் என்னிடம் தகவல் சொல்லி விட்டுப் போ. உன் மனைவியையும் விசாரிக்க வேண்டும்; ஆனால், நீ இருக்கும்போது விசாரிக்க மாட்டேன்."

"அம்மா, மஞ்சுவுக்கு ஒன்றும் தெரியாது. நீங்கள் விசாரித்தால் பயந்துவிடுவாள்; பாவம்!" நயமாகச் சொன்னான்.

மஞ்சு தானாகவே வந்து வாக்கு மூலம் தந்ததை எண்ணிச் சிரித்துக் கொண்டே திரிபுர சுந்தரி,

"சரி, அவளை நான் ஒன்றும் பயமுறுத்த மாட்டேன். போய்வா," என்றாள்.

**வெள்ளியங்கிரி:**

இவரிடம் முக்கியமாகக் கருதக்கூடிய துப்புக்கள் எதுவும் கிடைக்கவில்லை. இவர் வந்தே ஓராண்டுதான் ஆகிறது; அதிலும் அந்தத் திரைப்படப் படப்பிடிப்பின்போது இவர் நான்கு நாட்கள் விடுப்பில் இருந்திருக்கிறார். அந்த நாட்களில் தொழிற்சாலையிலிருந்து யாராவது ஓராளை விடுதியைக் கவனித்துக் கொள்ளச் செய்வார். எந்த அரசுதுறை உயர் அதிகாரி வந்தாலும் விடுதியில் தங்க அனுமதிப்பதோடு இவரும் அவரை மரியாதை நிமித்தம் சென்று பார்த்து உரையாடிவிட்டு வருவார்.

சிலர் மது வகைகள் கேட்டால், ஏற்பாடு செய்து கொடுக்கச் சொல்வார்; ஆனால், அவர்களோடு சேர்ந்து உணவு அருந்தினாலும் இவர் மட்டும் மதுவைத் என்றும் தொடமாட்டார்.

விருந்தினர் விடுதியில் வந்து தங்குவோர் பட்டியலை வெள்ளியங்கிரி கொடுத்தார். அஃது அவளுக்கு உதவியாய் இருக்காது என்றே எண்ணினாள்.

**மருத்துவர் வின்சென்ட்:**

கனகவேல், வின்சென்ட், திரிபுரசுந்நரி மூவரும் ஒரே பள்ளியில் பன்னிரண்டாவது வரையில் ஒன்றாகப் படித்தவர். மூவரில் கனகவேல்தான் முதல் இடம்; திரிபுர சுந்தரி நான்கைந்து இடத்திற்குள் வருவாள். வின்சென்ட் வெகு சுமாராகப் படிப்பவன்.

கனகவேல் பள்ளிப் படிப்போடு நின்றுகொண்டான். திரிபுர சுந்தரி அறிவியல் பட்டப்படிப்பு முடித்துக் காவல் துறையில் உதவி ஆய்வாளர் ஆனாள். வின்சென்ட் மாத்திரம் தனியார் மருத்துவக் கல்லூரியில் மருத்துவம் முடித்து, அதற்கு மேலும் அறுவைத் துறையில் மேல் படிப்பு முடித்து வடலூரிலேயே மருத்துவ மனை ஒன்றை நிறுவிப் புகழ் பெற்றுவிட்டான். நெய்வேலி சுரங்கத்தில் பல நிலைகளில் பணிபுரிவோரும் அவனிடந்தான் அறுவை சிகிச்சைக்கு வருவர்.

எடுத்த எடுப்பிலேயே திரிபுர சுந்தரி கேட்டாள்:

“என்ன வின்சென்ட்? இவ்வளவு பக்கத்தில் இருந்தும் கனக்கைக் கவனிக்காமல் விட்டுவிட்டாயே?”

“சுந்தரி, என்ன அப்படிச் சொல்லிவிட்டாய்? நாங்கள் பள்ளி நாட்களைப் போலவே தொடர்ந்து பழகி வந்தோம். திருமணமான பின்னும் குடும்ப நண்பனாகவும் குடும்ப மருத்துவனாகவும்தான் இருந்தேன். என்னிடம் அவன் எதையும் மறைக்க மாட்டான். அவனுடைய மனைவி இறக்கும் வரையில் என்னிடம் சொன்னவற்றில் ரகசியம் எதுவும் இல்லை. ஆனால், மனைவி இறந்த பிறகு சிலபல பெண்களுடன் தொடர்பு ஏற்பட்டதை என்னிடம் சொல்லி இருக்கிறான். அப்போதுதான், ஷெர்லியைக் கண்டான். அவளைத் தன் மகளுக்குச் செவிலியாக அனுப்புமாறு கேட்டுக் கொண்டான். அவனது உள் நோக்கத்தைப் புரிந்து கொண்டேன்; அவன் கேட்டுக் கொண்டபடி ஷெர்லியை அனுப்பி வைத்தேன்.”

“வின்சென்ட்! அதற்கு முன்னர்க் கனக்கு ஷெர்லியைப் பார்த்தது இல்லையா?”

“எதிர்பார்த்தேன் இந்தக் கேள்வியை. நான் சொல்வதை நீ நண்பர்கள் பேசுகின்ற முறையிலும் எடுத்துக் கொள்ளலாம்;

அல்லது காவல்துறைக்கு நான் தரும் வாக்கு மூலமாகவும் எடுத்துக் கொள்ளலாம்.''

''மிகவும் உணர்ச்சி வசப்படாதே, வின்செண்ட்.''

''சந்தேகத்தை நீ கேட்கும் முன்பே தீர்த்து வைக்கிறேன். நானும் ஷெர்லியும் நெருக்கமாய்ப் பழகுவதைக் கண்ட வேறு சிலர் அவளை நான் காதலிக்கிறேன் என்று என் காதுபடக் கிசுகிசுத்து இருக்கின்றனர்! உண்மையில் அவளை எப்படித் தவிர்க்கலாம் என்ற எண்ணத்தில் இருந்த வேளையில்தான், கனகவேல் வந்தான். நாங்கள் நெருக்கமாக இருந்த வேளையில் எங்களைப் பார்த்துவிட்டான். அப்போது அவன் முகத்தில் மோகவெறி ஏறியதை நான் கவனித்தேன். ஷெர்லியை அவன் பார்த்த பார்வை, அவன் உள்ளத்தைத் தெளிவாகக் காட்டியது. என் எண்ணமும் எளிதாக ஈடேறியது! ஆம், அவன் அவளைத் தன் மகளுக்குச் செவிலியாய் இருக்க அனுப்ப முடியுமா என்று கேட்டான். நானும் உடன்பட்டேன்; ஷெர்லியையும் உடன்பட வைத்தேன். காதலியைக் கவர்ந்து சென்றவன் மேல் நான் வஞ்சம் தீர்த்துக்கொண்டு இருப்பேனோ என்று தவறாக எண்ணிவிடாதே.''

''இது நட்பு முறையிலான கேள்வி. கனகுவை மறுமணம் செய்துகொள்ள அறிவுறுத்தி இருக்கலாமே?''

''எனக்கு அந்தத் தகுதி இல்லை. என்றாலும் நண்பன் என்ற முறையில் சொன்னேனே! ஆனால், அவன் 'என் மனத்தில் என் மனைவி மரகதவல்லி ஒருத்திக்குத்தான் இடம்; அந்த இடத்தை வேறு யாரும் நெருங்கக்கூட விடமாட்டேன். இது உறுதி!' என்று ஆவேசமாகப் பேசினான்.

'எல்லாம் கொஞ்ச காலத்திற்கு இப்படித்தான் பேசுவாய்; உடல் சுகம் என்று வந்துவிட்டால், வேறு பெண்ணை நாடத்தான் போகிறாய். அதனால் ஒரு நல்ல பெண்ணை

மணப்பதில் என்னடா தவறு?' என்றேன். நீ ஏன் சிரிக்கிறாய் என்று எனக்குப் புரிகிறது. இதே நிலை ஒரு பெண்ணுக்கு நேர்ந்தால், இதே அறிவுரையை அவளுக்குச் சொல்வாயா எனறுதானே சிரிக்கிறாய்?''

''ஆமாம்; ஆயிரம் முறை ஆமாம். உங்கள் ஆணாதிக்கப் புத்தி, உங்களை விட்டு அவ்வளவு எளிதில் போய்விடுமா?''

''இப்போதைக்கு நமக்குள் வாதம் வேண்டாம். அவன் மிகச் சிறிய வயதிலேயே மணம் செய்துகொண்டான். விடுதல் அறியா விருப்பு உடல் அளவில் மட்டுமின்றி, உள்ளத்தாலும் இணைந்து விட்டிருக்கின்றான். பார்! நாம் இருவரும் இருபத்து எட்டு வயதாகியும் இன்னும் மணம் செய்து கொள்ளவில்லை; ஆனால், அவன் ஏழு வயது பெண் குழந்தைக்குத் தந்தை! இந்தச் சின்ன வயதில் எத்தனை உறுதியாய் இருந்திருக்கிறான்?''

''ஷெர்லி அவ்வப்போது உன்னைப் பார்ப்பது உண்டா?''

''நீ எந்த அர்த்தத்தில் கேட்கிறாயோ? தெரியவில்லை. குழந்தை அஞ்சனாவிற்கு உடல்நிலை சரியில்லாமல் போனால் வருவாள். இப்போது நான் சொல்லப்போகும் செய்தி, உனக்குத் தேவைப்படுமா என்று பார். கனகவேலின் மேல் வண்டி வண்டியாய்ப் புகார் சொல்வாள். நல்ல மனிதனிடம் என்னை அனுப்பினீர்கள்; பாவி! என்னை ஒரு வேசியாகக் கருதி நடந்து கொள்கிறான். சின்ன வீடாகவாவது வைத்துக் கொள்வான் என்று பார்த்தால், அதுவும் நடவாது என்று நொந்து போய்ச் சொல்லி அழுவாள். எப்படியோ சமாதானம் சொல்லி அனுப்பி விடுவேன் .''

''அவளை நீயே, ஏன் உன் மருத்துவ மனையில் மீண்டும் வேலைக்கு வைத்துக்கொள்ளக் கூடாது?''

''உங்கள் துறைக்காரர்கட்கு அது போதாதா? காதலர் நாங்கள் இருவரும் சேர்ந்து, அவனைத் தொலைத்துக் கட்டி

விட்டதாக, இரண்டும் இரண்டும் நான்கு என்று வெகு எளிதாகக் கணக்குப் போட்டு வழக்கை முடித்துவிட மாட்டீர்களா?''

''வின்சென்ட்! இந்த வழக்கிற்குத் தொடர்பு இல்லாத என் தனிப்பட்ட கேள்வி. நாம் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த காலத்தில், நான் கனகவேலையே சுற்றிச்சுற்றி வந்ததை எல்லாம் நீ நன்கு அறிவாய். சிறு வயது கோளாறு என்றாலும் நான் திரும்பி வந்தபோது, அவன் விரும்பினால் இரண்டாம் தாரமாக மணந்து கொள்ளத் தயாராக இருந்தேன். அந்த எண்ணத்தை அவனிடம் சொல்லும் முன் எல்லாமே மாறிவிட்டன.

நீயும் நானும் மணமாகாதவர்கள்; நாம் ஏன் திருமணம் செய்து கொள்ளக் கூடாது? நீ சொன்னால் காவல் துறை வேலையைக்கூட விட்டுவிடுவேன். அவசரமே இல்லை; நிதானமாக யோசித்துச் சொல். இது வேண்டுதல்தான்; காதல் அன்று. பதில் எதுவாக இருந்தாலும் வெளிப்படையாகச் சொல். அதை அப்படியே ஏற்றுக் கொள்கிறேன்.''

இந்த உரையாடலுக்குப் பிறகு, திரிபுர சுந்தரிக்குச் சுரீர் என்று தான் மறந்து போன ஒன்று நினைவுக்கு வந்தது! எப்படி மறந்தாள்? என்ன மறந்தாள்?

ஆம்; குழந்தை அஞ்சனாவைத்தான் அவள் மறந்து போனாள். பாவம், குழந்தை. அவளை நயமாக விசாரிக்க வேண்டும். ஏதோ அரையாண்டுத் தேர்வு நடக்கிறது போலும்; முடியட்டும். விடுமுறையில் விசாரிப்போம்; யார் கண்டார்? அவளிடமிருந்து கூட அரிய செய்திகள் கிடைக்கக் கூடும்.

இதற்கிடையில் சென்னைக்குப் போய் வந்து விடுவோம் என்று முடிவெடுத்தாள்.

# 16. துணைநடிகை

சென்னைப் புறநகர்ப் பகுதியான பல்லாவரம் தாண்டிப் படப்பையில் அவள் இருக்கும் இடத்தை விசாரித்துப் போய்ச் சேர்ந்தாள் திரிபுர சுந்தரி.

வெளியே வந்த நடிகை, 'யார்?' என்று கேட்டாள்.

'நான் வடலூரிலிருந்து வருகிறேன்,' என்றதும் வழி காட்டக் கூட வந்திருந்த மற்றவர் விலகிச் சென்று விட்டனர்.

'பயப்படாதீர். நான் காவல் அதிகாரி; உங்களிடம் விசாரிக்க வந்திருக்கிறேன். உங்களைப் பற்றிய விசாரணை இல்லை; வேறொருவரைப் பற்றித்தான் கேட்க வேண்டும். நீங்கள் சொல்கின்ற செய்தியை வேறு யாருக்கும் தெரிவிக்க மாட்டேன். பயத்தை விடுங்கள்.''

''என் கணவர் வர மாலை ஆகிவிடும்; அவர் வந்தபின் பேசக் கூடாதா?''

''உங்கள் பழைய வாழ்க்கையைப்பற்றி அவர்க்குத் தெரியுமானால், அவர் வந்தபின் தொடங்குவோம்; இல்லை என்றால்...''

''இல்லையம்மா! அவர்க்கு என் பழைய வாழ்க்கையைப் பற்றித் தெரியாது; நான் மறைத்துவிட்டேன்.''

''அப்படியானால், அவர் வருவதற்குள் விசாரணையை முடித்துவிட்டுப் போய்விடுவேன்; நீங்கள் அவரிடம் சொந்தக்காரர் வந்திருந்தார் என்று சொல்லிவிடலாம்.''

'சரிங்கம்மா.''

"நான்கு மாதத்திற்கு முன் நெய்வேலியில் படப்பிடிப்பு நடந்தபோது, அந்தக் காகித ஆலை விடுதியில் நான்கு நாட்கள் தங்கி இருந்தீர்களா?"

"நீங்கள் என்ன கேட்க வருகிறீர்கள் என்று ஓரளவு புரிகிறது; ஆனால், ஏன் என்று புரியவில்லை. சொல்கிறேன், அம்மா. படம் எடுப்பவர் துணை நடிகைகளான எங்களுக்குப் பணம் கொடுக்க இழுத்தடித்து, அப்புறந்தான் தருவார்கள். கனகவேல் ஐயா, என்னை இருக்கச் சொல்லிக் கேட்டதும் அவர் நோக்கம் புரிந்தது; சம்மதித்துத் தங்கிவிட்டேன். சென்னைக்குத் திரும்பும் போது, கை நிறைய பணம் கொடுத்தார். சென்னையில் நடிக்கும் வாய்ப்பில்லாத போதும் இதைப் போன்ற தொழிலில் ஈடுபட மனம் ஒப்பவில்லை. இளமை இருக்கும் வரையில் இனிக்கும்; பிறகு...? என் கணவரைச் சந்தித்தேன். நல்ல மனிதர்! என்னை விரும்பினார். திருமணம் செய்துகொண்டு ஓரளவு வசதியாக வாழ்க்கை ஓடுகிறது. போகப்போக முன்னேறலாம் என்ற நம்பிக்கையும் இருக்கிறது."

"கடைசிக் கேள்வி. போன வாரம் நீங்கள் நெய்வேலிக்கு வந்தபோது, ஆலை முதலாளியைச் சந்தித்தீர்களா?"

"அவரை அவரது ஆலை அலுவலகத்தில் சந்தித்தேன். ஆலையில் பணிபுரியும் பெண் பணியாளர்க்குக் கொடுக்க வைத்திருந்த இரண்டு சேலைகளைக் கொடுத்தார். நான் வாங்க மறுத்துவிட்டேன். 'கணவர் இவை ஏது என்று கேட்டால், பொய் சொல்ல வேண்டியிருக்கும்,' என்றேன். 'புத்திசாலிப் பெண்தான்' என்றவர், என்னை அவர் அலுவலக ஓய்வறைக்குக் கூட்டிச் சென்று ஆரத் தழுவினார். நான் மறுக்கவில்லை. எல்லாம் முடிந்ததும் 'இது மட்டும் சரியா?' என்று கேட்டார். 'இதைப் பற்றி என் கணவருக்கு சொல்லத் தேவையில்லையே', என்றேன்.' அலுவலக அறைக்கு மீண்டும் அழைத்து வந்தவர்,

வழியனுப்பும் முன் நிறைய பணம் தந்தார்; வாங்கிக் கொண்டேன். அவ்வளவுதானம்மா!''

''அதிர்ச்சியான செய்தி ஒன்றைச் சொல்கிறேன்; கேட்டுக்கொள். அந்த ஆலை முதலாளி, நீ அங்கு வந்திருந்த இரவு கொலையுண்டு இறந்து போனார்.''

அதிர்ச்சி அப்பட்டமாகத் தெரிந்தது அவள் முகத்தில்! சற்றுத் தன்னை நிதானப்படுத்திக் கொண்டு,

''என் மேல் சந்தேகம் கொண்டுதான் இத்தனை நேரமும் விசாரித்தீர்களா, அம்மா? சத்தியமாகச் சொல்கிறேன், எனக்கு ஒன்றுமே தெரியாதம்மா?''

''நீ நெய்வேலியில் இருந்து எத்தனை மணிக்குப் புறப்பட்டாய்? எப்படித் திரும்பினாய்?''

அவள் அழ ஆரம்பித்துவிட்டாள்; கண்ணீர் வழிந்தது.

''நான்கு மணிக்குப் புறப்பட்ட விரைவுப் பேருந்தில் புறப்பட்டுப் பல்லாவரத்திற்கு எட்டரை மணிக்கு வந்து சேர்ந்தேன். அப்புறம், நகரப் பேருந்தில் இங்கே வந்தேன். அம்மா, அவர் மிகவும் நல்ல மனிதர்! என்னை எத்துணைஅன்போடும் மதிப்போடும் நடத்தினார் தெரியுமா? அவர் கொலையுண்டதைக் கேட்ட அதிர்ச்சியை என்னால் தாங்க முடியவில்லை. என் மீது சந்தேகம் கொள்ளாதீர்கள். அம்மா, அவர் கொலையைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. இப்போதுதான் நிம்மதியான வாழ்க்கையைத் தொடங்கி இருக்கிறேன்; இதில் என்னைத் தொடர்பு படுத்தினால், என் வாழ்க்கையே முடிந்துவிடும்!''

''வீணாக எதையாவது கற்பனை செய்துகொண்டு புலம்ப வேண்டாம். அமைதியாய் இரு; நான் போய் வருகிறேன்.''

# 17. மீனாட்சி

அடையாற்றில் உள்ள ஒரு கணினி அலுவலகத்தில் மீனாட்சியும் அவளுடைய கணவரும் பணிபுரிந்து வந்தனர். மடிப்பாக்கத்தில் இரண்டு படுக்கை அறைகள் கொண்ட அடுக்ககத்தில் குடக் கூலி கொடுத்து வசித்து வந்தனர். ஆனால், முதலில் மகிழுந்தை வாங்கிவிட்டனர்; காலம் தாழ்த்தாமல் அலுவலகத்திற்குச் செல்ல வேண்டும். சம்பளம் அதிகம்.

இளம் வயது வாழ்க்கை, இன்பங்களைத் துய்க்கத் துடிப்பு எல்லாம் இருந்து என்ன? எந்நேரமும் வேலை, வேலைதான்! அந்த வேலையைச் செய்வது மூளைதான். கொடுக்கப்பட்ட வேலையைக் குறிப்பிட்ட நேரத்திற்குள் முடித்தாக வேண்டும்.

ஓய்ந்து களைப்பாய் வருகிறவர்க்குக் குளிரூட்டியில் உணவு இருக்கும்; சூடாக்கி உண்ணவேண்டும். இல்லற உறவு இரவோடு சரி; பகலில் கொஞ்சி மகிழக் கொஞ்ச நேரம் கிடைக்காது. விடுமுறையும் அவ்வளவு எளிதில் கிடைக்காது. ஆக, வாழ்க்கையை விலைக்கு விற்றுக் கொண்டிருந்தனர்.

தொலைபேசி மூலம் சந்திக்க நேரத்தை குறித்துக் கொண்டு, மாலையில் வீட்டுக்குப் போனாள் திரிபுர சுந்தரி.

காபி, சிற்றுண்டி கொடுத்து உபசரித்துவிட்டு, மீனாட்சி பேசினாள்.

‘‘என் தோழி மரகதத்தைப் பற்றிப் பேச வேண்டும் என்று சொன்னதால், இருப்புக் கொள்ளாமல் வேலையும் ஓடாமல் தவித்துக் கொண்டிருக்கிறேன். பாவி! இத்தனை இளம்வயதில்

அநியாயத்திற்கு விபத்தில் மாண்டு போனாளே! அவள் இழப்பு எனக்கு ஒரு பேரிடி. நாங்கள் ஒன்றாம் வகுப்பிலிருந்து ஒன்றாகப் படித்தோம்; அவளை அவளுடைய பெற்றோர் பத்தாவதோடு நிறுத்திவிட்டனர். மேலே படிக்க வைக்குமாறு நான்கூட கெஞ்சிக் கேட்டேன்; அவர்கள் ஒப்பவில்லை.

நான் மட்டும் மேலே படித்துப் பொறிஞர் ஆகி விட்டேன். ஆனாலும் எங்கள் நட்புமட்டும் தொடர்ந்தது. விடுமுறையில் எங்கள் ஊரான திருவண்ணாமலைக்குப் போகும் போதெல்லாம் கோவிலுக்குப் போய்ப் பேசுவோம், பேசுவோம்; அப்படிப் பேசுவோம். ஐயோ! உங்களை வரவழைத்துவிட்டு நானே பேசிக் கொண்டிருக்கிறேனே! என் ஆதங்கத்தை நான் கொட்டித் தீர்க்கிறேன்; மன்னிக்கவும்.''

''இல்லை, மீனாட்சி. உங்கள் உயிர்த் தோழியோடு உங்கள் இனிய நட்பு, நெருக்கமான பழக்கம் இவற்றை எல்லாம் நான் கேட்காமலேயே சொல்லிவிட்டாய். ஒன்று கேட்கிறேன்; தவறாகக் கொள்ள வேண்டாம். நாம் இருவரும் பெண்கள்; இன்னொரு பெண்ணைப் பற்றிப் பேசப் போகிறோம். அதனால், உங்கள் கணவர் நம்மோடு இருக்கட்டுமா? வேண்டாமா? நீயே முடிவு செய்.''

இதைக் கேட்டதும் மீனாட்சியின் கணவர்,

''மீனா, அவர் கேட்பது சரிதான். நான் இருந்தால், ஒரு வரையறைக்குள்தான் பேசுவீர்கள்; வேண்டாம். நீங்கள் தயக்கமின்றிப் பேசலாம்; நான் வெளியே போய்விட்டு, உணவு நேரத்திற்கு உங்களுக்கும் ஏதாவது வாங்கிக் கொண்டு வந்துவிடுகிறேன்,'' என்று கிளம்பிவிட்டார்.

''பண்பான மனிதர்!''

''அன்பான கணவருங்கூட! எங்களுக்குள் எந்த ஒளிவு மறைவும் இல்லை; இருக்கவும் கூடாது என்பது எங்கள்

உறுதிப்பாடு. என் தோழி மரகதத்திடம் கூட இப்படித்தான் பேசுவேன். திருமணம் ஆன பின்னருங்கூட எங்களுக்குள் எல்லாவற்றையும் வெளிப்படையாகப் பேசிக்கொள்வதென்று முடிவெடுத்தோம். அதற்கு ஏற்ப, அவள் எல்லாவற்றையும் மறைக்காமல் சொல்லத்தான் செய்தாள். ஆனால், நான் அவளிடம் என்னைப் பற்றி எதுவுமே சொன்னது இல்லை."

அழுகை பொத்துக்கொண்டு வரத் தேம்பித் தேம்பி அழுதாள் மீனாட்சி.

"ஏன்? உன் கணவர் இப்படியெல்லாம் பேசக் கூடாதென்று தடை போட்டுவிட்டாரா?"

"இல்லை. அவள் இருக்கும் வரையில் எனக்குத் திருமணம் ஆகவில்லை. அவள் இருபத்து நான்கு வயதில் இறந்து போனாள்; நான் என் இருபத்தைந்தாவது வயதில்தான் திருமணமே செய்துகொண்டேன். அவள் கூச்சமின்றிக் கிளுகிளுப்பான நேரத்தை எல்லாம் சொல்வாள். ஆரம்பத்தில் நான் சற்றுக் கூச்சப்பட்டாலும் போகப்போகப் பழகி நானும் பேசுவேன். பத்தாவது படிக்கும் போதே, ஆண் பெண் உறவைப்பற்றி வெகு இயல்பாக என்னிடம் மட்டுமே பேசுவாள்."

"ஆச்சரியந்தான்! அஃதெப்படி அவ்வளவு சிறு வயதில் அறிந்து கொண்டாள்? தெரிந்துகொள்ள ஆர்வமாகத்தான் இருக்கும்; ஆனால், அவள் இவற்றை எல்லாம் எங்குக் கற்றாள்?"

"கற்றாள் இல்லை; கற்றோம்; ஆம், அவற்றை நாங்கள் ஒன்றாகவே கற்றோம். அவள் கொஞ்சம் அதிகமாகப் பேசுவாள். முதலிலிருந்தே சொல்லி விடுகிறேன்."

*******

ஒரு நாள் மீனாட்சியும் மரகதமும் கோவிலுக்குப் போய்விட்டுக் கிழக்கு வாசல் வழியாக வெளியே போகாமல்

ஒரு மாற்றத்திற்காக மேற்கு வாசல் வழியாக வெளியே வந்து நடந்து கொண்டிருந்தனர். திடீரெனப் பெருமழை பிடித்துக் கொண்டது. ஒதுங்க எங்கும் இடம் இல்லை. தென்னங்கீற்றால் மறைக்கப்பட்டிருந்த கோவில் தேர் அங்கிருந்தது. ஓடிப்போய்ப் பெரும் சக்கரத்தின் சந்தில் கூரையின் கீழ்க் குத்துக்கால் இட்டு உட்கார்ந்து விட்டனர். கீற்று மறைப்பு அவ்வளவாக உதவி செய்யாமற் போனாலும் முழுவதுமாக நனையாமல் பார்த்துக் கொண்டனர்.

தேர் அவர்கள் முதுகு பக்கம் இருந்தது. சிறிது வசதிப் படுத்திக்கொள்ள மரகதம் தேரின் பக்கம் திரும்பினாள். தேரில் இருந்த சிற்ப பொம்மைகளைக் கையால் பற்றிக்கொண்டு தேரினைப் பார்க்கும் படியாக உட்கார்ந்தாள்.

தேரைப் பார்த்த அவள் கண்கள் எதையோ கண்டு அகண்டு விரிந்தன; திடுக்கிட்டாள். நாணம் மிகுந்துவர வேறு பக்கம் தலையைத் திருப்பிக் கொண்டாள். குறுகுறுத்த மனத்தில் மீண்டும் அதைப் பார்க்கும் ஆவல் எழுந்தது. மரகதத்தின் போக்கில் மாற்றம் கண்ட மீனாட்சி, ‘என்னடி?’ என்றாள். எதுவும் பேசாமல் அந்தச் சிற்ப பொம்மைகளைக் காட்டினாள். அருவருப்படைந்த மீனாட்சி, ‘ச்சீ!’ என்றாள்.

குத்துக்கால் போட்டபடி மரகதம் நகர்ந்து, தேரை ஒரு சுற்று வந்தாள். எல்லாம் ‘அந்த’ மாதிரி பொம்மைகள்தாம்! ஆனால், வெவ்வேறு நிலைகளில்! வெட்கப்பட்ட மீனாட்சியை ஒரு வழியாகத் தேற்றி அவளையும் சுற்றிப் பார்க்க வைத்தாள்.

மழை அவர்கட்குத் துணையாக இருந்தது; வேறெவரும் அவர்கட்கு இடையூறாக வராமல் பார்த்துக் கொண்டது. மழை விடவில்லை. இவர்களும் தடையேதுமின்றி ஊன்றிப் பார்க்கலானார்கள். ‘சுடச்சுடப் புசுபுசு’ என்று வெப்பமாய்ப் பெருமூச்சு வெளிவந்தது.

'ச்சீ!' என்ற மீனாட்சியும் இப்போது விரும்பிப் பார்க்கலானாள். இப்படியுமா! ஒருவழியாக மழை விட்டது. அங்கேயே இருந்துவிட முடியுமா? வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தனர்.

அன்றிரவு அவர்களால் தூங்க முடிவல்லை என்று சொல்லவும் வேண்டுமா? அந்தக் காட்சிகள் மனத்திற்குள் வந்து வந்து போயின. அவர்கள் உடல் வெப்பம் அடைந்தன.

****** ******

அவளுடைய கணவன் கனகவேல் மிகவும் கூச்சகுணம் கொண்டவனாய் இருந்ததால், முதலிரவில் வியர்த்து விறுவிறுத்து நடுநடுங்க, மொத்தத்தில் மரகதம் நொந்து, வெந்து போனாள். எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி ஏங்கிய நெஞ்சம், ஏமாந்ததுதான் மிச்சம்!

''இந்தத் திரைப்படப் பாடல் இந்தச் சூழ்நிலையில்தானா நினைவிற்கு வரவேண்டும்? இவரை எப்படி மாற்றுவது? இவர்க்கு என்னத்தைச் சொல்லிப் புரியவைப்பது? தேருவாரா? ஆ! தேர், தேர். தேர்ந்தாள் நல்ல வழி!'

மருவீட்டு அழைப்பு என்ற முறைக்காக, மரகதமும் கனகவேலும் திருவண்ணாமலைக்குச் சென்றனர். அவர்களது பெரிய மகிழுந்தில்தான் சென்றனர். மாலைவரைப் பொறுமை காத்தாள்.

மீனாட்சி பள்ளியைவிட்டு வரவேண்டுமே! அவள் பதினொன்றாம் வகுப்புப் படிக்கிறாள். மணி ஐந்தாயிற்று.

''அம்மா, நான் மீனா வீட்டுக்குச் போய்விட்டு வருகிறேன்.''

அம்மாவிடம் சொல்லிவிட்டுக் கணவனிடம்,

"மாமா, நான் என் தோழி மீனாவைப் பார்த்து விட்டு வந்துவிடுகிறேன்," என்று கூறிப் புறப்பட்டாள்.

வழக்கம்போல் தோட்டத்து வழியாகப் பறந்தாள்.

மீனாட்சி வீட்டினர் அவளைப் பார்த்துக் கேட்டனர்:

"என்னடி இது? புதுசா கல்யாணம் ஆனவள் இப்படித் தனியாக நீ மட்டும் வந்திருக்கிறாயே! ஏன் வீட்டுக்காரரோடு வரக்கூடாதா?"

"இல்லை, அம்மா. நான் மீனாவிடம் நிறைய பேச வேண்டும்; அவர்கூட வந்தால், அது முடியாது. மீனா! என்ன அப்படிப் பார்க்கிறாய்? வாடி, கோவிலுக்குப் போகலாம்."

மீனாட்சியைப் பரபரவென இழுத்துக்கொண்டு மரகதம் ஓடினாள்.

"உம்! இன்னும் சின்ன குழந்தைதான்! பாவம்; அதற்குள் குடும்பப் பெண் என்ற பொறுப்பு எப்படி வரும்?"

மீனாட்சியின் அம்மா அங்கலாய்த்தார்.

இருவரும் வழக்கமான இடத்தில் அமர்ந்தனர். நடமாட்டம் இருந்தாலும் அவர்கள் பேசுவதை யார் கேட்கப் போகிறார்கள்? இளவட்டப் பையன்கள் மட்டும் அவர்களை நோட்டமிடுவார்கள்; அவ்வளவுதான்.

"என்னடி? கல்யாணம், முதலிரவுக் கதைகளைத்தாமே சொல்லப் போகிறாய்? உன்னுடைய பெரிய கனவு, ஆர்வம் எல்லாம் அமோகமாக நிறைவேறினவா? உம்!" கிண்டல் செய்தாள் மீனாட்சி.

"மீனா, நான் பேச வந்ததும் அதேதான்! நமக்குள் எப்போதும் ஒளிவு மறைவு இருந்ததில்லை; ஆனால் மீனா, அதிக எதிர்பார்ப்பு அதிக ஏமாற்றத்தைத்தான் தரும். எனக்கும் அதே நிலைதான்."

“என்னடி? என்ன ஆச்சு? இப்படி விரக்தியாகப் பேசுகிறாயே; முதலிரவு இன்னும் நடக்கவே இல்லையா?”

“நடந்தது...” என்று தொடங்கி அன்றிரவு நடந்ததை எல்லாம் சொல்லி, “இப்படிச் சின்ன பையன் போலப் பயந்து நடுங்குகிறாரே!” என்று முடித்தாள்.

“ஏய், ஏய்! உன் அவசரத்துக்கு எல்லாம் ஈடு கொடுக்க முடியுமா? கொஞ்சம் விட்டுப் பிடிப்பா!”

“முடியாது; என்னால் பொறுமை காக்க முடியாது. விட்டுப்பிடி என்றால்? அவர் நிலையைப் பார்த்தால், நான் கிழவி ஆனபின்தான் அவருக்குப் புரியும்; அப்போது அதற்குத் தேவையே இருக்காது. நான் ஒன்று சொல்வேன்; அது உதவுமா? சொல். நீதான் அவசரப்படாமல் அமைதியாய்ச் சிந்தித்துச் சொல்வாய்; கொஞ்சம் கேளடி.”

“ஏதேது? திட்டமெல்லாம் அணியமாக இருக்கிறது போலிருக்கே! சொல்லுடி.”

“நாம் பார்ப்போமே, நம்ம ஊர் தேர்; அதை அவர்க்குக் காட்டினால்?”

“நல்ல யோசனைதான்! காட்டு. ஆனால், திடுதிப்பென்று நீ திட்டமிட்டுக் கூப்பிட்டுப் போய்க் காட்டுவதாக இல்லாமல், தற்செயலாகப் பார்த்து விட்டாற்போல் காட்டு. பிறகு அவர் மனநிலைக்கு ஏற்பத் தொடரலாம்; என்ன?”

“இப்படியெல்லாம் நல்ல யோசனைகளைச் சொல்வாய் என்பதனால்தான், உன்னிடம் கேட்டேன். சரிடி, அப்படியே செய்கிறேன். சரி, சரி; வா, போகலாம்.”

மரகதவல்லி, அவள் சொன்னது போலவே அன்று மாலையே பெரிய மகிழூந்தில் கணவனைக் கூட்டிக்கொண்டு போய் ஓர் ஓரமாக நிறுத்துவதுபோல் தேரின் அருகில் நிறுத்த

வைத்து முதலில் இறங்கிக்கொண்டவள், தேரின் அருகில் முதுகைக் காட்டிக் கொண்டு நின்றாள்.

அவன் வந்ததும் ஏதேதோ பேசினாள். பின்புறமாக அவள் கைகள் தேரின் பொம்மைகளைத் தடவிக் கொண்டிருந்தன. எதேச்சையாக அவள் தொட்டுக்கொண்டு இருந்த பொம்மையைக் கண்டு கனகவேல் அதிர்ச்சியடைந்தான். அதைக் கண்டதும் மரகதம், மெல்லப் பின்புறமாகவே நகர்ந்து ஒவ்வொரு பொம்மையாகத் தடவிக் கொண்டிருந்தாள். அவள் எதுவும் தெரியாதவள் போல் முகபாவம் காட்டினாள்.

‘மரகதம், வா ; வா வேறு பக்கம் போகலாம்.’

அவள் வேண்டுமென்றே தேரின் மறுபுறம் போய் முன்போலவே தேருக்கு முதுகைக் காட்டியபடி நின்று கொண்டாள். மீண்டும் பொம்மைத் தடவல்! அவன் திகைத்தல் தொடர்ந்தது. அவன் அரை மனத்தோடு ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டிருப்பதை இவளும் ஓரக்கண்ணால் பார்த்தாள். வெப்பப் பெருமூச்சு விடுவது அவனுக்கு இயல்பாய்ப் போனது. ஒரு நமட்டுச் சிரிப்பை உதிர்த்தாள்.

அன்று மரகதமும் கனகவேலும் தனிமையில் பேசிக் கொண்டிருந்தனர்.

‘மரகதம்! இன்று மாலையும் கோவிலுக்குப் போகலாமா?’

‘போகலாம், மாமா. தினமும் காலை மாலை இரு வேளையும் போகலாம் மாமா. நாம் இன்னும் இரண்டு நாள்கள்தாம் இங்கிருப்போம். தினமும் போய்த் தெய்வத் தரிசனம் செய்துவிட்டு, மனத் தெளிவோடு வரலாம் ; ஆனால் மாமா, நீங்கள் கொஞ்சம் குழப்பமாக இருக்கிற மாதிரி தோன்றுகிறது ; ஏன் மாமா?’

‘இல்லையே! நான் தெளிவாகத்தானே இருக்கிறேன்.’

‘நீங்கள் தெளிவாக இருக்க வேண்டும் ; அதுதான் எனக்கு முக்கியம். ஆனால், என்னைப் பார்க்காமல் வேறெங்கோ

பார்த்துக் கொண்டிருந்தீர்கள்; ஏன்? நான் அழகாய் இல்லையா?'

'சீச்சீ! நான்... நான் உன்னை, உன்னைத்தான் பார்த்துக் கொண்டிருந்தேன்; ஆமாம்.'

அடுத்து இரண்டு நாட்கள், அவன் அந்தத் தேரை அங்குலம் அங்குலமாகப் பார்த்தான். அவன் மனம் உடல் இரண்டிலும் பெரும் மாற்றமும் ஆவலும் பரவ, ஏதோ இழந்து விட்டவனைப் போலவும் அதை அடைய வேண்டும் என்ற வேகமும் எழுந்ததை உணர்ந்தான்.

ஒரு வழியாக, மரகதம் தான் எதிர்பார்த்ததை முழுமையாகத் துய்த்து மகிழும் வாய்ப்பை வெகு சாமர்த்தியமாகத் தன் கணவனுக்கும் அளித்து, அவனோடு தானும் துய்த்தாள்.

ஒருநாள்கூட அவர்கள் இணைந்து இன்பம் துய்ப்பதைத் தவிர்த்தது இல்லை. ஒருவர்க்கு ஒருவர் அவ்வளவு இணைந்து செயல்படுவர். ஒரு திரைப்படப் பாடலை அவன் கூறுவான்:

'இகத்தில் இருக்கும் சுகம்
எத்தனை ஆனாலும்
இருவர்க்கும் பொதுவாக்கலாம்-
அன்பே அதன் எண்ணிக்கை விரிவாக்கலாம்.'

அவர்கள் தம் வாழ்வில் அப்பாடலின் ஒவ்வோர் எழுத்தையும் உணர்ந்து, துய்த்து உண்மையாக்கினார்கள்.

மரகதவல்லி இறந்துபோன பிறகு, தன் உள்ளத்தையும் காதலையும் மரகதத்தின்பால் இணைத்துக் கொண்டவன் உடலின் இச்சையை மட்டும் கட்டுப்படுத்த முடியாமல் தடுமாறித் தடம் மாறிப் போனான்.

திரிபுர சுந்தரிக்குத் தெளிவாயிற்று! கொலைக்குக் காரணம் பெண்கள் சகவாசம்தான். கொலையாளி பாதிக்கப் பட்ட பெண் அல்லது அவளுக்கு நெருக்கமான ஆணாகத்தான்

இருக்க வேண்டும்; ஆனால், யார் அது?

பட்டியல் இட்டாள்:

1. ஷெர்லி - ஏமாற்றமும் அவமானமும்,
2. நாராயணராவ் - மனைவியிடம் தவறாக நடந்தது,
3. தங்கவேல் - தான் சாரதாவை மணக்கத் தடையாய் இருந்தது,
4. பொன்னுவேல் - தான் திரைப்பட வாய்ப்புப் பெற பண உதவி செய்வதாகக் கூறி ஏமாற்றியது.

பட்டியல் சிறியதுதான்! இவர்களில் தீவிரக் குறிக்கோள் உள்ளவரைத் தேர்ந்தெடுத்தால், தங்கவேலும் ஷெர்லியுந்தாம் நிற்கிறார்கள். ஆனால், ஒவ்வொருவருடைய குணங்களையும் ஆய்ந்துதான் முடிவுக்கு வரவேண்டும்.

கனகவேலின் வீட்டுக் காவலாளியை இன்னும் விசாரிக்கவில்லை. காவலாளியை விசாரித்தாள்:

"கொலை நடந்த அன்று, காலையிலிருந்து மறுநாள் காலை வரை, யார்யார் எப்போது வந்தார்கள்? எப்போது திரும்பிப் போனார்கள்? பதட்டப் படாமல் நன்றாக யோசித்துச் சொல். கைகளைக் கட்டிக்கொண்டு மரியாதை காட்ட வேண்டியதில்லை; இயல்பாக இருந்துகொண்டு சொன்னாலே போதும். உட்கார்ந்து கொள். வேண்டாமா? சரி, சரி; சொல்."

காவலாளி சொன்னான்:

"காலை 8.30-க்கு, ஷெர்லி அம்மா சின்னம்மாவைக் கூட்டிக்கொண்டு பள்ளிக்குத் தானியில் போனார்; 9.30-க்குத் திரும்பிவிட்டார். அத்தோடு, மதிய உணவை 12.30- மணிக்குக் கொண்டுபோய், 1.30- மணிக்கெல்லாம் திரும்பிவிட்டார். பிறகு, 3.30- மணிக்குப் பள்ளிக்குப் போய்விட்டு 4.30 மணிக்குக் குழந்தையுடன் தானியில் திரும்பிவிட்டார்கள்.

ஐயா, காலை10-மணிக்குக் கிளம்பிவிட்டார். மதிய உணவிற்கு 12.30-க்கு வந்தார். சிறிது நேரத்தில், சின்னவர்

பொன்னுவேல் ஐயா வந்தார். அவர் அரைமணி நேரத்தில் திரும்பிவிட்டார். முதலாளி மீண்டும் 2-மணிக்கு வெளியே போனவர், மாலை 8- மணிக்குத் திரும்பினார். சிறிது நேரத்தில் அவருடைய தம்பி தங்கவேல் ஐயா, பெரிய அம்மாவுடன் துள்ளுவண்டியிலும் சாரதா அம்மா, தன் அப்பா அம்மாவோடு தானியிலும் வந்தனர்.

தங்கவேல் ஐயா, அரைமணி ஆனதும் திரும்பிவிட்டார். அவர் வண்டியை ஓட்டிச் சென்ற விதம், அவர் மிகவும் கோபமாய் இருப்பதாகக் காட்டியது; பொதுவாக அதிர்ந்து பேசமாட்டார். அன்று, ‘கதவைத் திறக்க இத்தனை நேரமாடா? உன் முதலாளிக்கு இருக்கும் கொழுப்பும் திமிரும் அப்படியே உன்னிடமும் இருக்கிறது; ஒழுங்காய் இருந்துகொள்! இல்லையேல், தொலைத்துவிடுவேன்; எவன் வருகிறான் பார்க்கிறேன்.’ என்றார். பொதுவாக அவர் யாரையும் மரியாதை குறைவாகப் பேசி நான் கேட்டதில்லை; ஆனால், அன்று அப்படிப் பேசியதால் நான் அதிர்ச்சி அடைந்தேன். மற்றவரும் பின்னாலேயே வந்து காத்திருந்த தானியில் சென்றுவிட்டனர்.

இரவு 9.30-க்கு, மேலாளர் தன் துள்ளுவண்டியில் வந்தார்; 10.30-க்கு மேல்தான் வெளியே போனார்.”

மேலாளர் அத்தனை நேரம் உள்ளே இருந்ததற்கான காரணத்தைத் திரிபுர சுந்தரி அறிந்திருந்தாள். காவலர் மேலே தொடர்ந்தார்.

“இரவு 11.30- மணி இருக்கும்; நான் சற்றுக் கண் அயர்ந்து விட்டேன். இனி யார் வரப் போகிறார்கள் என்ற அலட்சியமே காரணம். திடும்மென்று, பெரியம்மா வந்து கேட் கதவைத் தட்டினார். கண்விழித்த நான், தடுமாறிக் கேட்டைத் திறந்து விட்டேன். உள்ளே போய்விட்டு 20- நிமிடங்களில் திரும்பி வந்துவிட்டார். நான், ‘அம்மா, உங்களைச் சரியாகக்

கவனிக்கவில்லை; மன்னிச்சுடுங்க, அம்மா. ஐயாவுக்குத் தெரிந்தால், என்னை என்ன செய்வாரோ? பயமாய் இருக்கு,' என்றேன். அவர், 'உம்..,உம்,' என்று போய்விட்டார். அத்தோடு மறு நாள் காலை 10- மணிக்கு மேல், முதலாளி இறந்த செய்தியை மேலாளர் மூலம் தெரிந்து அலறி அழுதபடி வந்தார். அப்புறம் அத்தை வீட்டாரும் தம்பிகளும் ஓடி வந்து கூடி அழுதனர். அவ்வளவுதாம்.

எனக்குத் தெரிந்ததை எல்லாம் சொல்லி விட்டேன்; வேறு ஏதாவது பின்னர் நினைவுக்கு வந்தால் உங்களிடம் சொல்கிறேன், அம்மா."

காவலாளி சொல்லி முடித்தான்.

காவலாளி சொல்லியவற்றில், குறிப்பிட்ட செய்தி திரிபுர சுந்தரியைத் திடுக்கிட வைத்தது. ஆம்; வேலம்மையார் கொலை நடந்த இரவு கனகவேலின் வீட்டிற்கு மீண்டும் சென்றிருக்கிறார்! ஆனால், தன்னிடம் அதைப்பற்றி எதுவும் சொல்லவில்லையே; ஏன்? 'பொதுவாக அவனது ‼குறைநிறைகளை அறிந்து கொள்வதற்காகவே அவரை விசாரித்தேன்; மகனைக் கடைசியாக எப்போது பார்த்தீர்கள் என்று கேட்கவில்லையே!'

சரி; இன்னொரு முறை கேட்டுவிடலாம் என்று முடிவு செய்து கொண்டாள். அதற்கு முன் அஞ்சனாவை விசாரித்து விட முடிவு செய்தாள்.

# 18. அஞ்சனா

"ஆ!, சித்தி வராங்க," என்று மகிழ்ச்சியோடு சிரித்தாள் அஞ்சனா. திரிபுர சுந்தரிக்குச் சுருக்கென்றது.

'அந்த உறவு நிறைவேறாது என்று அந்தக் குழந்தைக்குத் தெரியுமா? அதைவிட, அவன் உயிரோடு இருந்திருந்தாலும் அந்த உறவை அவன் விரும்பி இருக்க மாட்டான் என்பதைப் பின்னால் தெரிந்து கொண்ட பிறகு, பாவம் தானா? குழந்தையா?

அவள் முகம் கோணும்படி ஏன் நடந்து கொள்ள வேண்டும்? அனைத்தும் அறிந்த பெரிய பையன்களே இன்னும் என்னை அண்ணி என்று கூப்பிடும்போது, இவள் சித்தி என்று அழைப்பதனால் என்ன நேர்ந்துவிடப் போகிறது?' மன ஓட்டம் நின்றது.

"கண்ணு, வேலையாய் இருந்ததால் உன்னைப் பார்க்க வரவில்லை; அத்தோடு, நான் வந்தால் நீ பள்ளிக்கூடம் செல்வதற்கு நானே தடையாய் இருந்திருப்பேன்; இல்லையா?"

சிறிது நேரம் வேடிக்கையாகப் பேசி விளையாடிக் கொண்டு இருந்தாள். பின்னர், வெகு இயல்பாக் கேட்டாள்:

"கண்ணு, அப்பா இறந்த போது, எங்கேடா இருந்தாய்?"

"ஷெர்லி ஆயா, இங்கே கூடத்திலேயே சோபாவில் கிடத்திக் கதை சொல்லித் தூங்க வைத்து விட்டாங்க."

"ஆயா, நல்ல கதைகளைச் சொல்வாளா?"

"ஓஒ! ஏசு கிறித்து, மேரிமாதா கதைகள் சொல்வாங்க. பாவம் யேசுவை எவ்வளவு கொடுமை பண்ணினார்கள்?"

“நீ உன் படுக்கை அறைக்கு எப்போது போனாய்?”

“போகவே இல்லை. சோபாவிலேயே தூங்கிவிட்டேன். நடுவில் விழித்துப் பார்த்தேன்; பாட்டி, அப்பா இருந்த மாடியிலிருந்து இறங்கி வந்தாங்க. நான் பாட்டி! பாட்டி! என்று கூப்பிட்டேன். அவங்க என்னைப் பார்க்காமலே போய் விட்டாங்க. என்னை அறையிலாவது விட்டுவிட்டுப் போவார்கள் என்று பார்த்தேன். தனியாகப் போக எனக்குப் பயமாக இருந்தது. வீட்டுக்கு வந்தால் என்னைப் பார்த்துக் கொஞ்சாமல் போகமாட்டார்; ஆனால், நான் கூப்பிட்டும் என்னைப் பார்க்காமல் போய் விட்டார்!”

“அஞ்சு? அது உன் பாட்டிதானா? வேறு யாராவதாக இருக்கப் போகிறார்?”

“என்ன சித்தி? என் பாட்டியை எனக்குத் தெரியாதா? அவர் என் பாட்டியேதான்.”

‘ஷெர்லி சொன்னது சரிதான். தூக்க மாத்திரை போட்டுக் கொண்டு தூங்கிவிட்டிருக்கிறாள். ஆனால், அம்மா? இங்கு வந்ததை என்னிடம் சொல்லவில்லையே? நான் கனகவேலின் பொதுவான குணங்களைப் பற்றி மட்டுமே கேட்டேன்; அவர் கடைசியாகக் கனகவேலை எப்போது, எங்கே பார்த்தார் என்று கேட்கவில்லையே? இனிக் கேட்டுவிட வேண்டியதுதான்.

அந்த அகால வேளையில் அம்மாவுக்கு அங்கு என்ன வேலை? காவலாளியிடமும் அஞ்சனாவிடமும் பாராமுகமாக இருக்கவேண்டிய அவசியம் என்ன? சண்டை போட்டுக் கொண்டு போயிருப்பார்களோ? அது கனகவேல் கொலையுண்ட நேரமாயிற்றே!’

மூளையைக் கசக்கிக் கொண்டாள்.

“சரிடா; இனிமேல் உன்னை அடிக்கடி வந்து பார்க்கிறேன். என்னடா செல்லம்?”

“சரி, சித்தி.” கையை ஆட்டி விடை கொடுத்தாள்.

திரிபுர சுந்தரி மீண்டும் வேலம்மையாரைத் தேடிச் சென்றாள்.

*******

“வா, சுந்தரி. என்ன? ஏதாவது துப்புத் துலங்கியதா? கொலை செய்தது யார் என்று கண்டு பிடித்துவிட்டாயா?”

“அம்மா, உங்களிடம் ஒரேயொரு கேள்வி.”

“கேளம்மா. எனக்குத் தெரிந்ததைச் சொல்கிறேன்.”

“நீங்கள், கனகவேலை அவன் இறக்குமுன் எப்போது பார்த்தீர்கள்?”

“நான், தங்கம், என் நாத்தனார், அவருடைய கணவர் கண்ணப்பர், சாரதா ஆகிய ஐவரும் சேர்ந்துபோய்ச் சாரதா திருமணத்தில் அவன் இடையூறு செய்வது பற்றி முறை இட்டோம். ஆனாலும் அவன் எங்களை அலட்சியப் படுத்திவிட்டான். நாங்கள் கோபமாகத் திரும்பி விட்டோம்.”

“ஆனால், அம்மா; மீண்டும் அன்றிரவு, அகாலத்தில் கனகவேல் வீட்டிற்குப் போயிருக்கிறீர்கள்!”

“இல்லையம்மா; நான் மீண்டும் அங்குப் போகவே இல்லை. இறந்த செய்தி கேட்டு, மறுநாள்தான் போனேன்.”

“மன்னியுங்கள், அம்மா! உங்கள் மகனைக் கொலை செய்ததற்காக உங்களைக் கைது செய்கிறேன்.”

“சுந்தரி? என்னம்மா சொல்கிறாய்? நான் என் மகனைக் கொன்றேனா? என்னைக் கைது செய்கிறாயா?”

விக்கித்துப் போனவர், பின் குலுங்கிக் குலுங்கி அழுதார்.

சற்று நேரத்திற்குள் எங்கும் செய்தி பரவியது. வேலம்மையாரின் மகன்கள், நாத்தனார், அவர் கணவர், சாரதா என எல்லோரும் அங்குக் குழுமிவிட்டனர்.

“என்ன காவல் ஆய்வாளர் அம்மா? அவர்களையா சந்தேகிக்கின்றீர்கள்?” கண்ணப்பர் கேட்டார்.

“ஐயா, இப்போது எதையும் கேட்காதீர்கள்; நான் எதுவும் சொல்லமுடியாது. அவரைத் தீவிர விசாரணை செய்த பின்னர்த்தான் எதையும் முடிவாகச் சொல்ல முடியும்.”

“ஒன்றுக்குள் ஒன்றாகக் குடும்ப நண்பராய்ப் பழகினீர்களே, இவர் கொலை செய்வார் என்று நம்புகிறீரா?”

“நம்பிக்கை வேறு; சூழ்நிலை வேறு. நீதிபதி முன் நிறுத்திக் காவல்துறை விசாரணைக்கு அனுமதி வாங்க வேண்டும். பிணை பெறுவது என்பதுகூட சாத்தியம் இல்லை.”

“அம்மா, நல்ல வழக்குரைஞரை வைத்து வழக்காடலாம்.” தங்கவேல் கூறினான்.

“வேண்டாம்; குற்றம் செய்யாத போது, நான் ஏன் அஞ்ச வேண்டும்? தேவையானால் நானே வழக்காடிக் கொள்கிறேன்.”

“என்ன சொல்கிறீர்கள்? நீங்களேயாவா? எப்படிம்மா?”

“எப்படியும் வழக்குரைஞரிடம் அனைத்தையும் சொல்லத்தானே வேண்டும்? என்னைப் பொருத்தவரை எதுவும் நடவாதபோது, நான் என்ன சொல்லிவிடக் கூடும்? அதனால், நானே பார்த்துக் கொள்கிறேன்; நடப்பது நடக்கட்டும்!

# 19. மூன்று நாள் காவல்

“ஆய்வாளரே, என்ன இந்நேரத்தில் வீட்டிற்கு வந்திருக்கிறீர்கள்?” நீதிபதி திரிபுர சுந்தரியிடம் கேட்டார்.

“ஐயா, இது ஆரம்ப நிலை விசாரணை. மேலே நீதி மன்றத்திற்குப் போகப் போதுமான அடிப்படை இருக்கின்றதா என்பதை ஆய்ந்து முடிவு செய்ய வேண்டும்.”

“பொதுவாகக் குற்றஞ் சாட்டப்பட்டவர் இங்கே வந்ததும் குற்றத்தை ஒப்புக்கொள்வார்; இது என்ன முறைப்படி நடவடிக்கை? யார் மேல் வழக்கு?”

“என் தாய்க்கு நிகரான அம்மையார். பள்ளியில் என்னோடு படித்தவன்தான் கொலையுண்ட கனகவேல். மகனைக் கொல்ல வேண்டிய காரணம் புரியவில்லை. சூழ்நிலை அவருக்கு எதிராக இருக்கிறது. ஒரு வேண்டுகோள்!”

“என்ன? சொல்லுங்கள்.”

“வருகிற சாட்சிகள், கொலையுண்டவரின் ஏழு வயதுப் பெண்; இன்னொருவர் அவர் வீட்டின் காவலர். இருவரும் இப்படிச் சாட்சி சொல்ல வருகிறோம் என்றே அறிய மாட்டார்கள்! கேள்விகள் எதார்த்தமாக இருந்தால், உள்ளது உள்ளபடி உரைத்திடுவார்கள். அதனால்தான் வீட்டிற்குக் கூட்டிவந்தேன். அந்த அம்மாவிடமும் விசாரணை நடப்பதாக யாரும் நினைக்காதபடி உரையாட வேண்டும்; குறுக்குக் கேள்விகள் இப்போது வேண்டாம் என்றும் நான் சொல்லி வைத்திருக்கிறேன்.”

“மிகவும் கவனமாகத்தான் இருக்கின்றீர்கள்! நல்லது; வரச் சொல்லுங்கள்?”

வேலம்மையார் முதலில் வந்தார். நீதிபதி கேட்டார்:

"ஆய்வாளர் சொன்னதை ஏற்றுக் கொள்கிறீரா?"

"அம், ஐயா. சுந்தரி கூட ....மன்னிக்க வேண்டும்; ஆய்வாளர் அம்மா எங்கள் குடும்ப நண்பர்தான்; அவர் மீது நான் எந்தக் குறையும் சொல்லமாட்டேன். சூழ்நிலையின் விளையாட்டு! ஆனால், நான் நீதியை மதிக்கிறேன்; ஆய்வாளரையும் மதிக்கிறேன்."

திரிபுர சுந்தரி நெளிந்தாள். தன்னை வேலம்மையார் 'ஆய்வாளர்' என்றழைத்ததும் வேதனை கொண்டாள்.

முதலில், காவலாளி விசாரிக்கப் பட்டான்.

"அம்மா, இரவு 11.30 க்கு வந்தார்கள். நான் அன்று அந்த நேரத்தில் யார் வரப்போகிறார்கள் என்று அலட்சியமாக உறங்கிப்போய் விட்டேன். அம்மா கேட்டைத் தட்டியதும் விழித்துக் கொண்டு கதவைத் திறந்தேன். 'மன்னிச்சிக்குங்க, அம்மா. என்னையும் மீறி அசந்துவிட்டேன். ஐயாவுக்குத் தெரிந்தால் என்ன செய்வாரோ? பயமாக இருக்கிறது,' என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே, விருட்டென்று உள்ளே சென்று விட்டார். அதன் பிறகு 11.40 மணிக்குத் திரும்பி வந்தார். அதே கோபத்துடன் வெளியே போனார்; அவ்வளவுதாம், ஐயா."

அடுத்துக் குழந்தை அஞ்சனா! சாதாரணமாகச் சிறிது நேரம் பேசி இருந்துவிட்டுத் திரிபுர சுந்தரி சொன்னாள்:

"அன்றைய தினம், பாட்டி வந்தும் இவளிடம் பேசாமலும் கொஞ்சாமலும் போனதில் இவளுக்குக் கோபம்."

"ஆமாம், சித்தி. ஏன் பாட்டி? நான் கூப்பிடக் கூப்பிட என்னைப் பார்க்காமல் போயிட்டீங்க?"

"தப்புத்தான்டா கண்ணு; நீ தூங்குகிறாய் என்று நினைத்துப் போய்விட்டேன்டா.?

மீண்டும் மூவரும் தனித்து இருக்கையில் வேலம்மையார்,

"ஐயா. குந்தைக்காக அப்படிச் சொன்னேன். உண்மை என்னவென்றால், அந்த நேரத்தில் நான் அந்த வீட்டிற்குப் போகவே இல்லை," என்றார்.

"பின் குழந்தை ஏன் அப்படிச் சொல்லவேண்டும்?"

"அதுதான் எனக்கும் புரியவில்லை! ஏதாவது கனவு கண்டிருப்பாளோ? என்னவோ?"

"குழந்தை பொதுவாகப் பொய் சொல்லாதே."

"ஐயா, குழந்தை மட்டுமின்றி எங்கள் வீட்டுக் காவலனும் பொய் சொல்லமாட்டான்; மிகவும் நம்பிக்கை ஆனவன்தான். அவனும் இப்படி என்னைப் பார்த்ததாகச் சொல்வது உண்மையில் எனக்கு விந்தையாக உள்ளது."

"சரி. ஆய்வாளரே, மூன்று நாட்கள் உங்கள் காவலில் எடுத்து விசாரிக்க அனுமதிக்கிறேன்."

'கனகவேல் வீட்டுக் காவலனும் கனகவேலின் குழந்தையும் தவிர வேறு ஆதாரம் இல்லை. ஒரு தாய் தன் மகனைக் கொல்ல ஆழ்ந்த காரணம் வேண்டும். அஃதென்ன?

தன் சொற்படி இரண்டாம் மகனுக்குப் பண உதவி செய்ய மறுத்தது! சிறியவனுக்கு உதவி கேட்க அவனோடு சென்று உதவி கேட்டாள். அவன் மனம் சிறிதும் மாறாதவனாய் முரட்டுத் தனத்துடன் மறுத்துவிட்டான். கோபத்தில் தாயும் தன் மூத்த மகனைப் பார்த்து, ' இப்படிப் பணப்பிசாசாக இருந்து என்ன சாதிக்கப் போகிறாய்? செத்தொழிந்து பூதமாகி உன் சொத்தைக் காப்பாற்றிக் கொள்ளப் போகிறாயா? உனக்கு மரணம் வெகு தொலைவில் இல்லை!' என்று கத்திவிட்டு வந்துவிட்டனராம். சின்னவன் சொன்னான்.

சின்ன மகனுக்கு உதவாத மூத்தவனைக் கோபத்தில் திட்டியிருக்கக் கூடும்; ஆனால், அதுவே முழு ஆதாரமாகி விட முடியுமா? ஆத்திரத்தில் உணர்ச்சி வசப்பட்டுக் கொலை செய்திருக்கக் கூடிய வாய்ப்பு மிகமிகக் குறைவுதான்; இருந்தாலும் முழுமையாக ஒதுக்கிவிடவும் முடியாது.'

அவளுடைய சிந்தனை திடீரென்று தடைபட்டது. 'இந்த இருவரின் சாட்சியங்கள் போதுமா? இவைகூட சூழ்நிலையைச் சார்ந்தவை; நீதிமன்றத்தில் நிலைக்குமா? வேறு ஏதாவது தடயங்கள்? அடடா! காவலாளி, அம்மா வந்ததைப் பார்த்தான்; போனதைப் பார்த்தான். எப்படிக் கவனிக்காமல் விட்டுவிட்டேன்? என் மூளை மழுங்கிவிட்டதா? ஆம், அந்த அகால வேளையில் எந்த வாகனத்தில் வந்தார்? மகிழுந்தா? தானியா? காவலாளியிடம் அதை விசாரிக்காமல் விட்டு விட்டோமே! அவனே என்னிடம் சொல்லி இருக்கலாமே என்று எண்ணுவது என் மடத்தனம்! அடுத்தமுறை பார்க்கும் போது, அவனைக் கேட்கலாம்; அவன் நல்ல செய்தி ஏதும் தந்தால், மிகவும் நன்றாயிருக்கும்!'

சிந்தித்த வண்ணம் அப்படியே தூங்கிப் போனாள். ஆனால், மனம் மட்டும் விழித்துக் கொண்டிருந்ததை அவள் உணரவில்லை.

திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தாள். இன்று அஞ்சனாவை எங்கேனும் கூட்டிக்கொண்டு போய், அவள் அறிந்த வேறு ஏதாவது செய்திகள் கிடைக்குமா என்று பார்க்க வேண்டும். விடிந்ததும் முதல் வேலை அதுதான்.

# 20. திருப்பம்

திரிபுர சுந்தரி சாதாரண உடையில் புறப்பட்டாள். இடையே சில வேலைகள் இருந்ததால், கனகவேல் வீட்டிற்குப் போனபோது மணி பத்தாகிவிட்டது.

இவள் போனபோது, அங்கே திருவண்ணாமலையில் இருந்து வந்திருந்த கனகவேலின் மாமனார் அருணகிரியும் மாமியார் வேதவல்லியும் இருந்தார்கள். சம்பந்தியம்மாள் கைதானது கேட்டு, விசாரிகக வந்து இருந்தனர் போலும்! திரிபுரசுந்தரியைச் சாவு வீட்டில் முன்னரே பார்த்து உள்ளனர். அவளைப் பார்த்ததும் சற்று முகத்தைச் சுளித்தார்கள்.

“ஐயா, நான் சும்மாதான் வந்தேன். அஞ்சனாவைப் பார்க்க வந்தேன். நீங்கள் என் மேல் கோபம் கொள்வதில் தப்பில்லை; ஆனால், என்ன செய்வது? அது என் வேலை.”

“ஆய்வாளர் அம்மா! நாங்கள் சும்மா வரவில்லை; உங்களைப் பார்க்கத்தான் வந்தோம். எங்களுக்கு நேற்று ஒரு கடிதம் வந்தது. அனுப்பியவர் முகவரி உறையில் இல்லை. பிரித்துப் பார்த்தேன். அதில், இறந்துபோன மாப்பிள்ளை அவர் இறந்த அன்றைய தேதி இட்டிருந்தது. இந்தாருங்கள்; நீங்கள் படிக்க வேண்டிய கடிதந்தான்.”

கூறியவாறு, அருணகிரியார் கடிதத்தை அவளிடம் நீட்டினார். திரிபுர சுந்தரி வாங்கிப் படித்தாள்; நிமிர்ந்தாள்.

“இது துப்புத் துலக்க எந்த அளவுக்குப் பயன்படுமோ? தெரியவில்லை. ஆனால், மாப்பிள்ளை இறந்த பிறகு, அஞ்சலில் - அதுவும் கடலூர் இரயில் நிலையத்திலுள்ள ஆர்.எம்.எஸ்ஸில் சேர்க்கப் பட்டிருக்கிறது. தட்டச்சில் எழுதப்பட்டு உள்ளது. இதன் பின்னணி என்னவாக இருக்கும் என்று தெரியவில்லை. எல்லார் எதிரிலும் இதைப்பற்றி விரிவாகப் பேச இப்போது நான் விரும்பவில்லை.”

“அதுவும் சரிதான். பிறகு இது பற்றி விசாரிக்கிறேன். நீங்கள் கோபிக்கவில்லை என்றால், அஞ்சனாவோடு கொஞ்ச நேரம் வெளியே போய் வருகிறேன். நிச்சயமாக, நீங்கள் நினைக்கும் இடத்திற்கு இல்லை. பாட்டியைப் பார்க்கவும் இல்லை. அவளோடு சிறிது நேரம் நான் இருந்தால், என் மன இறுக்கம் சற்றுக் குறையும் என்ற தன்னலந்தான்.”

“சரிங்க, ஆய்வா...” வேதவல்லி தடுமாறினார்.

“அம்மா, என்னைச் சுந்தரி என்றே கூப்பிடுங்கள்.”

அவர்கள் திரிபுர சுந்தரியை உடனடியாகக் கிளம்ப அனுமதிக்கவில்லை. சிற்றுண்டி, காபி எல்லாம் சாப்பிடச் சொல்லி, வற்புறுத்திச் சாப்பிடச் செய்துதான் அனுப்பினர்.

“சித்தி, எங்கே போகிறோம்?”

அஞ்சனாவும் விடுதலை நிலை அடைந்திருந்தாள். பாவம்! அப்பா இறந்த பிறகு, எத்தனை நாட்கள் அவள் தனியாகத் தவிப்பாள்? எல்லாரும் துக்கமாகவே பேசி, அவளை அழும் நிலைக்குத்தான் ஆளாக்கினார்கள்.

வெளி வாயிலை நெருங்கியபோது, எதிரே பொன்னுவேல் வந்தான்.

“என்ன, அண்ணி? எங்கே கிளம்புகிறீர்கள்? அதுவும் அஞ்சனாவோடு?”

“ஆமாம்டா பொன்னு; அவள் வீட்டிலேயே அடைந்து கிடக்கிறாள். எனக்கும் ஒரே மன இறுக்கம்! இருவரும் கொஞ்சம் மனஅமைதிக்காக வெளியே போகிறோம். நீ எங்கேடா இங்கு?”

“அண்ணி, இன்றைக்கு என் நாடகம் ஒன்று நெய்வேலி நகரில் நடக்க இருக்கிறது. நானும் அஞ்சனாவைக் அழைத்துப் போகலாம் என்றுதான் வந்தேன். அண்ணி, உங்களுக்குத் தெரியுமா? அவள்தான் என் முதல் ரசிகை! அதனால், உள்ளூரில் நடக்கும் எல்லா நாடகத்திற்கும் கட்டாயம் வருவாள்; அவள் தன் அம்மா அப்பாவைச் சில வேளைகளில் வற்புறுத்திக் கூட்டி வருவதும் உண்டு.”

"அப்போ, நானும் வரலாமா?"

"அண்ணி, நீங்களா? உண்மையாகவா? வந்தால் நான் மிகவும் மகிழ்வேன்! மாலை ஆறரை மணிக்கு நாடகம் தொடங்கும்; அவசியம் வாருங்கள். அஞ்சனா?"

"பொன்னு, அவளை நானே அழைத்துக் கொண்டு வருகிறேன்."

"சரி, அண்ணி. உங்களுக்காக முன் வரிசையில் இரண்டு இருக்கைகள் ஒதுக்கும்படி சொல்லி வைக்கிறேன். போய் வருகிறேன், அண்ணி?"

அஞ்சனாவும் திரிபுர சுந்தரியும் வெளியே கிளம்பினர்.

*******

"அஞ்சனா, அன்று இரவு பாட்டி வீட்டைவிட்டுப் போனதாகச் சொன்னாயே, எப்படி வந்தார்? மகிழுந்திலா? எனக்குத் தெரியும் உன் பாட்டி மகிழுந்தை ஓட்டக் கூடியவர்."

"இல்லை, சித்தி. அன்று அவர் நடந்துதான் போனார்; நான் படுத்திருந்த சோபாவில் இருந்து பார்த்தேன். வெளியே காவலாளி இரும்புக் கதவைத் திறந்து மூடும் வரை பார்த்தேன். நடந்துதான் போனார்."

"நன்றாகக் கனவு கண்டிருக்கிறாய்!"

"இல்லவே, இல்லை. நான் எழுந்து உட்கார்ந்து கொண்டேன். 'பாட்டி! பாட்டி!' என்று கூப்பிட்டேனே!"

'இதற்குமேல் குழந்தையை குடையக் கூடாது.,' என்று எண்ணிக்கொண்டு புறப்பட்டு வீட்டில் கொண்டு விட்டுவிட்டுக் காவல் நிலையத்திற்குப் போனாள்.

வேலம்மையாரைப் பார்த்துக் கேட்டாள்,

"அம்மா, சாப்பிட்டீர்களா?"

"உன் புண்ணியத்தில் அதற்கெந்தக் குறையும் இல்லை."

"அம்மா! ஒரு சின்ன கேள்வி: அன்றைக்கு இரவு கனகவேல் வீட்டிற்கு எப்படிப் போனீர்கள்? நீங்கள் மகிழுந்து ஓட்டுவீர்கள் என்று எனக்குத் தெரியும்; அதனால்தான் கேட்டேன்."

வேலம்மையார் அவளைச் சற்று நேரம் முறைத்துப் பார்த்தாள்.

"என்னை என்ன பைத்தியக்காரி என்று நினைத்துக் கொண்டாயா? நான் அங்குப் போகவே இல்லை என்று ஆரம்ப முதலே சொல்லிக் கொண்டு இருக்கிறேன்; நீயானால் உன் காவல்துறை சாமர்த்தியத்தை என்னிடம் காட்டுகிறாய்! எல்லாம் நான் வந்த விதி."

தலையில் அடித்துக்கொண்டு அழுதார். திரிபுர சுந்தரி மெல்ல நழுவிச் சென்றார்.

மாலையில் அஞ்சனாவை நாடகத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும். கனகவேல் வீட்டிற்குப் புறப்பட்டாள்.

கதவைத் திறந்த காவலாளியிடமும் அதே கேள்வியைக் கேட்டாள்.

"பெரிய அம்மா நடந்துதான் வந்தார்கள்; நான் கேட்டைத் திறந்துவிட்டேன். போகும் போதும் நடந்துதான் போனார்கள்."

"சுற்றுச் சுவர்ப் பக்கம் ஏதாவது வண்டி நின்றிருந்ததா?"

"நான் பயத்தில் இருந்தேன். கேட்டைச் சாத்துவதில் கவனம் இருந்ததால், பெரியம்மா எப்படிப் போனார்கள் என்று கவனிக்கவில்லை."

"சுத்தம்! நல்ல காலாளிதான்; போ."

அலுத்துக் கொண்டாள்; நாடகம் பார்க்க வேண்டும் என்ற உண்மையான ஆசை நழுவிப் போய்விட்டது. குழந்தையிடம் சொல்லி விட்டோமே என்று, வேண்டா வெறுப்பாகக் கிளம்பினாள்.

அஞ்சனா உற்சாகமாய்த் தன் சித்தப்பாவின் பிரதாபங்களை மூச்சுவிடாமல் பேசிக்கொண்டு வந்தாள். சின்னவனுக்கு இவள் ரொம்பச் செல்லம் என்று திரிபுர சுந்தரி நன்கு அறிவாள். பாவம்! குழந்தை சொல்வதற்கு எல்லாம், அசட்டுச் சிரிப்புச் சிரித்தாள்.

அவர்களுக்காக ஒதுக்கிய இருக்கையில் இருவரும் அமர்ந்தனர். நாடகம் விறுவிறுப்பாகப் போய்க் கொண்டிருந்தது. அஃதொரு துப்பறியும் கதை; மக்கள் கைதட்டி ஆரவாரம் செய்வதிலிருந்து, காட்சிகள் சிறப்பாக இருந்தன என்பது புரிந்தது; ஆனாலும் அவளுடைய மனம் நாடகத்தில் ஈடுபாடு கொள்ளவில்லை.

அஞ்சனா திரிபுர சுந்தரியின் அருகில் நெருங்கிக் காதோரம் ஏதோ சொன்னாள். விறைப்பாக நிமிர்ந்து அமர்ந்தாள். இறுதிக் காட்சியும் முடிந்தது, திரை இறங்கி மேடையை மூடியவுடன் அஞ்சனாவோடு அரங்கிற்குள் சென்றாள்.

“பொன்னுவேல்! இல்லை, இல்லை; வேலம்மையாரே! உங்களைக் கைது செய்கிறேன்.”

ஆம்! அப்பொழுது பொன்னுவேல் பெண் வேடத்தில் இருந்தான். அஞ்சனா அவள் காதில் கிசுகிசுத்தது இதுதான். ‘சித்தி, எங்க சித்தப்பாவைப் பாருங்களேன்; அசல் அச்சாக எங்கள் பாட்டி மாதிரியே இல்லை? நடக்கிறது, நொடிக்கிறது எல்லாம் என் பாட்டியேதான்!’

“அண்ணி...?”

“நிறுத்து! ஆய்வாளர் என்று கூப்பிடு.”

அதன் பிறகு, பொன்னுவேல் பேசவே இல்லை. காவல் நிலையம் நோக்கிக் காவல்துறை வண்டியில் போய்க்கொண்டு இருந்தான்.

# 21. பொன்னில்லை; புழுதி!

காவல் நிலையத்தில்,

“சொல்லுடா; ஏன் இப்படிச் செய்தாய்?”

“கொலைகாரனைப் பிடிக்கத்தான் இப்படிப் பெண் வேடத்தில் வந்தேன்; கண்டுபிடித்தவுடன் மக்கள் ஆரவாரத்தைப் பார்த்தீர்களா, ஆய்வாளரே! அதுதான் என் நாடக உத்தி?”

“என்னடா, கிண்டலா? நான் என் காவல் அதிகாரி உருவத்தைக் காட்டுமுன், நீ உன் உண்மை உருவத்தைக் காட்டி, உண்மையைச் சொல்லிவிடு.”

பொன்னுவேல் தன் பெண்ணுருவைக் கலைத்துவிட்டுப் முழுக்கால் சட்டை, பனியனோடு நின்றிருந்தான்.

“உருவத்தைக் கலைத்துவிட்டேன். ஆனால், என்ன உண்மையைச் சொல்ல வேண்டும்?”

கோபத்தின் உச்சிக்கே போய்விட்ட திரிபுர சுந்தரி, எழுந்து அவன் கன்னத்தில் ஓங்கி ஓரறை விட்டாள். பொன்னுவேல் நிலைகுலைந்து போனான்.

“என்னடா? இங்கும் நாடகமா? தொலைத்து விடுவேன். ஏன்டா உன் அண்ணனைக் கொலை செய்தாய்?”

“என்ன? என் அண்ணனை நான் கொலை செய்தேனா?”

சொல்லி முடிக்குமுன் அடுத்த இடி பாய்ந்தது அவன் கன்னத்தில்!

“அன்று இரவு உன் அண்ணன் வீட்டுக்குத் தனியே மீண்டும் போனாயா?”

"போனேன்."

"உம்ம்! அப்படி வா வழிக்கு. சொல்; அங்கு நீ எப்படிப் போனாய்? என்னென்ன செய்தாய்? ஒழுங்கு முறையாக உண்மையை மட்டும் சொல்."

பொன்னுவேல் சொன்னான்:

'மரகதவல்லி இறக்குமுன், கனகவேலின் மீது யாருக்கும் வெறுப்பு இருந்ததில்லை; ஆனால், பொறாமை இருந்தது என்பது உண்மைதான். பொன்னுவேல் சிறியவன். அவனைப் பொருத்தவரையில், வெறுப்பும் கிடையாது; பொறாமையும் கிடையாது. பெரியவனானபின், தனக்குப் பண உதவி அம்மா மூலம் கேட்டபோது அவன் மறுத்தபோதுங்கூட, அவனுக்குக் கோபம் வரவில்லை.

ஆனால், மரகதவல்லி இறந்த பிறகு, கனகவேல் அடியோடு மாறிப் போனான். அதிலும் பெண்களின் தொடர்பு பரவலாகத் தெரிந்தபோது, பொன்னுவேல் அவனை வெறுக்கத் தொடங்கினான்; ஆனால், என்றும் வெளியில் காட்டிக் கொண்டதில்லை. ஆனால், அண்ணன் அவன் வழியிலேயே குறுக்கிட்டபோது, உள்ளே கோபம் கொத்தளித்தது! தன் காதலியும் நாடகக் கதாநாயகியுமான காஞ்சனா அவன் வலையில் விழுந்துவிட்டபோது, வெடித்து விட்டான். அவள் தன் அருகில் இருந்தபோது படம் எடுக்க முதலீடு செய்கிறேன் என்று சொன்ன கனகவேல், காஞ்சனா தன் வலையில் முற்றிலுமாக விழுந்துவிட்டதை உணர்ந்து, பொன்னுவேலை மெல்லக் கழட்டி விட்டுவிட்டான். தம்பியின் காதலி ஆயிற்றே என்று பார்க்கும் நாகரிகம் துளிகூட அவனிடம் காணப்படவில்லை.

'அண்ணா, படம் எடுக்கப் பண உதவி செய்கிறேன் என்றீர்களே?'

'உனக்கென்ன பைத்தியமா? இப்போது காஞ்சனா என் கையில்! நானே அவளை வைத்துப் படம் எடுத்துக் கொள்வேன்; நீ பேசாமல் ஒதுங்கிவிடு.'

'இது துரோகம்! ஏமாற்று வேலை! நான் உன்னைச் சும்மா விடமாட்டேன்.'

'போடா, போ! எது வேண்டுமானாலும் செய்து கொள்.'

"அன்றைக்கு நான் போனது அவனைக் கொல்லத்தான்! அவனைக் கொல்லத்தான்! இப்போது நான் சொல்வதைக் கேட்டால் என்னை அடிப்பீர்கள். ஆம்; நான் அவனைக் கொல்லவில்லை. நான் போவதற்கு முன்பே அவன் இறந்து கிடந்தான். நீங்கள் என்னை நம்பமாட்டீர்கள். காவல் துறை எப்படியும் உண்மையான கொலையாளியைக் கண்டுபிடித்து விடும் என்ற நம்பிக்கையில்தான், நான் இந்தச் செய்தியை உங்களிடம் முன்பே சொல்லவில்லை. மீண்டும் சொல்கிறேன்; உண்மையில் என் அண்ணனை நான் கொல்லவில்லை."

"அம்மாவைக் கைது செய்தபோதாவது, சொல்லி இருக்கலாம். இல்லையா?"

"அதுதான் முன்பே சொன்னேனே; காவல் துறையினர் எப்படியும் உண்மையான குற்றவாளியைக் கண்டுபிடித்து விடுவர் என்பது என் உறுதியான நம்பிக்கை! அதனால், அம்மாவை விட்டுவிடுவீர்கள் என்று எதிர்பார்த்தேன்."

திரிபுர சுந்தரி சிறிது நேரம் சிந்தித்தாள்.

"சரி; அந்த வீட்டிற்கு அந்த அகாலத்தில் யாரும் அறியாமல் எப்படிப் போனாய்? எப்படித் திரும்பினாய்?"

"என் வீட்டில் ஒரு பழைய மிதிவண்டி உண்டு; பக்கத்தில் எங்காவது போவதென்றால், அதில் போவேன். அன்று இரவு அதில்தான் பெண் உருவில் சென்றேன். அன்று இரவு, பாதி தெரு விளக்குக்கள் எரியவில்லை. அண்ணன் வீட்டிற்குச் சற்று முன்னதாகவே இறங்கிக்கொண்டு, வண்டியை ஒரு மரத்தில் சாத்திவிட்டு நடந்து போனேன். அதே போல் திரும்பவும் வந்து சேர்ந்துவிட்டேன். நடமாட்டம் இல்லாத இடம், நேரம்; அதனால், எனக்கு எந்தப் பிரச்சனையும்

எழவில்லை. இதுதான் நடந்தது. காவலாளியிடம் நான் பேசவே இல்லை. 'ஆங்., ஊம்,' அவ்வளவுதாம்."

வேலம்மையாரை அவசரப்பட்டுக் கைது செய்ததைப் போல், இவனையும் கைது செய்தால், தன்னுடைய அவசர புத்தி வெளிப்பட்டுவிடும்; ஆகவே, அவனை வைத்தே அந்த அம்மையாருக்குப் பிணை வாங்க வைத்தாள். அதனால், அவன்மேல் அவள் சந்தேகம் கொள்ளவில்லை என்று காட்டிக் கொண்டாள். பொன்னுவேலுக்கும் நல்ல பெயர்.

ஆயினும் நிகழ்வுகளின் நிரலில், நடுநடுவே இடைவெளி இருக்கின்றனவே! தன் அணுகு முறைதான் சரியில்லை என்பதை உணர்ந்தாள்.

'குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பதைப்போல என்பார்கள்; அதைப்போல, மனத்தை நானே குழப்பிக்கொண்டு வழுக்கும் மீனைப் பிடிப்பதைப் போல இவ்வழக்கைக் கையாள்கிறேனோ?

இவ்வழக்கை விட்டுச் சிறிது நேரம் வேறு எதையாவது சிந்திப்போமோ என்றால், மனம் வழக்கைவிட்டு விலக மறுக்கிறது. முடிந்தவரை தெளிந்த மன நிலையில் இருந்து சிந்திப்போம்,' என்று முடிவெடுத்தாள்.

விசாரணையின் விளைவாக வழக்கிலிருந்து ஒதுக்கப் பட்டவர்கள்:

1. வேலம்மையார்- தான் செய்த தவறு தன்னையே உறுத்தியது. அவர் மேல் ஐயுற்றதே தவறு.

2. ஷெர்லி- அந்தச் சில கணங்களில் வேட்கையின் வெப்பத்தால் வெடித்துத் துடித்தவளின் நடவடிக்கை அது! ஆனால், அவளுடைய செவிலியர் பணியின் பயிற்சியால் பின்னர் அவள் பொறுமை காத்தாள்; அவ்வளவே.

3. மஞ்சுகுட்டி- அரசனுக்கும் புருசனுக்கும் நடுவில் மாட்டிக்கொண்ட பேதை. அவள் கணவனோ, தன்னால்

எதுவும் செய்ய இயலாதென்பதை உணர்ந்து, வேறு ஊருக்குச் செல்ல முடிவெடுத்தவன்.

4, மேலாளர்- திறமையான, உண்மையான ஊழியர், அப்பழுக்கற்றவர். ஆனாலும் கடிதம் அவர் மூலமாகப் போனதா? விசாரிக்க வேண்டும்.

5. கனகவேலின் அத்தை, மாமா - சந்தேகப் பட்டியலில் வராதவர்.

வழக்கில் ஆய்விற்கு உரியவர் - எழும் ஐயங்கள்:

6. தங்கவேல் - சாரதா மணத்தால் மனத்தளவில் பாதிக்கப்பட்டவன். ஐயத்திற்கு உட்பட்டவன்.

7. பொன்னுவேல் - இனித்தான் முடிவு செய்ய வேண்டும்.

8. சாரதா- ஆம்! இவளை மீண்டும் விசாரிக்க வேண்டும்.

9. கனகு, அவனுடைய மாமனாருக்கு எழுதிய கடிதத்தை நுணுகி ஆராய வேண்டும்.'

சாரதாவைப் பார்க்கும் முன்னர்க் கடிதத்தை ஆராயலாம் என்று முடிவெடுத்துக் கடிதத்தைப் பிரித்தாள்.

'மதிப்பிற்குரிய மாமனார் அவர்கட்கு! கனகவேல் எழுதிக் கொள்வது: நான் நலமே; ஆனால், அஞ்சனாவைத் தனிக் கவனம் எடுத்துப் பார்த்துக்கொள்ள முடியவில்லை. என் அம்மாவும் தம்பிகளும் அவளைப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று நான் எதிர்பார்க்க முடியாது; ஆகவே, நீங்கள் அவளை உங்கள் நேரடிப் பார்வையில் திருவண்ணாமலையில் வைத்துக் கொள்ளுங்கள். நான் உங்களின் நம்பிக்கைக்காக, என் சொத்துக்கள் முழுவதையும் அவளின் பேரில் எழுதி, உங்களைப் பாதுகாவலராக நியமித்து இருக்கிறேன். என் குடும்பத்தினர் என் சொத்துக்கள் மீது குறியாய் இருப்பதில் எந்த ஆச்சரியமும் இல்லை; அது இயல்பானதுதான். எதற்குப் பிற்காலத்தில் வம்பு என்றுதான் உயிலை இப்போதே எழுதி முடித்தேன். வேறு தவறான எண்ணம் யார்மீதும் இல்லை.

ஆரம்பம் முதலே அங்கு உங்களோடு இருந்தால், அவள் படிப்பும் ஒரே இடத்தில் தொடரலாம்; பழக்க வழக்கங்களும் ஓரிடத்ததாக அமையும். உங்களுக்கு ஒரே பெண்; உங்கள் பெண்ணுக்கும் ஒரே பெண். பொதுவாகப் பெண்வழிப் பேரப் பிள்ளைகளைத்தாம் தாய்வழிப் பாட்டன், பாட்டிதாம் தங்கள் கண்ணாகப் பார்த்துக்கொள்வர். மறுமணம் செய்துகொள்ளும் எண்ணத்தோடு இந்த முடிவை எடுத்திருக்கிறேன் என்று தவறாக நினைக்க வேண்டாம். எனக்கு என்றும் ஒரே மனைவிதான்; அவர் உங்கள் மகள் ஒருத்தி மட்டுந்தான்.

இப்படிக்குக் கனகவேல்.'

திரிபுர சுந்தரி மேலாளர் தியாகராசனை விசாரித்தாள்.

"ஆம், அம்மா. இந்தக் கடிதத்தை நான்தான் அஞ்சலில் சேர்த்தேன். அந்தக் கடைசி இரவில்தான், அதை மறுநாள் அஞ்சலில் சேர்க்கச் சொல்லி என்னிடம் கொடுத்தார். அடுத்த நாள் நடந்த கெட்ட நிகழ்வுகளால், அந்தக் கடிதத்தை மறந்தே போனேன். பின்பு ஒரு நாள், கடலூருக்குச் சென்றிருந்தபோது தற்செயலாக என் கைப்பையில் கடிதம் இருந்ததைப் பார்த்தேன். மாலை நேரமாகி விட்டதால், தாமதத்திற்கான கூடுதல் அஞ்சல் தலையை ஒட்டித் திருப்பாதிரிப் புலியூர் ஆர். எம், எஸ் தபாலில் சேர்த்தேன். அந்தத் தகவலை உங்களிடம் சொல்லவில்லை. தாமதமாகப் போனதற்கு, நானே காரணம்; வேண்டுமென்றே செய்தது இல்லை."

அவர் கூற்றுத் தெளிவாக இருந்தது. எந்த உள் நோக்கமும் இருப்பதற்கு வாய்ப்பே இல்லை. கடிதத்தில் இருந்தவை பொதுவான வரைவுகள்தாம். கனகவேலுக்கு வேண்டுமானால் உள் நோக்கம் இருந்திருக்கலாம்; ஆம், அவனது தவறான நடவடிக்கைகளை மகள் புரிந்துகொள்ள நேர்ந்தால் என்ன நினைப்பாள்? அவனை வெறுக்கவும் கூடும் அல்லவா?

# 23. சாரதா

ஆரம்பத்தில் சாரதா சொன்ன திடுக்கிடும் தகவல் திரிபுர சுந்தரிக்கு நினைவிற்கு வந்தது.

சின்ன வயதிலிருந்து தங்கவேலையும் சாரதாவையும் இணைத்துப் பொண்ணு, மாப்பிள்ளை என்று பேசிய போது, குழந்தைகள் ஆனதால் கட்டிப்பிடித்துச் சிரித்து மகிழ்ந்தனர். அதைக் கண்டு பெரியவர்களும் சிரிப்பர். பின்னாள், பெரியவர் ஆனதும் அவர்களிடையே அது காதலாகக் கனிந்தது. இருவரும் அளவோடு நெருங்கி அளவோடு பழகினர்.

தங்கவேல், அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் பொறியியலில் எந்திரவியல் துறையில் படித்தான். விடுதியில் தங்கியிருந்ததால், விடுமுறையில் மட்டுமே வருவான்; சாரதா அத்தை வீட்டிற்குப்போய்ச் சாரதாவைப் பார்க்கத் தவற மாட்டான். அவன் பொறியியல் பட்டம் பெற்றபோது, சாரதா பன்னிரண்டாவது வகுப்புப் படித்து முடித்திருந்தாள்.

வடலூரில் இருந்த உயர் மின் அழுத்தப் பீங்கான் இன்சுலேட்டர்கள் செய்யும் தொழிற்சாலையில் தங்கவேல் வேலைக்குச் சேர்ந்தான்.

சாரதா அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் பி.எஸ்ஸி, கணக்குப் பிரிவில் சேர்ந்தாள். மூன்றாண்டுகள் படிக்க வேண்டும். துள்ளுவண்டி வாங்கியிருந்த தங்கவேல் அவளைத் தன் துள்ளுவண்டியில் ஏற்றிக்கொண்டு, வடலூர் கூட்டுப் பாதைப் பேருந்து நிறுத்தத்தில் இறக்கி விட்டுவிட்டுத் தொழிற்சாலைக்குப் போவான்.

வழக்கமாக, ஒரே தனியார் பேருந்தில் போவாள். ஓட்டுநரும் நடத்துநரும் அவளை நன்கு அறிவர்; அதனால், அந்தக் குறிப்பிட்ட பேருந்து சில நேரங்களில் சில மணித்துளிகள் அவளுக்காகக் காத்திருக்கும்.

சாரதா தங்கவேலிடம் சிலசில சிறு சலுகைகளை அனுபவித்து வந்தாள். யாரும் பார்க்காத வேளைகளில் அவனை அணைத்து மகிழ்வாள்.

மாலையில் அவள் அதே பேருந்தில் வருவதால், அவனும் அலுவலகத்திலிருந்து வந்து, அவளை அவளுடைய வீட்டில் விட்டுவிட்டுத் தன் வீட்டுக்குப் போவான். இந்தக் காதல் இணையைக் கண்டு அவளுடைய பெற்றோர் மகிழ்வர்.

அவள் மூன்றாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்தாள். அப்போதுதான் மரகதவல்லி இறந்து போனாள். கனகவேலும் மாறிப் போனான்.

ஒரு நாள்... கனகவேல் அத்தை வீட்டிற்குச் சென்று இருந்தான் . அந்த நேரத்தில், தங்கவேல் தன் துள்ளுந்தில் வந்து வீட்டு வாசலுக்கு நேராக நிறுத்தி ஒலி எழுப்பினான். உள்ளிருந்து சாரதா ஓடி வந்தாள். கனகவேலைப் பார்ந்து, "ஓ! பெரிய மாமா, வாங்க! எப்ப வந்தீங்க? நான் கல்லூரிக்குப் போகிறேன். வெளியில் தங்கம் மாமா காத்துக் கொண்டு இருக்கிறார்; போய் வருகிறேன்" என்றபடி வெளியே ஓடிச் சென்றாள்.

எப்போதும்போல் ஒரு குழந்தையாக அவளைக் கருதிக் கனகவேல் அன்றும் சிரித்தபடி, 'போய் வாடா!' என்று சிரித்தபடி கையசைத்து விடைகொடுத்தான். சாரதா துள்ளி ஓடித் தங்கவேலின் வண்டியின் பின்புறம் தன் வீட்டைப் பார்த்தபடி ஒருபக்கமாக ஏறி அமர்ந்தாள்.

அண்ணனைப் பார்த்ததும் தங்கவேலின் முகம் மன வெறுப்பை வெளிப்படுத்தியது. அந்தக் கோபத்தில் வண்டியை விருட்டெனக் கிளப்பினான். சாரதா, நிலை தடுமாறிப் பின்புறம் சாய்ந்து விடுவோமோ என்று அஞ்சித் தங்கவேலுவை இறுக அணைத்துக் கொண்டாள். இதை வீட்டினுள் இருந்து கண்ட கனகவேலின் பார்வையின் நோட்டம் மாறியதைச் சாரதா நொடியில் கவனித்துவிட்டாள். அந்தப் பார்வை, வழக்கமாக ஒரு குழந்தையைப் பார்க்கும் பார்வை அன்று; அதில் ஒரு பெண்ணை அடைய எண்ணும் வேட்கை அப்பட்டமாகத் தெரிந்தது. சாரதா துணுக்குற்றாள். அதன் பின் விளைவுகளை அன்று மாலையே அவள் அறிய நேர்ந்தது.

மாலை சாரதா வீடு திரும்பியபோது, உள்ளே அம்மாவும் அப்பாவும் சத்தமாகச் சண்டை போட்டுக்கொண்டு இருந்தார்கள். தங்கவேல் அவளை இறக்கி விட்டுவிட்டு வழக்கம்போல் அவன் வீட்டிற்குச் சென்றுவிட்டான்.

இவள் வீட்டிற்குள் போனதும் சாரதாவின் அம்மா, 'இதோ, உங்கள் பெண்ணே வந்துவிட்டாள்; அவளையே கேளுங்கள். அவள் சரியென்றால், நான் வாயை மூடிக் கொள்கிறேன்,' என்றார்.

'என்னப்பா? என்ன என்னைக் கேட்கச் சொல்றாங்க? அம்மா! எதற்காக இப்படிச் சத்தம் போட்டுக் கொள்கிறீர்கள்?''

'இருக்கட்டும்; நீ பாவம்! அலுத்துக் களைப்பாய் இருப்பாய்; பொறுமையாகப் பேசிக் கொள்ளலாம்.'

வீடு அமைதியாயிற்று.

இரவு உணவு முடிந்து, மெதுவாக அம்மாதான் பேச்சைத் தொடங்கினார்.

'காலையில் நீ கல்லூரிக்குப் போகும்போது, உன் பெரிய மாமன் கனகவேல் இங்கிருந்தான் இல்லையா? நீ போன பிறகு, ஏதோ சிந்தனையில்இருந்தவன் , 'அத்தை! மாமா! ஒரு செய்தி சொல்வேன்; தப்பாக எடுத்துக் கொள்ளக்கூடாது. நான் சாரதாவைத் திருமணம் செய்துகொள்கிறேன் என்று கேட்டால், நீங்கள் என்ன பதில் சொலவீர்கள்? ஒன்றும் அவசரமில்லை; நன்கு நிதானமாகப் பேசி உங்கள் முடிவைச் சொல்லுங்கள், என்றான்.'

'நாங்கள் அதிர்ச்சியடைந்தோம்!' வேல்விழியார் தொடர்ந்தார்.

'இதில் பேசுவதற்கு என்ன இருக்கிறது, கனகு? சிறு வயதிலிருந்தே அவளுக்கு இவன், இவனுக்கு அவள் என்று நம் எல்லோராலும் முடிவு செய்யப்பட்டதால்தானே, தங்கவேலும் சாரதாவும் பழகி வருகிறார்கள்; அந்த முடிவை இப்போது ஏன் மாற்ற வேண்டும்?'

'இருக்கட்டும், அத்தை. சாரதாவுடன் பேசிக்கூட முடிவெடுக்கலாம்; ஒன்றும் அவசரமே இல்லை,' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான். இதுதான் நடந்தது,' என்றார்.

சாரதாவிற்குத் தூக்கிவாரிப் போட்டது. தங்கவேலுடன் அவள் துள்ளுந்தில் போகும்போது, கனகவேல் பார்த்த பார்வை அவளை முன்னரே குழப்பத்தில் ஆழ்த்தி இருந்தது. என்ன நேர்ந்தது அவனுக்கு? குழம்பினாள்; அஞ்சினாள்.

'அம்மா; பெரிய மாமா கேலி செய்திருப்பார்.'

ஆனால், விவகாரம் பெரிதாயிற்று. கனகவேல் தன் மாமனை எப்படியோ வளைத்துப் போட்டுவிட்டான். பெரிய தொழிலதிபர்! வயது பிரச்சனை இல்லை; அதாவது கட்டுடல் கொண்ட இளைஞன்தானே?

குழந்தையைக் கவனிக்க ஒரு தாய் வேண்டும்; அந்தத் தாய், இதே குடும்பத்தைச் சேர்ந்தவராய் இருந்தால் பொறுப்பை உடனடியாகவும் எளிதாகவும் ஏற்கலாம், சிறு வயது பழக்கமெல்லாம் சிறு பிள்ளை விளையாட்டாய் மறந்து விடலாம்.

அப்பாவின் பிடிவாதத்தைக் கண்டு சாரதா அதிர்ந்து போனாள். தன் மகள் பெரிய வசதியுடன் இருப்பதை, அதுவும் வலிந்து வரும் வாழ்க்கையை எந்தத் தகப்பன்தான் வேண்டாம் என்பான்.

கேள்விப்பட்ட தங்கவேல் பொங்கி எழுந்தான்! இப்போது தங்கவேலுவிற்கு மாமா கண்ணப்பரைச் சமாளிப்பது மிகப் பெரும் சவாலாக மாறிவிட்டது. மாமாவோ, அவன் கெஞ்சலையும் மிரட்டலையும் அசட்டை செய்துவிட்டார்; இனி?

தங்கவேல் அண்ணனோடு பகைமை கொண்டான்; சுட்டு விடுவதாவும் மிரட்டினான். கனகவேல் தன் தம்பிகளை அறியாதவனா? சிரித்தபடியே அவனை அடக்கி விட்டான்.

கனகவேல் அடிக்கடி அத்தை வீட்டிற்குச் சென்றுவர ஆரம்பித்தான். அத்தையோ, அவனிடம் வெளிப்படையாகவே வெறுப்பைக் காட்டி வந்தார். சாரதா அவன் எதிரில் வருவதைத் தவிர்த்து வந்தாள்.

ஒரு நாள் சாரதா தனியாக இருக்கும் போது, கனகவேல் வந்தான். வேறு வழியின்றி அவனை வரவேற்றுக் காபி கொடுத்தாள். அவளை நெருங்கி, மெல்ல இழுத்து அணைத்தான். திடுக்கிட்டாள் சாரதா!

'மாமா, என்ன இது? ஒழுங்காக நடந்து கொள்ளுங்கள். விடுங்கள்.'

'நாம் தருமணம் செய்துகொள்ளப் போகிறவர்தாமே? சற்று நேரம் சுகத்தை அனுபவிப்பதில் என்ன தவறு?'

அவன் பெண் பித்தன் என்பதை ஊரே அறிந்திருக்கையில் சாரதாவுக்குத் தெரியாமலா இருக்கக் கூடும்? தன் தனிமையைப் பயன்படுத்தி அத்துமீறிவிடுவானோ என்ற பயம் அவளுக்கு.

'ஆமாம், மாமா; எப்படியும் உங்கள் வீட்டுக்கு வரப் போகிறவள்தானே? உங்கள் வீட்டுக்கு வருகிறேன்; இப்போது வேண்டாம். இங்கு வேண்டாம்; சரியா? நாளைஇரவு வருகிறேன்.'

இதுவரையில்தான் அன்று சாரதா சொல்லி இருந்தாள். தப்பிக்கப் போட்ட நாடகம் போலும் என்று திரிபுர சுத்தரி எண்ணினாள். தொடரில் ஏதோ இடைவெளி இருப்பது போலவே தோன்றுகிறது; முடிச்சும் அவிழ்ந்த பாடில்லை. எல்லாம் அந்தக் காவல்காரனால் வந்த குழப்பந்தாம். அவன் தந்த வாக்கு மூலத்தில்தான் எத்தனை ஓட்டைகள்!

மீண்டும் ஒரு நாள், அவனை நிதானமாக ஒவ்வோரு நிகழ்ச்சியையும் வரிசையாகச் சொல்லச் சொல்லி இடையிடையே ஐயங்களைக் கேட்டுத் தெளிவடைந்தாள்.

நீண்ட சிந்தனைக்குப் பிறகு திரிபுர சுந்தரி ஒரு முடிவுக்கு வந்தாள்.

# 24. அன்று இரவு..

கல்லூரியில் வகுப்புக்கள் முடிந்து வெளியே வந்த சாரதாவின் எதிரே ஆய்வாளர் திரிபுரசுந்தரி நின்றிருந்தார். மாணவர்கள் அவளைப் பார்த்தபடி சென்று கொண்டிருந்தனர். அவளைப் பார்த்தவுடன் ஓடி வந்த சாரதா,

“அக்கா, நீங்களா? எங்கே இந்தப் பக்கம்?” கேட்டாள்.

“இப்படி ஒரு வேலையாக வந்தேன். நீ மாலையில் ஊருக்குப் போகப் பேருந்து பிடிக்கப் போவாய்; நாமே கூட்டிக் கொண்டு போகலாமே என்றுதான் வந்தேன்.”

“கல்லூரி உணவு விடுதியில் சிற்றுண்டி, காபி சுவைத்துவிட்டுப் போகலாமா, அக்கா?”

“ஓஒ! தாராளமாக. எனக்கும் களைப்பாய்த்தான் உள்ளது; சாப்பிட்டுவிட்டே போகலாம்.”

இருவரும் விடுதிக்குச் சென்றார்கள். அரைமணி ஓடியது. ஒரு பூங்கா அருகே வந்ததும் திரிபுர சுந்தரி,

“சாரதா, கொஞ்சம் உட்காரலாம்.” என்றாள்.

“சரியக்கா.”

இருவரும் ஒரு காரைப் பெஞ்சில் உட்கார்ந்தனர்.

“சாரதா! வடலூரிலேயே நான் இருந்திருந்தால், உன்னைப் போலவே இந்தப் பல்கலைக் கழகத்தில்தான் படித்திருப்பேன்; திருநெல்வேலி போய்விட்டதால், அங்கேயே படித்தேன். நானும் பி.எஸ்ஸி, தான்; ஆனால் இயற்பியல். நீ கணிதம். இந்த ஆண்டோடு உனக்கு இந்தப் படிப்பு முடிந்து விட்டால், மேற்கொண்டு என்ன செய்யப் போகிறாய்?”

“அக்கா, கிண்டல் செய்யக் கூடாது. திருமணம் செய்து கொண்டு சமையல் செய்து, சட்டிப் பானை கழுவிக்கொண்டும் பிள்ளை குட்டி பெற்றுக்கொண்டும் குடித்தனம் செய்யப் போய் விடுவேன் ; வேலைக்குப் போகும் எண்ணம் சிறிதும் இல்லை.”

“தங்கத்தைத் திருமணம் செய்து கொள்வாயா? வில்லன்தான் இப்போது இல்லையே!”

“தங்கம் மாமாவைத் திருமணம் செய்து கொள்வேன் ; ஆனால் அக்கா, பெரிய மாமாவே எனக்கு வில்லனாக வந்தாரே! மனம் எனக்குத் தாங்கவில்லை. அக்கா!” அழுகிறாள்.

“அழாதே, சாரதா. தங்கம் மாமாவைத் திருமணம் செய்து கொள்ள முடியாத சூழ்நிலை உருவானால்..?”

“அக்கா! என்ன சொல்கிறீர்கள்? அவரைத் திருமணம் முடிக்க விடாத சூழ்நிலை உண்டாகுமா?” மீண்டும் அழுகிறாள்.

“ஆம் ; அதைச் சொல்லத்தான் உன்னைத் தனியாகச் சந்திக்க வந்திருக்கிறேன். புதிதாக ஒரு தடயம் இப்போது கிடைத்திருக்கிறது. அதிலிருந்து தப்பவே முடியாது! என்ன செய்வது? உன் நெஞ்சைத் திடப்படுத்திக் கொள்.”

உறைந்து போனாள் சாரதா. வறண்டது அவள் தொண்டை ; உலர்ந்தது அவள் நா.

“அக்கா, என் தங்கம் மாமாவையா சந்தேகிக்கிறீர்கள்?”

“இல்லை.”

“பின் அவரோடு திருமணம் நடக்கத் தடை இருக்கக் கூடும் என்றீர்களே, அதற்குப் பொருள்?”

“மணமகன் இல்லையானாலும் திருமணம் நடக்காது; மனமகள் இல்லையானாலும் திருமணம் நடக்காது.”

"அக்கா! நீங்கள்...?"

அந்தக் காற்றோட்டமான பூங்காவில் அவளுக்கு வியர்த்துக் கொட்டிச் சட்டையெல்லாம் நனைந்து போயிற்று.

"ஆம், சாரதா. நீதான் கொலை செய்திருப்பாய் என்று உன் மேல்தான் எனக்குச் சந்தேகம்; உண்மையை ஒப்புக்கொள். நீ சொல்லாவிட்டாலும் நடந்ததை நடந்தபடி, என்னால் இப்போது தெளிவாகக் கூற முடியும்,"

சாரதா குலுங்கிக் குலுங்கி அழுதாள். திரிபுர சுந்தரி, சாரதா தலைசாய்க்கத் தோள் கொடுத்தாள்; முதுகை வருடிக் கொடுத்தாள்.

திரிபுர சுந்தரி, சாரதா அழுது முடிக்கும்வரை காத்திருந்தாள்; முகத்தை நிமிர்த்திக் கண்ணீரைத் துடைத்தாள்.

"அழாதே! அமைதி கொள்! அமைதிகொள்! நான் எப்படி இந்த முடிவுக்கு வந்தேன் என்று சொல்கிறேன். அன்று நடந்தவற்றை நீதான் சொல்ல வேண்டும்."

# 25. நான் சொல்லட்டுமா?

அன்று இரவு சாரதா, தங்கம், சாரதாவின் அப்பா, அம்மா, தங்கத்தின் அம்மா ஒன்றாய்ச் சேர்ந்து கனகவேலைச் சந்திக்கச் சென்றவர்கள் எல்லாருமே, கோபமாகவும் கொதித்துக் கத்திக்கொண்டும் வெளியே வந்தார்கள். ஆனால், சாரதா மட்டும் உடன் திரும்பி வரவில்லை. ஆத்திரத்தோடு கத்திக்கொண்டு வந்தவர்கள், சாரதா தம்மோடு வரவில்லை என்பதை உணரவில்லை. வீட்டிற்குப் போன பின், சாரதாவைக் காணாததால், தங்கத்தோடு துள்ளுந்தில் போயிருப்பாள் என்று சாரதாவின் அப்பா அம்மா எண்ணிக்கொண்டனர். பெற்றோரோடு தானியில் வந்ததால், சாரதாவைப் பற்றித் தங்கம் நினைக்கவேண்டிய தேவையே இல்லாமற் போயிற்று.

அன்று இரவு, கனகவேலின் மாடி அறைக்குக் கடைசியாக வந்து போனது பெண் வேடத்தில் இருந்த பொன்னுவேல்தான். அவன் போகும்போது, கனகவேல் இறந்து கிடந்தான். பயத்தில் ஓடி வந்துவிட்டான். அவன் பெண் உருவில் அசப்பில் அவனுடைய அம்மாவைப் போலிருந்ததால், அவர் முதலில் கைது செய்யப்பட்டு விட்டார்.

ஆக, 10.30-க்கும் 11.30-க்கும் இடையில் கொலை நடந்திருக்கவேண்டும். தியாகராசனைத் தவிர எல்லாருக்கும் அவன் ஒழிய வேண்டும் என்ற ஆத்திரம் இருந்திருக்கிறது. திரிபுரசுந்தரியிடம் எல்லாரும் வெளிப்படையாகத் தங்கள் கோபத்தை வெளிப்படுத்தினார்கள். ஆனால், சாரதா வெளிபடுத்தியது தன்னுடைய பயத்தை மட்டுந்தான்; அதாவது கனகவேல் அவளை எப்படியாவது அதிரடியாகக் கைப் படுத்திடுவானோ என்ற பயந்தான்! அவனும் முறை மாமன்தான்; ஆனால், இரண்டாம் தாரம் ஆனாலும் சிறு

வயது, பெரிய பணக்காரன்! இவையெல்லாம் அப்பாவைக் கரைத்தது போல அம்மாவையும் பணியவைக்க அவனால் முடியும்; மற்றவர்களைப் பற்றி அவனுக்குக் கவலை இல்லை. ஆனால், அந்தக் காலக் கட்டத்தில் அவனுக்கு யாரையும் மணந்துகொள்ளும் எண்ணமே கிடையாது. அதைப் புரிந்து கொண்டவள் சாரதா ஒருத்திதான்.

தனிமையில் இருக்கும் அத்தை மகளிடம் தன் தம்பியின் காதலி என்பதை அறிந்திருந்தும் அத்துமீற எண்ணியவன் அவன்! அதனால் அவனைத் தவிர்த்திட, தானே அவன் வீட்டுக்கு வருவதாகச் சொல்லிவிட்டுப் பெற்றோர் அத்தை இவர்களோடு சென்று எப்படியோ தப்பித்துக் கொண்டாள். கடைசியாக வந்து போனவன் பொன்னுவேல்தான்; அதுவும் பெண்ணுருவில்!

"சாரதா, இனி உள்ளே நடந்ததைச் சொல். என் அரசு பணியை இத்துடன் முடித்துக் கொள்கிறேன். என்னை எப்போதும்போல், அக்கா என்றே அழை; அப்போதுதான் பேசும்போது உனக்கு எந்தத் தயக்கமும் இருக்காது."

அதற்குள் ஓரளவு தன்னிலை அடைந்த சாரதா, மேலே தொடர்ந்து சொன்னாள்:

"அக்கா, நீங்கள் கணித்தது சரிதான். பெரிய மாமாவின் தீய எண்ணத்தைப் புரிந்து கொண்டேன். நான் அவரிடமிருந்து அப்போதைக்குத் தப்பவே 'இந்த வீட்டில் வேண்டாம்; உங்கள் வீட்டுக்கே வந்துவிடுகிறேன்.' என்று சொன்னேன்.

பிறகு எல்லாரும் ஒன்றாகப் போனபோது, புழக்கறையில் ஒரு சோபா மீது அஞ்சனாவைத் தூங்க வைத்துக் கொண்டு இருந்தாள் ஷெர்லி. எங்களைக் கண்டதும் எழுந்து நின்றாள். நாங்கள் மேலே அலுவலக அறைக்குள் போனோம்.

'இது என்ன கூட்டணி? எனக்கு ஆதரவாகவா? இல்லை, இவனுக்கு(தங்கவேலைக் காட்டி) ஆதரவாகவா? எல்லாருக்கும் தனித்தனியாக என் விருப்பத்தைத் தெரிவித்துவிட்டேன்!

மாமாவும் ஒப்புக்கொண்டார். இப்போது எல்லாருக்குமே சேர்த்துத் தெளிவாகச் சொல்கிறேன். நான் சாரதாவை மணந்து கொள்வேன்; இதில் எந்த மாற்றமும் இல்லை. சாரதாவின் மனத்தைக் கலைத்து எனக்கெதிராகத் திருப்பிவிட நினைக்காதீர்கள்?' எனப் பெரிய மாமா உறுதியாக உரைத்தார்.

அதற்குப் பிறகு, பல வாக்குவாதங்கள் தொடர்ந்தன. இறுதியில், 'இனி இங்கு யாரும் நிற்காதீர்கள்; மீறி இருந்தீர்களேயானால், சுட்டுப் பொசுக்கிவிடுவேன்; போங்கள் வெளியே!' என்று சொல்லிக்கொண்டே மேசை அறையிலிருந்த துப்பாக்கியை எடுத்துக் காட்டி கத்தினார்.

எல்லாரும் வெறுப்பும் கோபமும் கொப்பளிக்க அவரைத் திட்டிக் கொண்டே வெளியேறினர். நான் மட்டும் கீழ்த்தளத்தில் இருந்த வரவேற்பறைக்கு அடுத்திருந்த அலுவலக அறைக்குள் புகுந்து கொண்டேன். என்னைக் கவனிக்காமல் ஆளாளுக்குப் பேசிக்கொண்டே போய்விட்டனர்.

சற்று நேரத்தில், 'ஐயா!' என்று அழைத்தவாறு மேலாளர் உள்ளே வந்ததை அவரது குரல் மூலம் அறிந்துகொண்டேன். தன் காலணிகளை கீழேயே விட்டுவிட்டு மேலே சென்றிருக்க வேண்டும்; எல்லாம் ஒலியின் மூலமே அறிந்தேன். கதவைத் திறந்துகொண்டு வெளியில் தலை நீட்ட முடியாதே! அவர் மாத்திரந்தான் மேலே இருக்கும் அலுவலக அறைக்குச் செல்ல உரிமை உள்ளவர்.

அதற்குள், மேலே ஏதேதோ இருவர் சண்டையிட்டுக் கொள்ளும் ஓசை கேட்டது. என்ன பேசினார்கள் என்று புரியவில்லை. ஆனால், ஒன்று பெண் குரல்; அது, ஷெர்லி குரல்தான்.

'பணக்கார பொறுக்கி நாய்! அவன் பெண்டாட்டி படுக்கையில் யாரும் படுக்கக் கூடாதாமே? இவன் மட்டும் என் அறையில் என்னோடு படுப்பானாம்!'

பேசிக்கொண்டே போய்விட்டாள். ஆனால், மேலே மேலாளர் போனாரே; அவர்க்கு இதெல்லாம் தெரிந்திருக்குமே?

சிறிது நேரத்தில் மேலாளர் கீழே வந்தார்; காலணிகளை மாட்டிக்கொண்டு வெளியே சென்றுவிட்டார். உட்பக்கம் கதவைத் தாழ்ப்பாள் போட ஷெர்லி வரவில்லை. அது அவள் வேலை என்பது எனக்குத் தெரியும்.''

''சாரதா, நீ உன் பக்கச் செய்திகளை மட்டும் சொல், நான் எல்லா விபரங்களையும் சேகரித்துவிட்டேன்.''

''சரி, அக்கா. அவர் போய்ப் பத்துப் பதினைந்து கணங்கள் கழித்து, நான் மெல்ல அறைக் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்து புழக்கறைக்குள் நுழைந்தேன்; அங்கே, சோபாவில் அஞ்சனா உறங்கிக் கொண்டிருந்தாள். ஷெர்லி, அவளை அவளது படுக்கை அறையில் கொண்டுபோய் விடவில்லை போலும். மங்கலான வெளிச்சத்தில் ஷெர்லி அறையை நெருங்கினேன்; கதவு திறந்துதான் இருந்தது. எட்டிப் பார்த்தேன்; உள்ளே ஷெர்லி ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள். ஒரு நாற்காலியை மெல்ல நகர்த்தி, ஓசை எழுப்பினேன்; ஊகூம்! எந்த அசைவும் காட்டவில்லை. உள்ளே நுழைந்து பார்த்தேன்; போதையில் அல்லது ஆழ்ந்த தூக்கத்தில் இருப்பது போன்ற முகபாவம்! திரும்பினேன்.

மேலே இருக்கும் மாமாவின் அலுவல் அறைக்குச் சென்றேன். மாமா நிமிர்ந்து பார்த்தார்.

'அடடே! சொன்னபடி வந்து விட்டாயே! மற்றவர்கள் எங்கே?'

'அவர்கள் போன பிறகு அவர்களுக்குத் தெரியாமல் நான் மட்டுந்தான் வந்தேன்.'

'இனி யாராலும் நமக்கு இடைஞ்சல் இருக்காது; வா!' என்றபடி என்னை நெருங்கினார்.

'உங்கள் அறைக்குப் போய்விடலாம் வாருங்கள்!' என்று முன்னால் நடந்தேன். அவர் வர மாட்டார் என்பதை நன்கு தெரிந்தே, வேண்டுமென்றுதான் அவ்வாறு சொன்னேன். சற்று

முன் ஷெர்லி பிதற்றிக்கொண்டு போனதும் என் எண்ணத்தை உறுதி செய்தது. எனக்கு இது முதலிலேயே தெரியும். பல முறை 'என் மரகதவல்லி உட்கார்ந்த இடத்தில், உட்காரவோ அல்லது படுத்த இடத்தில் இன்னொருவர் படுப்பதையோ நான் அனுமதிக்க மாட்டேன்; எனக்கு மரகதவல்லிதான் ஒரே மனைவி!' என்று அவர் பெருமையாகச் சொல்லிக்கொள்வார். இப்போதும் நான் நினைத்த மாதிரியே தயங்கினார்.

'அது மரகதவல்லியின் படுக்கை அறை; அங்கு நான் யாரையும் அனுமதிப்பதில்லை.'

'இப்போது அக்காதான் இல்லையே!'

'வேண்டாம் சாரதா; அது வேண்டாம்.'

'ஏன், மாமா? நீங்கள் என்னைத் திருமணம் செய்து கொள்வீர்கள், இல்லையா?'

'உம்..!' சுரத்தே இல்லாமல் வந்தது அவர் குரல்.

'அப்படியானால் நான் உங்கள் மனைவியாகிவிடுவேன்; அக்காவின் இடம் எனக்குத்தானே?'

'போதும்; நிறுத்து. இப்போது நீ எனக்கு வேண்டும்; மற்றதைப்பற்றிப் பிறகு பேசிக் கொள்ளலாம்.'

'இல்லை, மாமா. நான் வேண்டும்; அதுவும் திருமணத்திற்கு முன்பேயே வேண்டும்; ஏன்? அதை உங்கள் மனைவி என்ற உரிமையோடு, திருமணமான பின் என்னை ஏற்றுக் கொள்ளுங்களேன்! அதற்குள் அப்படி என்ன அவசரம்?'

'சாரதா, நீ இப்போதே எனக்கு வேண்டும்; அவ்வளவுதான்.'

'அதாவது, நீங்கள் என்னை மணந்து கொள்வதாகச் சொன்னது பொய்! அப்படித்தானே?'

கோபம் மிகுந்தவராக, 'ஆமாம்; அப்படித்தான்!' எனறபடி என்னை அணைக்க முயன்றார். நான் நழுவி மேசை

மேல் (இத்தனை நேரமும்) இருந்த துப்பாக்கியை எடுத்துச் சட்டென்று என் நெற்றிப் பொட்டில் வைத்துக் கொண்டேன்.

'மாமா, நெருங்காதீர்கள்; மீறி அருகில் வந்தால், என் மூளை சிதறச் சுட்டுக்கோண்டு செத்துப் போவேன்.'

மாமா பதறிப் போய் அலறினார்!

'சாரதா, அது விளையாட்டுத் துப்பாக்கி இல்லை?'

'எனக்குத் தெரியும் மாமா; நீங்களே பல முறை எங்களுக்குக் காட்டி இருக்கிறீர்கள். இப்போது என் கேள்வி, இதுதான்! என்னைத் திருமணம் செய்துகொள்வீர்களா? மாட்டீர்களா?'

'இல்லை, சாரதா! நான் உன்னை மட்டுமில்லை; வேறு யாரையுமே திருமணம் செய்து கொள்ள மாட்டேன். அப்படிச் சொன்னது பொய்தான்! உன்னை ஒன்றும் செய்ய மாட்டேன்; நீ போய்விடு. இது பற்றி யாரிடமும் சொல்லாதே.'

'உங்கள் மிருக இச்சைக்குத் தீனிதான் பெண்கள்! இதை நிறுத்துவீர்களா? தொடருமா?'

'அது உனக்குத் தேவையில்லாத கேள்வி. எனக்குத் தேவை பெண் சுகம்; அவ்வளவுதான். கொடு துப்பாக்கியை!'

மாமா இன்று விட்டுவிட்டாலும் பின்னர் என்னை அடைய வேறு வழியில் முயலமாட்டார் என்பது என்ன நிச்சயம்? எனக்குச் சினம் பொங்கியது. அந்தக் கோபத்திலும் சிந்தனை ஓடியது.

'இவரிடம் சிக்கி எத்தனை பேதைப் பெண்கள் அழிந்திருப்பார்கள்! இன்னும் எத்தனை பெண்கள் அழியப் போகிறார்களோ? அதற்குப் பதிலாக என் மாமன் அழியட்டுமே என்ற ஆவேசம் எங்கிருந்தோ என் மனத்தில் புகுந்தது. நெற்றிப் பொட்டில் வைத்திருந்த துப்பாக்கியை எடுத்தேன். அதை வாங்குவதற்காக மாமா கையை நீட்டினார்.

நான் அவர் நெஞ்சுக்கு நேரே நீட்டிச் சுட்டேன்! சுட்டேன்! இரண்டு, மூன்று முறை சுட்டேன்! அவர் சுருண்டு விழுந்தார்.

நான் நிதானமாகத் துப்பாக்கியைச் சுத்தமாகத் துடைத்து, மேசை மேலேயே வைத்துவிட்டு என் உள்மனம் என்ன சொன்னதோ, அதற்குப் படிந்து கீழே இறங்கினேன். மெதுவாகப்போய் அஞ்சனாவின் அறையில் படுத்துக் கொண்டேன். காதுகளைத் தீட்டிக்கொண்டு நடப்பதை எல்லாம் உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருந்தேன்.

சற்று நேரத்தில் யாரோ வந்தார்; மாடிக்குப் போனார். பதினைந்து நிமிடத்தில் இறங்கி வந்து வெளியே போய்விட்டார். நான் இரவு முழுவதும் அங்கேயே விழித்துக்கொண்டே படுத்து இருந்தேன். எப்படி, எப்போது, யாருமறியாமல் வெளியே போவது?

விடிந்தது. வேலைக்காரியும் சமையல்காரனும் விடியற் காலையில் அவர்தம் வேலையைத் துவங்கிவிட்டனர். நான் முன் எச்சரிக்கையாக அஞ்சனாவின் கட்டிலுக்குக் கீழே படுத்துக் கொண்டேன்.

'முதலாளி மணி எட்டரையாகியும் கீழே இறங்கி வரவில்லையே!' என்ற நாராயண ராவின் குரல் கேட்டது. தொடர்ந்து, 'சரி, எப்படியும் மேலாளர் வரும் நேரமும் ஆகிவிட்டது; அவர் பார்த்துக் கொள்வார்.' என்றார்.

அவர்கள் பேசிக் கொண்டிருந்ததுபோலவே, மேலாளர் தியாகராசன் எட்டரை மணிக்கு வந்தார். மேலே போனார்; பத்துக் கணங்கள் ஆகியிருக்கும்; அவர் மேலே இருந்து கத்தினார்.

'நாராயணாஅ! ஷெர்லிஇ! ஓடிவாங்க!' என்று கத்தியது என் காதில் விழுந்தது.

அரைமணி நேரம் ஒரே களேபரமாக இருந்தது. மேலாளர் கீழே வந்து, தொலைப்பேசியில் கனகவேலின்

அம்மா, தம்பிகள், அத்தை அனைவர்க்கும் செய்தி சொன்னார். அடுத்த அரை மணி நேரத்தில் அனைவரும் கூடி விட்டினர்; மாடிக்கு ஓடினர்.

இந்த நேரம் நான் மெல்ல வெளியே வந்து எட்டிப் பார்த்தேன். யாரும் கீழே இல்லை என்று உறுதிப்படுத்திக் கொண்டு, வெளியே வந்து நானும் மாடிக்கு ஓடி அவர்களோடு கலந்து கொண்டேன்.

அந்தத் துக்க வேளையில், என் வருகை எப்படி நிகழ்ந்தது என்று அவர்கள் சற்றும் எண்ணிக்கூட பார்த்திருக்க மாட்டார்கள். அவர்களோடு வந்திருப்பதாக இவர்களும் இவர்களோடு வந்திருப்பதாக அவர்களும் நினைத்து இருக்கக் கூடும்.

அப்புறந்தான், மேலாளர் உங்களுக்குத் தொலைப் பேசியில் செய்தி சொன்னார். அவ்வளவுதாம், அக்கா. உங்கள் கடமையை நீங்கள் செய்யலாம்; நான் ஒப்புக்கொள்கிறேன். என்னைக் கைது செய்யுங்கள்."

சற்று நேரம் மௌனம் நிலவியது. சாரதாவின் பார்வையில் இப்போது எந்த உணர்ச்சியும் தெரியவில்லை.

திரிபுர சுந்தரி சாரதாவைத் தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள். அவளை ஒரு குழந்தையைப்போல் எண்ணி, ஆதரவாக முதுகைத் தடவி விட்டாள்.

# 26. தீர்வு

“எல்லா விபரங்களையும் சேகரித்துவிட்ட நான், உன்னைக் கைது செய்ய இங்கேதான் வர வேண்டுமா? நானும் ஒரு பெண்தான்! நீ செய்ததை ஒரு கொலையாக நான் எண்ணவே இல்லை.

கனகவேல் என் நண்பன்; ஆயினும் சமுதாயத்தின் ஒரு நச்சுப் பாம்பாய் மாறிவிட்ட ஒருவனைத்தான்! இங்கு நீ அழித்திருக்கிறாய்! (அவளுடைய சொந்த அனுபவம் நினைவுக்கு வர, ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள்.) இந்தப் பேச்சை இன்றே, இப்பொழுதே, இங்கேயே மறந்துவிடு. வா, போகலாம்.”

சாரதா வியப்புடனும் குழப்பத்துடனும் திரிபுர சுந்தரியைப் பார்த்தாள்.

“புரிகிறது சாரதா, நீ ஏன் அப்படிப் பார்க்கிறாய் என்று. எப்படிக் கண்டுபிடித்தேன் என்பதனினும் ஏன் விட்டு விடுகிறேன் என்று நீ அதிசயிக்கிறாய். முழு விபரத்தையும் சொல்கிறேன்; கேட்க, உனக்கு நேரமிருக்கிறதா? கேட்கும் மனநிலையில் நீ இருக்கிறாயா? சொல்.”

“கேட்கிறேன் அக்கா; கேட்கிறேன். அதற்கு நேரம் இல்லை என்று சொன்னால், நான் ஓரத்தில் ஒதுங்கும் தூசியை விடக் கீழானவளாகக் கருதப்படுவேன்; சொல்லுங்கள்.”

“ஆரம்ப விசாரணை எல்லாரிடமும் ஓரளவு பொதுவானதாகவே அமையும்; எங்கிருந்து ஆரம்பிக்கலாம்?”

“அத்தையைக் கைது செய்தீர்களே, அங்கிருந்துதான் உங்கள் விசாரணையின் கோணம் எப்படிப் போகிறதென்று கணிக்க முடியவில்லை. அவர் மேல் ஐயுற்றுக் கைது செய்திருந்தால், பின்னர் ஏன் பிணையில் எடுக்க வந்தபோது எந்த எதிர்ப்பும் காட்டவில்லை.”

"சரி; அங்கிருந்தே தொடங்குகிறேன். உன் அத்தை வேல்விழியாரைக் கைது செய்ய, எனக்கு நல்ல சாட்சிகள் இருந்தனர். இந்தச் செயலால், வழக்கில் ஆர்வம் கொண்டிருந்த எல்லார் கவனமும் சிதறிப் போய்விட்டன. அதனால், நான் தெளிவாகச் சிந்திக்க நேரம் கிடைத்தது. ஊடகங்களின் பார்வை சிதறினதாலேயே, எனக்குப் பாதி குழப்பம் விலகியது. மகனைத் தாய் கொன்றாரா? பரவியது செய்தி."

"அப்படியானால் அக்கா, நீங்கள் நம்பவில்லையா?"

"கனகவேல் குடும்பத்தினர் - இடையில் வந்து போன மரகதவல்லியைத் தவிர, அனைவரையும் நான் நன்கு அறிவேன். அவர்களில் முழுக்க முழுக்க மாறிப் போனவன் கனகவேல் ஒருவன் மட்டுமே! அவனைக் கொலை செய்யும் அளவிற்கு அவர்களிடம் அழுத்தமான காரணம் எதுவும் எனக்குப் புலப்படவில்லை. என்பார்வை உன் பக்கம் திரும்பியது. தங்கவேலையும் அந்தப் பட்டியலில் சேர்த்தேன்."

"அப்படியா? உங்கள் பார்வை என் பக்கம் அப்போதே திரும்பி விட்டதா?"

பாவம்! திரிபுர சுந்தரியின் மனம் இந்த ஊருக்கு வந்த நாளிலிருந்து கனகவேலையே சுற்றி வந்தது என்பதைச் சாரதா எப்படி அறிவாள்? அவனை எவ்விதமாகிலும் கவர்ந்து, தான் திருமணம் செய்து கொள்ளலாம் என்று ஆசை பட்டதைச் சாரதா எப்படி அறிவாள்? அவன் பெண் பித்தனாகி விட்டதை அறிந்தும் திருமணம் செய்து கொண்டால், திருத்திவிடலாம் என்று உறுதியாக நினைத்தாள் என்பதையும் அவள் எவ்வாறு அறிவாள்? திரிபுர சுந்தரி வேதனையோடு சிரித்துக் கொண்டாள்.

"நீங்கள் ஐந்து பேர் கனகவேலைப் பார்க்க ஒன்றாகப் போனீர்கள்; ஆனால், நடுநிசியில் வேலம்மையார் மீண்டும் திரும்பி வர வேண்டிய அவசியம் என்ன? மீண்டும் தனியாக அறிவுரை சொல்லப் போனார் என்ற கோணத்தை என்னால்

ஏற்க முடியவில்லை. பொறுமையாக மறுநாள் சென்று இருக்கலாமே? இந்தத் திருப்பத்திற்குக் குழந்தை அஞ்சனாதான் காரணம் என்பதை யாரும் அறிந்திருக்கவில்லை.

அந்த நள்ளிரவில் அம்மா முன்னரே சென்று இருக்கிறார் என்பதை அறியாத பொன்னுவேல், பெண்ணுருவில் தன் அண்ணன் வீட்டிற்குப் போயிருக்கிறான்; ஆனால், அங்கு அண்ணனின் உயிரற்ற உடலைக் கண்டு திடுக்கிட்டுத் திரும்பிவிட்டான். அவனைத்தான் எல்லாரும் வேலம்மையார் என்று தவறாக எண்ணிக் கொண்டோம்.

துருவித் துருவி விசாரித்ததில், நீ வெளியே போனதை யாரும் உறுதிப்படுத்த முடியவில்லை. உன்அப்பா, அம்மாவைக் கேட்டபோது, தங்கவேல் உன்னையும் அவன் அம்மாவையும் தன் துள்ளுவண்டியில் கூட்டிப் போயிருப்பான் என்றனர். தங்கவேலைக் கேட்டபோதோ, 'அவள் அவளுடைய அப்பா, அம்மாவோடுதானே வந்தாள்? அவர்கள் வந்த தானியிலேயே போயிருப்பாள்,' என்றான். முடிச்சு அவிழ்ந்தது; மீதியை நீ சொல்லிவிட்டாய்!

ஆனால், நான் ஏன் உன் மேல் நடவடிக்கை எடுக்கப் போவதில்லை? எப்படி வழக்கை முடிவுக்குக் கொண்டு வருவது? அதுதான் வழக்கின் முக்கிய பகுதி!

கனகவேலின் உடற்பசிக்கு ஆளானவர்கள் சொன்ன செய்திகளில் ஓர் ஒற்றுமை இருப்பதைக் கவனித்தேன்; உன்னையும் சேர்த்துத்தான் சொல்கிறேன். கனகவேல் ஓர் ஆணும் பெண்ணும் தழுவிக் கொண்டிருப்பதைப் பார்த்தாலே போதும், உணர்ச்சி வசப்பட்டு விடுவான்; உடனே அந்தப் பெண்ணைத் தான் நுகர வேண்டும் என்ற வெறி அவனுள் எழுந்துவிடும். இதுவரையில் அவன் பார்த்த பெண்கள் அவனை வெகு எளிதாக ஏற்றுக்கொண்டனர்; அவனும் பெண்களை ஈர்க்கும் கவர்ச்சி உடைவன்தானே! இளமை, கட்டுடல், அவன் வீசும் பணம் எல்லாவற்றையும் பார்த்து அவர்கள் மயங்கி விடுகின்றனர். அந்த வரிசையில், அவன்

உன்னைச் சேர்த்தது மட்டுமின்றி, உன்னை அடையவும் முயன்றிருக்கிறான். (திரிபுர சுந்தரி அந்தப் பட்டியலில் சேராதவள் ஆயிற்றே; அவளை அவன் ஏன் தேர்ந்து எடுத்தான்? பள்ளி நாட்களில் அவனிடம் வழிந்ததையும் அவன் மேல் மோதி அணைத்துக் கொண்டதையும் பேச்சின் ஊடே தான் நினைவு படுத்திவிட்டதுதான் காரணம்.)

தம்மைச் சின்ன வீடாகவாவது வைத்துக் கொள்வான் என்று எதிர்பார்த்தவரும் உண்டு. அவனோ, மறைந்த தன் மனைவி மரகதத்தைத் தவிர, வேறு எவரையும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. ஆனால், அந்த உறுதி இறுதிவரை தொடருமா என்பது ஐயப்பாடே. நீதான் அவனுடைய அந்த உறுதியையே ஆயுதமாக்கி, அவனை மடக்கினாய்; அவன் தடுமாறிவிட்டான்."

"அது சரி, அக்கா; இந்த மனநிலை மாமாவுக்கு இருந்ததை எப்படிக் கண்டுபிடித்து உறுதி செய்ய முடிந்தது?"

"மருத்துவர் வின்செண்ட், கனகவேல், நான் மூவரும் பன்னிரண்டாம் வகுப்புவரை ஒரே பள்ளியில் ஒன்றாகப் படித்வர்கள். என் அப்பாவுக்குத் திருநெல்வேலிக்கு மாற்றல் ஆனதால், நாங்கள் இங்கிருந்து போய்விட்டோம். பட்டப் படிப்பு முடித்துப் பின்னர்க் காவல்துறையில் உதவி ஆய்வாளராகச் சேர்ந்தேன். கனகவேல் குடும்பச் சூழ்நிலையால் படிப்பதை நிறுத்திக்கொண்டு, தன் கடின உழைப்பால் தொழிலதிபர் ஆனான். வின்செண்ட் மருத்துவம் படித்து மருத்துவன் ஆகி, இங்கேயே அரசு மருத்துவ மனையில் பணிபுரிந்து வருகிறான்.

வின்செண்டோடு கனகவேலின் நிலை குறித்துப் பேசினேன். அவன்தான், மனோதத்துவ மருத்துவராகப் பணி புரியும் அவனுடைய நண்பன் வித்தியாசாகரிடம் கருத்துக் கேட்கலாம் என்றான். அவரிடம் சென்றோம். அவரிடம் எல்லா விபரத்தையும் சொன்னேன்.

கனகவேலுவிற்கு இருபது வயதிற்குள் திருமணம் ஆகிவிட்டது. மனைவி பதினாறு வயதும் நிறையாத பருவ மங்கை. அவள் தற்செயலாகக் கோவில் தேரில் இருந்த மரப் பொம்மை வடிவங்களைப் பார்த்திருக்கிறாள்; பருவப் பரவசம் ஆழ்மனத்தில் பதிந்து விட்டது! அதனால், மகிழ்ச்சியோடு திருமணத்திற்கு ஒப்புக் கொண்டாள். வரப் போகும் கணவனிடம் நிறைய எதிர்பார்த்தாள்; ஆனால், முதலிரவில் அவளுக்குச் சற்று ஏமாற்றந்தான்.

அவன் மிகுந்த கூச்சத்துடன் இருந்ததால், அரைகுறை இன்பமே அவளால் பெற முடிந்தது; அவன் கூடலில் அவள் நிறைவு பெறவில்லை. ஆகையால், அவனையும் அந்தத் தேரில் இருந்த காமக் களியாட்டப் பொம்மைகளைப் பார்க்குமாறு, சூழ்நிலையை அவன் அறியாதவாறு உருவாக்கி, கூடலில் ஆர்வம் மிகும்படி செய்தாள்.

அவளுடைய நெருங்கிய தோழியிடம் மட்டுமே, தன் இல்லற இன்ப அனுபவங்களை வெளிப்படையாக் கூறி இருக்கிறாள். எட்டு ஆண்டுகள் இளமைச் சுகத்தைத் திகட்டாமல் துய்த்திருக்கிறார்கள். ஒரு நாள் கூட அவர்கள் கூடலைத் தவிர்த்தது இல்லையாம்!

அவளுடைய தோழி மீனாட்சி, அவர்கள் இருவரும் பேசிக் கொண்டதை எல்லாம் என்னிடம் சொன்னாள்:

‘ஏன்டி? குழந்தை பிறந்ததே; அதற்குப் பிறகு எத்தனை நாட்கள் காத்திருந்தாய்?’

‘போடி! நான் ஒன்றும் காத்திருக்கவில்லை; அவர்தான் என்னைக் காக்க வைத்து விட்டார். நான் மறு நாளே அணியமாக இருந்தேன்; அவர்தான் மேலும் ஒரு கிழமை தள்ளிப் போட்டார். சரியான தண்டம்!’

‘அடிப் பாவி! அது சரி; அந்த மூன்று நாட்களை எப்படிச் சமாளித்தீர்கள்?’

'ஒரு நாள்; இல்லை, இன்னும் ஒரு நாள்! அவ்வளவு தாம். வேறு வழி? பொறுத்துக் கொள்ளப் பழகி கொண்டோம்.'

'சீச்சீ! ரொம்ப மோசமடி நீங்கள்!'

'இன்பம் துய்க்க எதுவும் தடையாய் இருக்க முடியாது; இருக்கவுங் கூடாது.'

இப்படி எட்டு ஆண்டுகள் இடைவிடாமல் இன்பம் துய்த்தவன், அவள் இறந்த பிறகு மற்ற பெண்களை அணுகினான். நான் கேட்டேன்:

'எப்படி இந்தக் குணம்? மிருகங்களைப் போல் எப்படி அவர்களால் நடந்து கொள்ள முடிந்தது?'

'தவறு ஆய்வாளரே, தவறு! மிருகங்கள் தமக்கு அந்த இச்சை வரும்போதுதாம் சேர்வ; கரு அடைந்து விட்டால் அத்தோடு சரி; இணைய மாட்டா. மனிதர்களை மிருகங்களோடு ஒப்பிட்டுக் கேவலப்படுத்த வேண்டாம். பறவைகளும் அவ்வாறே. இந்த மனித இனம் மட்டும்தான், கரு உற்றிருந்தாலும் குழந்தை பிறந்திருந்தாலும் கூடலைத் தவிர்த்தல் இல்லை.'

மருத்துவர் இவனின் குணங்களை அலசிப் பார்த்துச் சில கருத்துகளைச் சொன்னார். அவர் சொன்னவை:

'இவனால் ஒரு நாள்கூட பெண் சுகம் காணாமல் இருக்க இயலாது. இவன் தன் மனைவியிடம் மட்டும் இன்பம் துய்த்தது, அவர்களுடைய தனி உலகத்தில்! அதனால், அது வேறு யாருக்கும் தெரியாது. அவள் இறந்த பிறகு அவன் தன்னைச் சுற்றிச் சில பெண்கள் இருக்குமாறு பார்த்துக்கொண்டான்.

அவ்வப்போது புது முகங்களையும் நாடுவான். இதுவரை யாரிடமும் பலவந்தமாகச் சுகம் அனுபவித்ததாகத் தகவல் இல்லை. இந்த நிலை இப்படியே நீடிக்கும் என்று உறுதியாகச் சொல்ல முடியாது. வயது ஏற ஏற, விரும்பி வருபவர் குறைந்துவிடுவர்; வலிந்து அடையவே முயல்வான்.

நல்லவனாக மாற வாய்ப்பு இருந்தாலும் அதற்கும் நீண்ட நாள்கள் ஆகும். வயதாகித் திருந்தும் வாய்ப்பு மிகமிகக் குறைவே!'

இவைதாம் அவர் கூறியவை.

இப்படிப்பட்டவன் பிற்காலத்தில் கொடூரமானவனாக மாறிவிட்டால்? மரகதவல்லி மூட்டிவிட்ட காமக் கனலை, அவள் இறந்த பிறகும் அவனால் கட்டுப் படுத்திக்கொள்ள முடியவில்லை. மாறாகக் கொழுந்து விட்டு எரியத் தொடங்கி விட்டது; அதில் அவன் எரிந்து கொண்டிருப்பதை உணர்ந்தானா என்றே தெரியவில்லை. இவர்களைப் பிடிக்கவும் தண்டிக்கவும் கடுமையான சட்டம் இல்லை; இந்த வழக்கில், நீயே தண்டனையைக் கொடுத்து விட்டாய்! உன்னைத்தான் அவன் முதலாகவும் கடைசியாகவும் பலவந்தமாகத் துய்க்க முயன்றிருக்கிறான்; ஆனால் அதை நான் சட்டப்படி சரி செய்துவிடுகிறேன்."

"எப்படி அக்கா?"

" வேறொன்றும் இல்லை; அது தற்கொலை."

"என்ன தற்கொலையா? மாமாவின் கைரேகை அந்தத் துப்பாக்கியில் இருக்காதே!"

"அவர் தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என்று செய்து கொள்ளவில்லை. துப்பாக்கியைத் துடைத்துச் சுத்தம் செய்கையில் தவறி வெடித்து விட்டது. மருத்துவர் சான்றிதழில், துப்பாக்கி வெகு அருகில் இருந்திருக்க வேண்டும் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. அப்படிப் பார்த்தால் வேற்றாள் அவ்வளவு நெருங்கி இருக்க முடியாது. தற்கொலை என்பதைவிட, இது ஒரு விபத்து என்றும் கொள்ளலாம். கைரேகைகள் இல்லாமற் போனதற்குக் காரணம், அவன் துப்பாக்கியைத் துடைத்துச் சுத்தம் செய்கையில் கைரேகைகள் அழிந்திருக்கக் கூடும் என்று காவல் துறை முடிவு செய்யும்.

குடும்பத்தினர் அனைவரும் சந்தேகப் பட்டியலில் இருப்பதால், யாரும் எதிர்ப்புக் கிளப்பமாட்டார்கள். தற்கொலையாக முடிவு செய்ய, அன்று அவன் இறுதியாகத் தன் மாமனாருக்கு எழுதிய கடிதமே உறுதியான சாட்சியம்! எப்படிப் பார்த்தாலும் இது கொலை இல்லை. சரி; வா, போகலாம்.''

''ஏன் அக்கா? உங்களோடு காவல் துறை வண்டியில் வந்தால், உங்களைச் சந்தேகப்பட மாட்டார்களா?''

''உன் மேல்தான் சந்தேகம் கொள்வர். நான் இந்த வண்டியில் என் அருகில் உட்கார வைத்து உன்னைக் கூட்டிப் போகிறேன்; அதனால் உன் மேல் யாருக்கும் சந்தேகம் எழாது.''

வண்டி புறப்பட்டது. திரிபுர சுந்தரி சிந்தனையில் ஆழ்ந்தாள்.

நான் நாளை வின்சென்ட்டைப் பார்த்து நன்றி சொல்ல வேண்டும்! ஒரு நண்பனிடம் நிறைய எதிர் பார்த்து ஏமாந்து போனேன். இவனிடம் விண்ணப்பம் கொடுத்திருக்கிறேன்; ஆனால் எதிர்பார்ப்பு இல்லை.

# 27. நிறைவு

“அக்கா, நீங்கள் மருத்துவர் வின்செண்ட்டைத் திருமணம் செய்து கொள்வதில், எங்கள் அனைவர்க்கும் மகிழ்ச்சியே! ஆனால், நீங்கள் உங்கள் வேலையிலிருந்து விருப்ப ஓய்வு பெற்றுக் கொள்ளக் காரணம் என்ன? மருத்துவர் ஐயா, உங்களை வேலைக்குப் போக வேண்டாம் என்று சொல்லிவிட்டாரா?”

“அம்மா, தாயே! சாரதா! இப்படி எல்லாரும் என்மேல் பழி போடுவீர்கள் என்று தெரிந்தே, வேலையை விட விருப்பம் இல்லை என்று சொன்னேன். ஆனால், இவர் என்ன சொன்னார் தெரியுமா? நான் வேலையை விட வேண்டும் என்பதற்கான காரணம் நீ தானாம்! இவர்தான் சொன்னார்.”

“என்ன? நான் காரணமா? புரியவில்லையே! நீங்கள் வேலையை விடவேண்டும் என்று நான் எப்போது சொன்னேன்? அப்படிச் சொல்ல எனக்கு என்ன தகுதி இருக்கிறது?”

வின்செண்ட்டே பதில் சொன்னார்:

“திரிபுரசுந்தரி உன்னிடம், நீ படிப்பு முடித்துவிட்டு என்ன செய்யப் போகிறாய் என்று கேட்டாராம்; அதற்கு நீ, திருமணம் செய்துகொண்டு கணவனுக்குச் சோறாக்கிப் போட்டுவிட்டுச் சட்டி, பானை கழுவிக்கொண்டு குழந்தை, குட்டி பெற்றுக்கொண்டு குடித்தனம் செய்யப் போகிறேன் என்றாயாம். உன் அக்காள், ‘இந்தச் சின்ன பெண் தன் முடிவில் எவ்வளவு தெளிவாய் இருக்கிறாள் பாருங்கள்; அதனால், நானும் வேலையை விட்டுவிட்டுச் சட்டிப் பானை கழுவப் போகிறேன்’ என்கிறார்.”

“ஐயையோ, அக்கா! என் பேச்சை நம்பியா அவ்வாறு சொன்னீர்கள்? நான் தங்கவேல் மாமா வேலை செய்யும் அலுவலகத்தில் வேலைக்கு விண்ணப்பித்து இருந்தேன்; வேலையில் சேரும்படி உத்தரவு வந்திருக்கிறது. திங்கட் கிழமை வேலையில் சேரப் போகிறேன்.”

“அடிப் பாவி! துரோகி! எனினும் நல்வாழ்த்துக்கள்!”

திரிபுரசுந்தரி சாரதாவை அணைத்தபடி கலகலவென்று சிரித்தாள்.

“என்ன, சுந்தரி? சொல்லேன். என்னை மாட்டி விட்டுவிட்டு, நீ நமட்டுச் சிரிப்புச் சிரிக்கிறாயே!”




இராச. வேதாந்தம்
திருப்பூர் கிருஷ்ணன்
வித்யா பிரியதர்ஷினி
முத்துலிங்கம்

எழுதிய நூல்கள்

கல்லணை கண்ட காவலன்
கொங்கச் செல்வி
சஞ்சீவினி
சீறிச் சிவந்த சேல்விழி
நற்சோணை
நாமார்க்கும் குடியல்லோம்
திரிபுர சுந்தரி



பொறிஞர்

இராச. வேதாந்தம்